# இஸ்லாம்

## தரம் 9

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

முதலாம் பதிப்பு - 2017
இரண்டாம் பதிப்பு - 2018
மூன்றாம் பதிப்பு - 2019

**எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.**

ISBN 978-955-25-0150-0

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
164 / 4 / அ பஸ்மேகஸ்வெவ வீதி, போவே சந்தி
அத்துருகிரிய பிரின்ட் எக்செல்
வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில்,
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

**ஆனந்த சமரக்கோன்**
கவிதையின் பெயர்ப்பு.



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

**கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி**

கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமுகத்தில் காணப்படும் தொழில் வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான பல்வேறு மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமுகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்காலச் சவால்களை வெற்றிகொள்ளுவதற்கு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை ஒழுங்காகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்த சகோதரர்களின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே அரசினால் இலவசப் பாடநூல்களை உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

உலகில் மிக வேகமாக மாறி வரும் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கு பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதற்கும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதற்கும் ஓர் அரசாக நாம் செயற்படுவது ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளோம் என்பதனாலேயாகும். இலவசக் கல்வியின் உச்ச பயனை அனுபவித்துக்கொண்டு நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன் மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியது அதனாலேயே ஆகும். இதற்காக இந்நூலைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்றமிகவும்கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் என்பனவே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற் கொள்ளவேண்டும். நீங்கள் சமுகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமுகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் மிகவும் கூடிய பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளில் கூட இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

# முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே தரம் 1 முதல் தரம் 11 வரையிலான சகல பாடநூல்களும் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சி யைப் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2019.04.10

கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ.எம் ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

வழிகாட்டல்

**டபிள்யூ.ஏ. நிர்மலா பியசீலி,**
ஆணையாளர் (அபிவிருத்தி),
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

இணைப்பாக்கம்

**அஷ்ஷைக் எம். ரீ. அப்துர் ரஹ்மான்,**
உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

எழுத்தாளர் குழு

அஷ்ஷைக் எம்.எச்.எம். புஹாரி
**ஆசிரிய ஆலோசகர்,**
வலயக் கல்விப் பணிமனை, மினுவங்கொடை.

மௌலவி யூ.எல்.ஏ. அமீர்
**விரிவுரையாளர்,**
அரபு, இஸ்லாமிய நாகரிகப் பிரிவு,
கொழும்பு பல்கலைக்கழகம்.

ஜனாப் எம்.எஸ்.எம். பூஸரி
**சிரேஷ்ட ஆசிரியர்,**
அல் பத்ரியா ம.வி., கஹட்டோவிட்ட.

அஷ்ஷைக் எம்.எம். பஸ்லுர் ரஹ்மான்
**சிரேஷ்ட ஆசிரியர்,**
பாபுஸ் ஸலாம் ம.வி, நாம்புலுவ, பஸ்யால.

அஷ்ஷைக் எம்.ஆர்.எம். மிஹ்ளார்
**சிரேஷ்ட ஆசிரியர்,**
அரபா ம.வி., உடுகொடை, ருக்கஹவில

அஷ்ஷைக் எஸ்.ஏ.எம். ரிஸ்வி
**சிரேஷ்ட ஆசிரியர்,**
அல் ஹிக்மா கல்லூரி, கொழும்பு 12.

ஜனாப் எம்.எப்.எம். நள்ரி
**அதிபர்,**
அல் ஹம்ரா மகா வித்தியாலயம், தர்காநகர்.

அஸீமா ஹுஸைன்
**சிரேஷ்ட ஆசிரியை,**
ரோயல் கல்லூரி, கொழும்பு 07.

மௌலவியா எம்.ஐ.எஸ். ஸுஹாரா
**ஆசிரியை,**
ஹைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
கொழும்பு 09.

## பதிப்பாசிரியர் குழு

| | |
|---|---|
| அஷ்ஷைக் ஏ.ஸீ. அகார் முஹம்மத் | **பிரதிப் பணிப்பாளர்,**<br>நளீமியா இஸ்லாமியக் கலாபீடம், பேருவளை.<br>**பிரதித் தலைவர்,**<br>அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை. |
| அஷ்ஷைக் எம்.எஸ். அப்துல் பாரி | **முதுநிலை விரிவுரையாளர்,**<br>அரபு, இஸ்லாமிய நாகரிகப் பிரிவு,<br>பேராதனை பல்கலைக்கழகம். |
| மௌலவி எம்.ஐ.எம். நவ்பர்தீன் | **உதவிக் கல்விப் பணிப்பாளர்,**<br>முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவு.<br>கல்வி அமைச்சு. |
| அஷ்ஷைக் ஜே.எம். ஐஸார் | **விரிவுரையாளர்,**<br>சமயப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம. |
| அஷ்ஷைக் எம். ரீ. அப்துர் ரஹ்மான் | **உதவிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,**<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

## மொழிப் பதிப்பு

| | |
|---|---|
| அஷ்ஷைக் எம்.ஏ. ஜெம்ஸீத் | **ஆசிரியர்,**<br>அல் ஹிதாயா மகா வித்தியாலயம், கொழும்பு 10. |

## சரவை பார்த்தல்

| | |
|---|---|
| ரிம்ஸா முஹம்மத் | **பிரதம ஆசிரியர்,**<br>பூங்காவனம் சஞ்சிகை, கல்கிசை. |

## கணினி வடிவமைப்பு

| | |
|---|---|
| எச்.எப். ரிஸ்னா | **கணினி வடிவமைப்பாளர்,**<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

## தளக்கோளம், படங்கள், அட்டை வடிவமைப்பு

| | |
|---|---|
| ஜனாப். எம்.டபிள்யூ.ஏ. அஸார் | **கணினி வடிவமைப்பாளர்,**<br>6 F, ரக்ஸபான, மல்வான. |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தவ்ஹீத் - ரிஸாலத் - மஆத் | 1 |
| 2. | அல் அஸ்மாஉல் ஹுஸ்னா | 4 |
| 3. | மறுமை நாள் | 9 |
| 4. | சுவனம் - நரகம் | 13 |
| 5. | அல் - கழாஉ வல் கத்ர் | 17 |
| 6. | ஜனாபத்திலிருந்து சுத்தம் பெறுவோம் | 25 |
| 7. | அல் கஸ்ரு - வல் ஜம்உ | 28 |
| 8. | ஜுமுஆத் தொழுகை | 31 |
| 9. | ஜனாஸாவுக்கான கடமைகள் | 35 |
| 10. | ஸக்காத் | 41 |
| 11. | ஹஜ் கிரியைகளும் முக்கியத்துவமும் | 46 |
| 12. | நேரம் பேணல் | 51 |
| 13. | மஸ்ஜித் | 54 |
| 14. | இஸ்திஃபார் (பாவ மன்னிப்பு) | 59 |
| 15. | அல்குர்ஆன் அருளப்படல் | 63 |
| 16. | அல்குர்ஆன் தொகுக்கப்படல் | 65 |
| 17. | ஸூரதுல் ழுஹா | 69 |
| 18. | ஹதீஸ் துறை இமாம்கள் | 72 |
| 19. | ஹஜ்ஜதுல் விதாஃ | 78 |
| 20. | மஹப்பதுர் ரஸூல் | 81 |
| 21. | நபிமார்கள் இருவர் | 87 |
| 22. | உம்மஹாத்துல் முஃமினீன் | 93 |
| 23. | இரு முஸ்லிம் வீரர்கள் | 99 |
| 24. | சிக்கனமும் சேமிப்பும் | 106 |
| 25. | ஹலால் - ஹராம் பேணல் | 111 |
| 26. | இன நல்லுறவு | 115 |
| 27. | பிற சமயங்களை மதித்தல் | 120 |
| 28. | இலங்கையிலுள்ள ஏனைய சமயங்கள் - 1 | 124 |
| 29. | இலங்கையிலுள்ள ஏனைய சமயங்கள் - 2 | 128 |
| 30. | தேசத்தின்மீது பற்றுக்கொள்ளல் | 133 |
| | பின்னிணைப்பு (அரபுச் சொற்கள்) | 137 |

# முக்கிய குறிப்பு

பாடங்களில் இடம்பெற்றுள்ள அரபுப் பதங்களைப் பிழையின்றி உச்சரித்து வாசிக்கும் பொருட்டு பாட நூலின் இறுதிப் பகுதியில் முக்கிய அரபுச் சொற்கள் அரபு - தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தரப்பட்டுள்ளன.

எனவே ஆசிரியரின் உதவியோடு சரியான அரபு உச்சரிப்புடன் அவற்றை வாசிக்க முயற்சிக்கவும்.

எழுத்தாளர் குழு

# 1
# தவ்ஹீத் – ரிஸாலத் – மஆத்

அல்லாஹ் அனைத்தினதும் படைப்பாளன். தனித்துவமானவன்; ஏகன்; எல்லாவற்றையும் நிர்வகிப்பவன்; சக்தி படைத்தவன்; தேவையற்றவன்; நிகரில்லாதவன்; அனைத்தும் அவனது நாட்டப்படியே நடக்கின்றன. அவன் ஒன்றைப் படைக்க நாடினால் 'குன்' (ஆகுக) என்ற அவனது கட்டளை மாத்திரம் போதுமானது. இத்தகைய வல்லமை நிறைந்த அல்லாஹ்வை உறுதியாக நம்புவதை ஈமான் என்று அழைக்கின்றோம். இந்த நம்பிக்கை ஒருவனின் உள்ளத்தில் ஆழமாகப் பதிவதோடு அதன் வெளிப்பாடாக 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவை மொழிபவனே முஃமின் (விசுவாசி) ஆவான். அவன் அல்லாஹ்வின் கட்டளைகளைத் தன் வாழ்வில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் அவனது ஈமான் பூரணமடையும்.

உண்மையான ஈமான், முஃமினின் வாழ்வில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் அவனை நற்செயலின்பால் தூண்டுவதோடு தீமைகளிலிருந்து விலகி நடக்கவும் துணை புரியும்.

இங்கு நாம் ஈமானின் முக்கிய பகுதிகளான தவ்ஹீத், ரிஸாலத், மஆத் பற்றிச் சிறிது நோக்குவோம்.

## தவ்ஹீத்

**தவ்ஹீத்** என்பதன் பொருள் **ஏகத்துவம்** என்பதாகும்.

- மனிதன், விலங்குகள், கோள்கள் உட்பட பிரபஞ்சம் அனைத்தையும் அல்லாஹ் படைத்துப் பரிபாலிக்கின்றான். ஜீவராசிகளைப் போசிக்கின்றான். வாழ்வையும் மரணத்தையும் அவற்றுக்கு வழங்குகின்றான்.





ஜாஹிலிய்யாக் கால அரபு மக்கள் கூட படைத்துப் பரிபாளிப்பவன் ஒருவனை ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

**''அவர்களிடம் நீங்கள், வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார்? சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தியவன் யார்? என்று கேட்டால், நிச்சயமாக அல்லாஹ்வே என்று கூறுவார்கள்.''** (29: 61)

இந்த விடயங்களில் அல்லாஹ்வுக்கு இணையாக எவரும் எதுவும் கிடையாது என உறுதியாக நம்ப வேண்டும். இதனை ஏற்பதில் வரலாறு நெடுகிலும் மனிதர்கள் பிளவுபட்டுள்ளனர். சிலர் ஏற்றனர்; சிலர் நிராகரித்தனர். ஜாஹிலிய்யாக்கால அரபு மக்கள் இலாஹ் என்பதன் பொருளை நன்கு அறிந்திருந்ததன் காரணமாக அதனைக் கடுமையாகவே எதிர்த்தனர்;இதன்மூலம் தமது அதிகாரமும் செல்வாக்கும் இழக்கப்பட்டுவிடுமோ என அஞ்சினர். மனோ இச்சைப்படி வாழ முடியாமல் போகும் என நினைத்துக் கதிகலங்கினர்.

அல்லாஹ்வை 'ரப்' ஆகவும் 'இலாஹ்' ஆகவும் ஏற்றுக்கொண்ட மனிதன் அல்லாஹ்வின் பண்புகளையும் அவனுக்கான அழகுத் திருநாமங்களையும் அவன் கூறியுள்ளவாறு ஏற்று நம்ப வேண்டும். அவை அல்லாஹ்வுக்கே உரிய தனித்துவமானவை என ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## ரிஸாலத்

தவ்ஹீதுக்கு அடுத்து ஈமானின் முக்கிய அம்சங்களில் ஒன்றுதான் 'ரிஸாலத்' மீதான நம்பிக்கையாகும். **ரிஸாலத்** என்பது **தூதுத்துவத்தைக்** குறிக்கும். உலகில் அல்லாஹ் தனது பிரதிநிதியாக மனிதனைப் படைத்தான். அவன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற நேர்வழிகாட்டல்களை வழங்கினான். அந்த வழிகாட்டல்களை வழங்க மனிதர்களில் விசேடமான பலரைத் தெரிவுசெய்தான். அவர்களே நபிமார்களும் ரஸூல்மார்களும் ஆவர்.

அவர்கள் வஹி மூலம் தமக்கு அருளப்பட்ட வேதங்களையும் ஸுஹுபுகளையும் கொண்டு தங்களது சமூகங்களை நல்வழிப்படுத்தினார்கள். நபிமார்களில் சிரேஷ்ட மானவர்கள் ரஸூல்மார்கள் ஆவர். நபிமார்களிலும் ரஸூல்மார்களிலும் இறுதியானவரே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆவார். இதனால் இவர் 'காத்தமுன் நபிய்யீன்' (நபிமார்களில் இறுதியானவர்) எனவும் அழைக்கப்படுகின்றார். இவற்றை உறுதியாக நம்புவதே ரிஸாலத் மீதான நம்பிக்கையாகும்.

## மஆத்

ஈமானின் அடுத்த முக்கிய பகுதி 'மஆத்' பற்றிய நம்பிக்கையாகும். **மரணத்தின் பின்னர் உள்ள வாழ்க்கையே மஆத் எனப்படுகின்றது.** இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின்படி வாழ்க்கை மரணத்தோடு முற்றுப் பெறுவதில்லை. நிரந்தரமான, நித்தியமான வாழ்க்கை மறுமை வாழ்க்கையாகும். உலகில் வாழும்போது மனிதன் செய்த ஒவ்வொரு செயற்பாடுகள் குறித்தும் மறுமையில் விசாரிக்கப்படுவான். விசாரணையின் முடிவுகளுக்கு ஏற்ப வெகுமதியோ தண்டனையோ அங்கு வழங்கப்படும். உலக வாழ்வில் இறை கட்டளைகளின் பிரகாரம் வாழ்ந்த நல்லோருக்கு சுவனம் வழங்கப்படும். இறை கட்டளைகள், சட்டங்களைப் புறக்கணித்து வாழ்ந்த தீயவர்களுக்கு நரகம் வழங்கப்படும். இதுவே மஆத் - மறுமை நம்பிக்கையின் சாராம்சமாகும்.

***இவ்வாறாக தவ்ஹீத், ரிஸாலத், மஆத் ஆகிய ஈமானின் முப்பெரும் பகுதிகளையும் அதனுடன் தொடர்பான ஏனைய பகுதிகளையும் உறுதியாக நம்பி எமது ஈமானைப் பூரணப்படுத்திக் கொள்வோம்.***

### பயிற்சி

சுருக்கமான விடை தருக.

1. 'விசுவாசி' என்ற சொல் அரபு மொழியில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
2. தவ்ஹீத் என்பதன் பொருள் யாது?
3. ரப் என்பதன் பொருள் யாது?
4. நபிமார்களில் சிரேஷ்டமானவர்கள் யாவர்?
5. மஆத் என்பது யாது?
6. இலாஹ் என்ற பதத்தின் கருத்து யாது?

# 2

# அல் அஸ்மாஉல் ஹுஸ்னா

*ஈமானில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையே முதன்மையானது. அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதற்கு அவனைப் பற்றி அறிதல் வேண்டும். அல்லாஹ் பற்றி மிகச் சரியாக அறிந்து கொள்வதற்கு அவனது திருநாமங்களும் (அஸ்மாஉல் ஹுஸ்னா) அவனது பண்புகளும் (ஸிபாத்) துணைபுரிகின்றன.*

*அல்லாஹ்வுக்கு அழகுத் திருநாமங்கள் உள்ளன என்பதை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:*

''அல்லாஹ் அவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு நாயன் இல்லை. அவனுக்கு அழகான திருநாமங்கள் இருக்கின்றன.'' (20: 8)

''நபியே நீர் கூறுவீராக, நீங்கள் அல்லாஹ் என்றழையுங்கள். அல்லது அர்ரஹ்மான் என்றழையுங்கள் (இவ்விரண்டில்) எப்பெயர்கொண்டு நீங்கள் அழைத்தபோதிலும் அவனுக்கு இன்னும் பல அழகான திருநாமங்கள் உள்ளன.'' (17: 110)

''அந்த அல்லாஹ்தான் படைப்பவன். (அவனே) படைப்புகளை ஒழுங்கு செய்பவன். (அவனே) படைப்புகளின் உருவத்தையும் அமைப்பவன். அவனுக்கு அழகான பல திருநாமங்கள் இருக்கின்றன. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அவனையே துதி செய்கின்றன. அவனே (அனைவரையும்) படைத்தவன். ஞானமுடையவன்.'' (59: 24)

*அல்லாஹ்வுக்குரிய அஸ்மாஉல் ஹுஸ்னாக்களின் எண்ணிக்கை பற்றி ஹதீஸில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:*

*''அல்லாஹ்வுக்கு 99 அழகுத் திருநாமங்கள் உள்ளன. இவற்றை யார் மனனமிடு கின்றாரோ அவர் சுவனத்தில் நுழைவார்'' (புஹாரி)*

*அஸ்மாஉல் ஹுஸ்னாக்களை மனனமிடுவது மாத்திரமன்றி அவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத்தந்தபடி நடைமுறை வாழ்வில் பின்பற்றி ஒழுகவும் வேண்டும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது நாளாந்த வாழ்வில் துஆக்களிலும் திக்ர்களிலும் அல்லாஹ்வின் திருநாமங்களை அதிகமதிகம் சேர்த்துக்கொண்டுள்ளார்கள்.*

*''இறைவா உனது திருப்பெயரால் நான் தூங்கச் செல்கிறேன். உனது திருப்பெயரால் தான் நான் உயிர் வாழ்கிறேன்.'' (முஸ்லிம்) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உறங்கத் தயாரானபோது பிரார்த்தித்துள்ளார்கள்.*

*அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் 99 உம் திர்மிதி என்ற ஹதீஸ் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இனி அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களை நோக்குவோம்.*



بسم الله الرحمن الرحيم
هو الله
الذي لا إله
إلا هو
الرحمن
الرحيم
الملك
القدوس
السلام
المؤمن
المهيمن
العزيز
الجبار
المتكبر
الخالق
البارئ
المصور
الغفار
القهار
الوهاب
الرزاق
الفتاح
العليم
القابض
الباسط
الخافض
الرافع
المعز
المذل
السميع
البصير
الحكم
العدل
اللطيف
الخبير
الحليم
العظيم
الغفور
الشكور
العلي
الكبير
الحفيظ
المقيت
الحسيب
الجليل
الكريم
الرقيب
المجيب
الواسع


الحكيم جل جلاله
الودود جل جلاله
المجيد جل جلاله
الباعث جل جلاله
الشهيد جل جلاله
الحق جل جلاله
الوكيل جل جلاله
القوى جل جلاله
المتين جل جلاله
الولى جل جلاله
الحميد جل جلاله
المحصى جل جلاله
المبدئ جل جلاله
المعيد جل جلاله
المحيى جل جلاله
المميت جل جلاله
الحى جل جلاله
القيوم جل جلاله
الواجد جل جلاله
الماجد جل جلاله
الواحد جل جلاله
الاحد جل جلاله
الصمد جل جلاله
القادر جل جلاله
المقتدر جل جلاله
المقدم جل جلاله
المؤخر جل جلاله
الاول جل جلاله
الآخر جل جلاله
الظاهر جل جلاله
الباطن جل جلاله
الوالى جل جلاله
المتعال جل جلاله
البر جل جلاله
التواب جل جلاله
المنتقم جل جلاله
العفو جل جلاله
الرؤف جل جلاله
مالك الملك جل جلاله
ذو الجلال والإكرام جل جلاله
المقسط جل جلاله
الجامع جل جلاله
الغنى جل جلاله
المغنى جل جلاله
المانع جل جلاله
الضار جل جلاله
النافع جل جلاله
النور جل جلاله
الهادى جل جلاله
البديع جل جلاله
الباقى جل جلاله
الوارث جل جلاله
الرشيد جل جلاله
الصبور جل جلاله

*இந்த தொன்னூற்றொன்பது திருநாமங்களும் அல்லாஹ் என்ற தனித்துவமான திருநாமத்தின் பண்புகளாகவே கூறப்பட்டுள்ளன. ஆகவேதான் அல்லாஹ் என்ற திருநாமம் 'லப்ளுள் ஜலாலாஹ்' என அழைக்கப்படுகின்றது.*

*அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் ஊடாக அல்லாஹ்வின் அறிவு, ஆற்றல், அதிகாரம், உயர் குணங்கள் மற்றும் வல்லமை போன்ற அனைத்திலும் அவன் ஒப்பற்றவன் என்பது தெளிவாகின்றது. யாரையும் அவனுக்கு இணையாக்க முடியாது என்பது முஃமினின் உள்ளத்தில் ஆழமாகப் பதிதல் வேண்டும். அவ்வாறு அல்லாஹ்வின் படைப்புகளை அவன் பண்புகளுக்கு நிகராக்கினால் அது ஷிர்க் ஆக அமைந்துவிடும்.*

*அகீதாத்துறை அறிஞர்கள் அஸ்மாஉல் ஹுஸ்னாக்களை அவற்றுக்கான பொருளை அடிப்படையாகக்கொண்டு பின்வருமாறு வகைப்படுத்துவர். அவற்றுள் சில வருமாறு:*

1. *அல்லாஹ்வின் படைப்பாற்றலுடன் தொடர்பானவை*
2. *அல்லாஹ்வின் அன்புடன் தொடர்பானவை*
3. *அல்லாஹ்வின் வல்லமை, சக்தியுடன் தொடர்பானவை*
4. *அல்லாஹ்வின் அறிவுடன் தொடர்பானவை*

'அல்லாஹ்வுக்கு மிக்க அழகிய பெயர்கள் இருக்கின்றன. ஆகவே அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை (உதவி தேடி) அழையுங்கள். அவனுடைய திருப் பெயர்களில் தவறிழைப்பவர்களை நீங்கள் விட்டுவிடுங்கள். இவர்கள் தங்கள் செயலுக்குத்தக்க கூலியை விரைவில் அடைவார்கள்.'' (7: 180)

*அஸ்மாஉல் ஹுஸ்னாவில் வரும் அல்லாஹ்வின் பண்புகளுடன் ஒப்பிடுகையில் அவனால் படைக்கப்பட்ட மனிதன் மிகவும் பலவீனமானவன் என்பது புலனாகின்றது. இதனால் மனிதன் தனது வாழ்க்கையில் துன்பங்கள் ஏற்படும்போது அவன் வல்லமை படைத்த அல்லாஹ்வை நாட வேண்டியுள்ளான். அவனிடம் உதவியும் பாதுகாப்பும் தேட வேண்டியவனாகவுள்ளான். இத்தகைய சந்தர்ப்பங்களில் முஃமின்கள் தமது துஆக்களில் அஸ்மாஉல் ஹுஸ்னாக்களைப் பயன்படுத்துவது சாலச் சிறந்ததாகும்.*

அஸ்மாஉல் ஹுஸ்னாக்களின் ஊடாக அல்லாஹ்வின் மகத்துவத்தை அறிந்து ஈமானைப் பரிபூரணப்படுத்திக் கொள்வோம். மேலும், அவற்றை மனனமிட்டு தினமும் பொருளறிந்து மொழிவதன் மூலம் அவனை நெருங்கவும் முயற்சி செய்வோம்.

**பயிற்சி**

*(அ) சரி பிழை கூறுக.*

1. *அஸ்மாஉல் ஹுஸ்னா என்றால் அல்லாஹ்வின் செயற்பாடுகள் என்பது பொருளாகும்.* ( )
2. *அல்லாஹ்வுக்கு 99 அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் உள்ளன.* ( )
3. *அஸ்மாஉல் ஹுஸ்னாவில் வரும் அல்லாஹ் என்ற திருநாமம் தனித்துவமானதாகும்.* ( )
4. *மனிதர்கள் தாங்கள் விரும்பியவாறு பிழையான பெயர்களாலும் அல்லாஹ்வை அழைக்கலாம்.* ( )
5. *'அர்ரஹ்மான்' என்பது அல்லாஹ்வின் அறிவுடன் தொடர்பான பண்பைக் காட்டும்.* ( )

*(ஆ) சுருக்கமான விடை தருக.*

1. *அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் மூலமே அல்லாஹ்வை அழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஓர் அல்குர்ஆன் வசனத்தைத் தருக.*
2. *'லப்ளுள் ஜலாலாஹ்' என அழைக்கப்படும் அழகுத் திருநாமம் எது?*
3. *அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் 99ஐயும் குறிப்பிட்டு வந்துள்ள ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ள கிரந்தம் எது?*
4. *அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் பத்தை அரபியில் எழுதி, அவற்றின் பொருளையும் எழுதிக் காட்டுக.*
5. *ஸூரா பாத்திஹாவில் இடம்பெறும் அன்புடன் தொடர்பான அல்லாஹ்வின் இரு அஸ்மாஉல் ஹுஸ்னாக்களும் எவை?*



# 3
# மறுமை நாள்




இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டில் ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்களுள் மறுமை நாளும் ஒன்றாகும். அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் மறுமை நாள் மீதான நம்பிக்கை வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

இறை நம்பிக்கையானது, வாழ்க்கை எவ்வாறு ஆரம்பமானது என்பது பற்றிய திட்டவட்டமான அறிவை மனிதனுக்கு வழங்குகிறது. மறுமை நம்பிக்கையானது வாழ்க்கையின் முடிவு பற்றிய தீர்க்கமான அறிவை வழங்குகிறது.

வாழ்வின் ஆரம்பம் - முடிவு பற்றிய திட்டவட்டமான உண்மையைத் தெரிந்துகொள்வதன் மூலமே வாழ்க்கைக்கான நோக்கத்தை வகுத்துக்கொள்ள முடியும்.

மறுமை நம்பிக்கை இல்லாத ஒருவன் உலகில் மனம்போன போக்கில் வாழ முற்படுவான். மார்க்கப் போதனைகளையும் ஒழுக்கப் பண்புகளையும் புறக்கணிப்பான். அவனது வாழ்க்கை மிருக வாழ்க்கை போன்று அமைந்துவிடும். இதனால் அவன் தனது மனிதத்துவத்தை இழந்து விடுவான்.

இந்நிலையில் பொய், சுயநலம், துரோகமிழைத்தல், வாக்கு மீறுதல், குறுக்கு வழிகள் மூலம் இலாபமீட்டல், தற்கொலை, கொலை முதலான தீய செயல்கள் மக்கள் மத்தியில் அதிகரித்துவிடும்.

மேலும் சத்தியம், நீதி, நியாயம், தர்மம், வாக்குறுதி காத்தல், பொது நலன் பேணல் போன்ற உயர் பண்புகள் மனித குலத்திற்கு மத்தியில் உதாசீனப்படுத்தப்படும்.

மறுமை நம்பிக்கை இல்லாதபோது அல்லாஹ் மனிதனுக்கு எனப் பிரத்தியேகமாக வழங்கியுள்ள தனித்துவங்களும் அர்த்தமற்றதாகிவிடும்.

அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் இறை நம்பிக்கையோடு இணைத்து மறுமை நம்பிக்கை வலியுறுத்தப்பட்டிருப்பது அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. அல்குர்ஆனில் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட பெயர்களில் மறுமை சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது. யவ்முல் பஃஸ், யவ்முல் ஹிஸாப், யவ்முல் கியாமா, யவ்முல் ஆகிரா, யவ்முத் தீன், யவ்முத் தஆபுன் போன்றன அவற்றில் சிலவாகும்.

மனிதன் இவ்வுலகில் செய்யும் செயல்களுக்கான கூலி மறுமையில் வழங்கப்படும். ஈமான் கொண்டு தூய உள்ளத்தோடு நற்செயல்கள் செய்கின்றவர்கள் மறுமையில் வெற்றி பெற்று சுவனத்தை வெகுமகுதியாகப் பெறுவர். நிராகரிப்பிலும் பாவச் செயல் களிலும் மூழ்கியவர்கள் நரகில் நுழைவர். மறுமையில் வெற்றியடைந்து சுவனத்தை அடைவதே முஸ்லிமின் நோக்கமாகவும், அதற்காகச் செயற்படுவதே அவனது பணியாகவும் அமைதல் வேண்டும்.

மறுமை நம்பிக்கையுடன் தொடர்பான நிகழ்வுகள் சிலவற்றைச் சுருக்கமாக நோக்குவோம்.

## பஃஸ் (மீண்டும் எழுப்பப்படுதல்)

அல்லாஹ்வின் கட்டளைப்படி இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதன்முறையாக ஸூர் ஊத, மறுமை நாளின் நிகழ்வுகள் ஆரம்பமாகும். அப்பொழுது பூமி மற்றும் கோள்களின் ஒழுங்கமைப்பு சிதைந்துவிடும். மனிதர்கள் உட்பட ஜீவராசிகள் அனைத்தும் மரணித்துவிடும்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இரண்டாவது ஸூர் ஊதப்படும். அப்பொழுது மரணித்த அனைவரும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவர். இதனையே ***பஃஸ்*** என்பர்.

## மஹ்ஷர்

***மஹ்ஷர்*** எனப்படுவது ஒரு திறந்தவெளியாகும். இரண்டாம் ஸூருடன் எழுப்பப்படும் அனைவரும் இங்கேயே ஒன்றுகூடுவர். இங்கு தலைக்கு மேலால் மிக அண்மித்திருக்கும் சூரிய வெப்பத்தின் அகோரம் காரணமாக மக்கள் மிகவும் வேதனைப்படுவர். வியர்வை வெள்ளமாக நிரம்பியிருக்கும். அர்ஷின் நிழலைத் தவிர அங்கு எந்த நிழலும் இருக்காது. மக்கள் வேதனை தாங்காது தங்களுக்காக மன்றாடும்படி ஒவ்வொரு நபியிடமும் சென்று முறையிடுவர். ஒவ்வொருவரும் அடுத்த நபியிடம் சென்று முறையிடுமாறு ஆலோசனை கூறுவர். இறுதியாக மக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று வேதனையின் அகோரத்தைத் தாங்க முடியாது மறுமை விசாரணையைத் துரிதப்படுத்துமாறு அல்லாஹ்விடம் மன்றாடும்படி வேண்டுவர். அவர்களும் அல்லாஹ்விடம் மன்றாடி அணுவளவேனும் உள்ளத்தில் ஈமான் உள்ளவர்களுக்கு ஷபாஅத்தைப் பெற்றுக்கொடுப்பார்கள். இதனையே ***'ஷபாஅத்துல் குப்ரா' (பெரிய மன்றாட்டம்)*** என அழைப்பர்.

## ஹிஸாப்

இது விசாரணையைக் குறிக்கிறது. ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரிக்குமாறு அல்லாஹ் கட்டளை பிறப்பிப்பான். தான் செய்த குற்றங்களை மறுத்து எவருக்கும் அங்கு தப்பித்துக்கொள்ள முடியாது.

மனிதன் வாழ்ந்த பூமியும் அவனது உடல் உறுப்புக்களும் அவன் செய்த செயல்கள் குறித்து சாட்சி கூறும். மேலும் உலகில் அவர்கள் செய்த செயல்கள் பதிவு செய்யப்பட்ட பட்டோலைகள் (பதிவேடு) அவரவர் கைகளில் வழங்கப்படும். நல்லடியார்களின் பட்டோலைகள் அவர்களது வலக் கரங்களில் கொடுக்கப்படும். அவர்கள் அவற்றை எடுத்துக்கொண்டு மற்றவர்களிடம் காட்டுவதற்கு மகிழ்ச்சியோடு ஓடுவார்கள்.

பாவிகளின் பட்டோலைகளோ அவர்களது இடக்கரங்களில் கொடுக்கப்படும். அவற்றைப் பெற்றுக்கொண்ட அவர்கள் கைசேதப்பட்டு அழுவார்கள்.

தொடர்ந்து **மீஸான்** எனும் தராசில் ஒவ்வொருவரதும் செயல்கள் நிறுக்கப்படும். அந்தத் தராசு அணுவளவிலான செயல்களையும் துல்லியமாகக் காட்டக்கூடியதாகும்.

## ஹவ்லுல் கவ்ஸர்

விசாரணைகளின் முடிவுகளை அடுத்து ஒவ்வொரு நபிமாரும் தமது உம்மத்தினருடன் அவரவர்களுக்குரிய தடாகத்தை நோக்கி வந்து நீர் அருந்துவர். இவற்றுள் மிகவும் பாக்கியம் நிறைந்த தடாகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழங்கப்படும் **ஹவ்லுல் கவ்ஸர்** எனும் தடாகமாகும். அதன் நீர் பாலைவிட வெண்மையானது; தேனைவிட இனிமையானது; கஸ்தூரியைவிட சுகந்தமானது; அதிலிருந்து அருந்தியவர்களுக்கு என்றுமே தாகம் வராது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றி வாழ்ந்த நல்லடியார்கள் அனைவருக்கும் இதிலிருந்து நீர் அருந்தும் பாக்கியம் கிடைக்கும்.

## ஸிராத்

அடுத்த கட்டமாக நரகத்தின் மேலால் உள்ள **ஸிராத்** எனும் பாலத்தைக் கடக்கும் நிகழ்வு இடம்பெறும். மக்கள் தாம் செய்த நன்மைகளுக்கு ஏற்ப வித்தியாசமான வேகத்தில் அதனைக் கடந்து செல்ல முயல்வர். இறை நிராகரிப்பாளர்களும் பாவிகளும் அதைக் கடக்க முடியாது நரகில் விழுவர்.

***எனவே மறுமை பற்றிய நம்பிக்கையை எமது உள்ளத்தில் ஆழமாகப் பதித்து எமது வாழ்வைச் சீரமைத்துக்கொள்வோம். சுவனத்தை வெகுமதியாகப் பெறுவோம்.***

**பயிற்சி**

*சுருக்கமான விடை தருக.*

1. *மஹ்ஷர் எனப்படுவது யாது?*
2. *ஸூர் ஊதும் மலக்கின் பெயர் யாது?*
3. *உலக வாழ்வின் நோக்கத்தை வகுத்துக்கொள்ள உதவும் காரணிகள் எவை?*
4. *முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மன்றாட்டம் அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?*

**செயற்பாடு**

*(அ) அல்குர்ஆன் மறுமையைச் சுட்டப் பயன்படுத்தும் சொற்றொடர்கள் ஐந்தைக் குறிப்பிடுக.*

*(ஆ) மறுமை நிகழ்வின் கட்டங்களை வகைப்படுத்தி அதனுடன் தொடர்பான அல்குர்ஆன் வசனங்கள் மற்றும் ஹதீஸ்களைத் தேடி எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.*

# 4

# சுவனம் – நரகம்




மனிதர்கள் இவ்வுலகில் பல்வேறு விதமாக வாழ்ந்துவிட்டுச் செல்கின்றார்கள். ஒரு சாரார் நற்பண்புகளை அணிகலனாகக் கொண்டவர்கள். அவர்கள் ஈமான், சத்தியம், உண்மை, நேர்மை, தயாளம், தியாகம் போன்ற நற்குணங்களோடு வாழும் நல்லவர்கள். மற்றொரு சாரார் குப்ர், பொய், அசத்தியம், கொலை, கொள்ளை, துரோகம், வாக்கு மீறுதல், ஏமாற்றுதல், மோசடி செய்தல் போன்ற கொடிய பாவங்களைப் புரியும் தீயவர்கள்.

நல்லவர்கள் - தீயவர்கள் இரு சாராருக்கும் மரணம்தான் வாழ்வின் முற்றுப்புள்ளி என அமைவது நியாயமானதா? அது வாழ்க்கைக்கான அர்த்தத்தைப் புலப்படுத்துமா? அப்படியாயின் இவ்வுலகில் நன்மை செய்து வாழ்ந்தவர்களுக்குரிய வெகுமதிதான் என்ன? பாவ காரியங்கள் செய்து பிறருக்கு துன்பம் இழைத்து வாழ்ந்தவர்களுக்குத் தண்டனைகள் இல்லையா? தண்டனை வழங்குவதாயினும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நியாயமான முறையில் வழங்க முடியுமா? ஒரு கொலை செய்தவனுக்கும் பல கொலைகள் செய்தவனுக்கும் உலகில் கொடுக்க முடியுமான உயர்ந்தபட்சத் தண்டனை மரண தண்டனையாகும். இது நியாயமானதா? இல்லவே இல்லை. அப்படியாயின் நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் அவரவரது செயற்பாடுகளுக்கு ஏற்ப கூலி வழங்க வேண்டும் என்பது நியாயம் அல்லவா? இவ்வாறு கூலி வழங்கும் நாளையே முஃமின்களாகிய நாம் மறுமைநாள் என விசுவாசிக்கின்றோம்.

மறுமை நாளில் பல நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அதனை நாம் முந்திய பாடத்தில் கற்றோம். மறுமை நாளில் இறுதியாக இடம்பெறும் நிகழ்வே நல்லவர்கள் சுவனத்தில் நுழைவதும் பாவிகள் நரகில் வீழ்வதுமாகும். இனி நாம் சுவனம், நரகம் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

## சுவனம்

சுவனத்திற்கு ஜன்னதுல் பிர்தவ்ஸ், ஜன்னதுல் மஃவா, ஜன்னதுல் அத்ன், தாருல் ஹுலூத், தாருஸ் ஸலாம், தாருல் முகாமா, ஜன்னதுன் நஈம் எனப் பல பெயர்கள் உண்டு.

சுவனம் மிகவும் உன்னதமான இடமாகும். சுவனத்தில் பல தரங்கள் உண்டு. அதில் மிக உயர்ந்தது பிர்தவ்ஸ் என்பதாகும். இதில் நபிமார்கள், ஸித்தீக்கீன்கள் மற்றும் ஷுஹதாக்கள் போன்ற உத்தமர்கள் இருப்பர். மாட மாளிகைகளில் சுவனவாசிகள் இருப்பர். அவர்கள் விதவிதமான பழங்களையும் பறவைகளின் மாமிசங்களையும் புசித்துக் கொண்டிருப்பர். அந்த மாளிகைகளின் கீழால் பால், தேன், மது என்பவற்றால் வெவ்வேறாக உருவான நதிகள் சலசல என ஓடிக்கொண்டிருக்கும். கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் இந்த ரம்மியமான காட்சியை சித்தரிப்பதைப் பாருங்கள்.

**''(நபியே) எவர்கள் (இவ்வேதத்தை) நம்பிக்கை கொண்டு (அதில் கூறப்பட்டுள்ளபடி) நற்செயல்களைச் செய்கின்றார்களோ அவர்களுக்கு (சுவனத்தில்) நிச்சயமாக சோலைகள் உண்டு என நீங்கள் நற்செய்தி கூறுங்கள். அவற்றில் நீரருவிகள் (தொடர்ந்து) ஓடிக்கொண்டேயிருக்கும். அவற்றிலிருந்து (அவர்களுக்கு) ஒரு கனி புசிக்கக் கொடுக்கப்படும் போதெல்லாம் முன்னர் நமக்கு கொடுக்கப்பட்டதும் இதுதானே! என (ஆச்சரியப்பட்டு)க் கூறுவார்கள். (ஏனென்றால்) பார்வைக்கு ஒரே விதமாகத் தோன்றக் கூடியவைகளையே கொடுக்கப் பெறுவார்கள். (எனினும் அவை சுவையில் விதவிதமாக இருக்கும்) பரிசுத்தமான மனைவிகளும் அங்கு அவர்களுக்குக் கிடைப்பார்கள். அன்றி அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள்.'' (2: 25)**

சுவனவாசிகளின் ஆடை, அலங்காரம் பற்றிப் பின்வரும் அல்குர்ஆன் வசனம் விளக்குகிறது. **''சுவனத்தில் தங்கி இருக்கும் அவர்களுக்கு தங்கத்தினாலும் முத்துக்களாலும் ஆன ஆபரணங்கள் அணிவிக்கப்படும். அங்கே அவர்கள் பட்டினால் ஆன ஆடை அணிந்திருப்பார்கள்.'' (22: 23)**

நல்லடியார்களும் நல்வழியில் வாழ்ந்த அவர்களது துணைவியர், பிள்ளைகளும் சுவனத்தின் நந்தவன நிழல்களில் சாய்மானங்களில் ஒய்யாரமாக அமர்ந்து குதூகலிப்பர். சுவனத்தில் எங்கும் எந்தவொரு தீய வார்த்தையோ, பாவமான பேச்சோ கேட்பதற்கு இருக்காது. சுவனவாசிகளின் அனைவரது உள்ளங்களிலிருந்தும் குரோதம் நீக்கப்பட்டிருக்கும். இதனால் அனைவரும் முகமலர்ச்சியுடன் பரஸ்பரம் ஸலாம் கூறி ஒருவரையொருவர் நேசத்துடன் ஆரத்தழுவி வரவேற்பார்கள். சுவனத்தில் முத்துக்கள், மரகதங்கள், பவளங்கள் பளிச்சென மின்னும். அங்கு சுவர்க்கவாசிகளுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய இன்பம் பூரண நிலவைப் போன்று அல்லாஹ்வைத் தங்களது கண்களால் காண்பதாகும்.

## நரகம்

*நரகத்திற்கு நார், ஸஈர், ஜஹீம், ஜஹன்னம், லழா, ஹாவியா, ஸகர், ஹுதமா, வைல் எனப் பல பெயர்கள் உண்டு. நரகம் பாரிய தீக்கிடங்காகும். அது பற்றிக் கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் விளக்குகிறது.*

''விசுவாசிகளே நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பைவிட்டும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதன் எரிபொருட்கள் மனிதர்களும் கற்களுமாகும். அதில் கடின சித்தமுடைய பலசாலிகளான மலக்குகள் உள்ளனர். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அவர்கள் மாறுசெய்யமாட்டார்கள். அவன் ஏவியவற்றை அவர்கள் நிறைவேற்றுவார்கள்.'' (66: 6)

''அவர்கள் (தண்ணீர் கேட்டு) அபயமிட்டால் காய்ந்து உருகிய செம்பைப் போலுள்ள நீரே அவர்களுக்குக் கொடுக்கப்படும். (அவர் அதனைக் குடிப்பதற்கு முன்னதாகவே) அது அவர்களுடைய முகத்தைச் சுட்டுக் கருக்கிவிடும்.'' (18: 29)

''கொதிக்கும் நீருடன் அவர்களின் உடல்கள் நெருப்பால் சுடப்பட்டதால் வழியும் சீழையும் சேர்த்தே நரகவாசிகள் அருந்துவார்கள்.'' (78: 24-25)

*அல்லாஹ்வை நிராகரிக்கும் காபிர்களுக்கு நெருப்பினாலான ஆடைகள் முன்னரே தயார்படுத்தி வைக்கப்பட்டிருக்கும். நரகிற்குச் சென்றதும் அவை அவர்களுக்கு பலவந்தமாக அணிவிக்கப்படும். அவர்களின் தலைகளின் மேலால் தகதகவெனக் கொதிக்கும் நீர் ஊற்றப்படும். அதனால் அவர்களது தோல்களும் வயிற்றுக் குடல்களும் உருகி வெடிக்கும். பலமான இரும்புச் சம்மட்டிகளால் அடிக்கப்படும்போது அவர்கள், வேதனை தாங்க முடியாமல் நரகக் கிடங்கிலிருந்து வெளியேறிச் செல்ல முயற்சிப்பார்கள். ஆனால் அவர்கள் மீண்டும் அந்தக் கிடங்கிலேயே தள்ளப்படுவார்கள். 'உங்களுக்கான சுட்டெரிக்கும் வேதனையை இன்னுமின்னும் அனுபவியுங்கள்' என்று அவர்களுக்கு நரகக் காவலர்களால் கூறப்படும்.*

*நரகவாசிகளுக்கு மரணமே கிடையாது. அவர்களுக்கு எப்பொழுதும் நிம்மதி இருக்காது. அவர்களுக்கு 'ஸக்கூம்' எனும் உணவு திணிக்கப்படும். அது கசப்பான துர்வாடை வீசும் ஒருவகைத் தாவரமாகும். நரகவாசிகளின் தோல்கள் நெருப்பினால் எரிந்துவிட, மீண்டும் மீண்டும் புதிய தோல்கள் அவர்களுக்கு மாற்றப்படும்.*

*பாவங்களின் தராதரத்திற்கு ஏற்ப நரகில் தண்டனைகளின் அளவும் வேறுபடும். காபிர்கள் நரகில் நிரந்தரமாக இருப்பர். முஃமின்களில் பெரும் பாவம் செய்தோர் பாவத்தின் அளவுக்கேற்ப தண்டிக்கப்படுவர். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஷபாஅத்தினால் அவர்கள் நரக விடுதலை பெறுவர்.*

எனவே நாம்

- ★ ***அல்லாஹ்வை ஈமான் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டித்தந்த வாழ்க்கை முறையைப் பின்பற்றுவோம்.***
- ★ ***நல்ல மனிதர்களாக வாழ்ந்து சமூகத்துக்கும் நாட்டுக்கும் சேவை செய்து ஜன்னத்துல் பிர்தவ்ஸ் எனும் சுவனத்தை அடைய முயற்சிப்போம்.***
- ★ ***நரகிற்கு இட்டுச் செல்லும் பாவ காரியங்களிலிருந்து விலகி நடந்து அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்.***

### பயிற்சி

*சுருக்கமான விடை தருக.*

1. *சுவனத்திற்குரிய பெயர்கள் நான்கைக் குறிப்பிடுக.*
2. *மிகவும் உயர்ந்த சுவர்க்கம் எது?*
3. *நரகத்திற்குரிய பெயர்கள் நான்கைக் குறிப்பிடுக.*
4. *நரகவாசிகள் சாப்பிடும் உணவின் பெயர் யாது?*
5. *நரகவாசிகளின் குடிபானமாக எவை இருக்கும்?*
6. *சுவனம் செல்வதற்குத் தடையாக அமையும் சமூகவிரோத செயற்பாடுகள் ஐந்தை அட்டவணைப்படுத்துக.*

### செயற்பாடு

*சுவன இன்பத்தை எடுத்துக்காட்டும் ஐந்து அல்குர்ஆன் வசனங்களையும் அவற்றின் பொருளையும் தேடி எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.*

# 5

# அல்-கழாஉ வல் - கத்ர்

வகுப்புக்கு வருகை தந்த ஆசிரியர், மாணவர்களைப் பார்த்து, 'ஏன் இன்று வழமைக்கு மாற்றமாக அமைதியாக இருக்கின்றீர்கள்?' என வினவினார். அதற்கு மாணவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்களே தவிர எவரும் வாய் திறக்கவில்லை. ஆசிரியர் மீண்டும் மீண்டும் கேட்டபோதும் அங்கு அமைதியே நிலவியது. இறுதியாக ஆசிரியர் ஸிராஜுதீன் என்ற மாணவனை விளித்து என்ன காரணம் என்று வினவினார்.

*ஸிராஜுதீன்:* எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள் ஸேர். இன்று பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரவுள்ளன. எமது பெறுபேறுகள் எப்படி இருக்குமோ என யோசித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு நிலையான மனநிலையில் நாங்கள் இல்லை.

*ஆசிரியர்:* இதுவா பிரச்சினை? அல்லாஹ்வின் நாட்டப்படி அனைத்தும் நடக்கும். நீங்கள் கரிசனையோடு படித்தீர்கள். பரீட்சையும் எழுதினீர்கள். வெற்றி - தோல்வியை அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டினீர்கள். சளைக்காமல் அல்லாஹ் தரும் முடிவை ஏற்றுக்கொள்வதுதான் முஃமினின் பண்பாகும்.



ஜமலூன்: அது எப்படி ஸேர்? பரீட்சை எழுதியவர்கள் நாங்கள். எமக்குக் கிடைக்கும் பெறுபேறுகளுடன் எவ்வாறு அல்லாஹ்வைச் சம்பந்தப்படுத்திக்கொள்வது?

ஆசிரியர்: சற்று அமைதியாக இருங்கள். இது ஒரு நல்ல சந்தர்ப்பம். எமது நம்பிக்கைக் கோட்பாட்டில் நாம் ஈமான் கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு விடயத்தைக் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. வெற்றியிலும் தோல்வியிலும் நடுநிலை பேணுவதற்கு இந்த விடயம் துணையாக அமையும்.

ஹம்ஸாமுஹம்மத்: ஸேர் நீங்கள் படிப்பிக்கப்போகும் விடயம் பற்றி எனக்குத் தெரியும். கழா கத்ர் பற்றித் தானே ஸேர்?

ஆசிரியர்: சரியாகச் சொன்னீர்கள். எமது மாணவர்கள் கெட்டிக்காரர்கள். எதையும் விரைவில் ஊகித்துவிடுவார்கள்.

நியாஸ்: கழா கத்ர் பற்றிப் படிப்போமே ஸேர்.

ஆசிரியர்: அகீதா பற்றி ஆரம்பமாகக் கற்றுக்கொண்டோம். இஸ்லாமிய அறிஞர்கள் கழா கத்ரை 'இலாஹிய்யாத்' என்ற பிரிவில் சேர்த்துள்ளனர். உலகிலும் மனித வாழ்விலும் நன்மை - தீமை அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கின்றன என ஈமான் கொள்வதே கழா கத்ர் மீதான நம்பிக்கையாகும். இதனை நாம் ஓரளவு விரிவாகப் பார்ப்போம்.

நாம் அல்லாஹ்வை ஈமான் கொள்ளும்போது அவனுக்கே உரிய பண்புகளையும் (ஸிபாத்) முழுமையாக நம்ப வேண்டும். முழுமையான அறிவு (இல்ம்), பரிபூரணமான நாட்ட சக்தி (இராதத்), நிறைவான இயக்க சக்தி (குத்ரத்), நடுநிலையான நீதி (அத்ல்) அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியன என்பதை உறுதியாக நம்ப வேண்டும். இந்த நம்பிக்கையின் ஒரு பகுதியாகத்தான் கழா கத்ர் நம்பிக்கை உள்ளது.

ஸைன் பஸ்லி: உதாரணங்களோடு விளங்கப்படுத்துங்கள் ஸேர்.

ஆசிரியர்: அவசரப்பட வேண்டாம். படிப்படியாக விளக்க முயற்சிக்கிறேன். அல்லாஹ்வுக்கு நிகரான அறிவு எவரிடமும் இல்லை. அவனது அறிவு விசாலமானது. வரையறை அற்றது. அவன் புற்றரையில் சிறிய எறும்பு ஊர்ந்து செல்வதையும் பாரிய அண்டவெளியில் கிரகங்கள்

*சுழல்வதையும் மனித உள்ளங்களில் ஊசலாடும் உணர்வுகளையும் அறிந்தே வைத்துள்ளான். அல்லாஹ் இவை அனைத்தையும் 'லவ்ஹுல் மஹ்பூழ்' எனும் பதிவேட்டில் பதித்தும் வைத்துள்ளான். அவை அனைத்தும் நடந்தே தீரும். அதில் எதுவும் பிசகாது என நாம் நம்பிக்கை கொள்வது கட்டாயமானதாகும். அல்லாஹ் இதுபற்றி அல்குர்ஆனில் கூறுவதைக் கவனமாக நோக்குங்கள்.*

**'இன்னும் பூமியிலோ, வானத்திலோ உள்ளவற்றில் ஓர் அணுவும் (நபியே) உமது இரட்சகனுக்குத் தெரியாமல் மறைந்து விடுவதில்லை. இன்னும் இவற்றை விடச் சிறிதோ, பெரிதோ எதுவாயினும் அவனுடைய தெளிவான (லவ்ஹுல் மஹ்பூழ்) பதிவேட்டில் பதிவு செய்யப்படாமல் இல்லை'. (10: 61)**

*அப்துல் காதிர்: அப்படியானால் அந்த லவ்ஹுல் மஹ்பூழில் எழுதப்பட்டுள்ளவாறா எமது செயல்கள் அமைந்திருக்கும்? பரீட்சைப் பெறுபேறுகளும் அப்படியா?*

*ஆசிரியர்: நல்ல கேள்வி. 'கழா' என்பது அல்லாஹ் அவனது அறிவுக்கும் நாட்டத்துக்குமேற்ப பிரபஞ்சத்தையும் அதிலுள்ளவற்றையும் படைத்துள்ளான். (முடிவு செய்யப்பட்டது) என்ற கருத்தையும் 'கத்ர்' என்பது படைப்புகள் ஒவ்வொன்றும் எப்பொழுது, எவ்விடத்தில், எத்தகைய தோற்றங்களையும் உள்ளார்ந்த ஆற்றல்களையும் கொண்டதாகத் தோன்றும் என்பது பற்றிய அல்லாஹ்வின் அறிவு என்ற கருத்தையும் குறிக்கின்றது.*

*கழா கத்ர் என்பதைச் சுருக்கமாகத் தமிழில் முன்னளப்பு, விதி என்று பொருள் கூறலாம். இந்த கழா கத்ர் மனித வாழ்வில் இரு வழிகளில் செயல்படுகின்றது. ஒன்று முழுமையாகவே அல்லாஹ்வின் அறிவுக்கும் நாட்டத்துக்குமேற்ப நடைபெறுவதாகும். அதில் மனிதனுக்கு எத்தகைய பங்கும் இல்லை. அவனது விருப்புவெறுப்புக்கு இடம் இல்லை. இப்பகுதியில் அவன் மறுமையில் அவன் விசாரணைக்கு உட்படுத்தப்படவும் மாட்டான். எங்கு பிறப்பது, யாருக்குப் பிறப்பது, மனித தோற்றம், ஆயுட்காலம் போன்றன இப்பகுதியில் அடங்கும்.*

**நிச்சயமாக அல்லாஹ், அவனுக்குப் பூமியில் மற்றும் வானத்தில் உள்ள எதுவும் மறைந்ததன்று. அவன் எத்தகையவன் என்றால் கர்ப்பப் பைகளில் தான் எவ்வாறு நாடுகிறானோ அவ்வாறே உங்களை வடிவமைக்கின்றான் (3: 5-6)** *என்ற அல்குர்ஆன் வசனம் இதனையே எடுத்துக்காட்டுகின்றது.*

*ஜாபிர்:* அப்படியென்றால் நன்மை - தீமை, சுவர்க்கம் - நரகம் படைக்கப்பட்டிருப்பதின் தேவை யாது?

*ஆசிரியர்:* நன்மை - தீமை இருப்பதும், சுவர்க்கம் - நரகம் இருப்பதும் உண்மையே. இதனைச் சரிவர விளங்கிக்கொள்வதற்கு கழா கத்ரின் இரண்டாம் பகுதியைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். இரண்டாம் பகுதி முதலாம் பகுதிக்கு மாற்றமானது.

இப்பகுதி மனித சுதந்திரம், அவனது விருப்பு வெறுப்புடன் தொடர்புபடுகின்றது. மனிதன் அல்லாஹ்வினால் அறிவூட்டப்பட்ட, நாட்டசக்தி வழங்கப்பட்ட படைப்பொன்றாகும். அவன் எந்த செயலைச் செய்தபோதும், அதில் அவனது நாட்டம் இருக்கவே செய்யும். அல்லாஹ் இந்த நாட்ட உணர்வை மனிதனில் எந்த அளவுக்கு விரிவுபடுத்தியுள்ளான் என்றால், அல்லாஹ்வை விசுவாசிப்பதில் கூட மனிதனின் விருப்பத்துக்கே அவகாசம் வழங்கியுள்ளான்.

**''விரும்பினால் விசுவாசம் கொள்ளட்டும்; விரும்பினால் நிராகரிக்கட்டும்''** (18: 29) என்ற அல்குர்ஆன் வசனம் இதற்கு ஆதாரமாக அமைகின்றது.

*ரியாழ்தீன்:* ஸேர் நீங்கள் ஆரம்பத்தில் அனைத்தும் லவ்ஹுல் மஹ்பூழில் உள்ளவாறு நடக்கும் என்று கூறினீர்கள். இப்போது, மனிதன் சுயமாகச் செயற்படுகின்றான் என்று கூறுகின்றீர்கள். இரண்டும் ஒன்றோடொன்று முரண்படுவது போல் இருக்கிறதே.

*ஆசிரியர்:* அப்படியல்ல. இங்கே எந்த முரண்பாடும் இல்லை. இங்கு அல்லாஹ்வின் அறிவு சம்பந்தப்படுகின்றது. அவன் படைப்பாளன். அவன் முக்காலத்தையும் அறிந்தவன். அவன் அறியாமல் இப்பூமியல் எதுவும் இடம்பெறுவதற்கில்லை. இதை நான் உதாரணத்துடன் எடுத்துக்காட்டுவது நல்லது என நினைக்கிறேன்.

ஒரு மனிதனின் புகைப்படத்தை எடுத்துப் பாருங்கள். அது அந்த மனிதனின் இறந்த காலத்தைக் காட்டும். அவன் தன்னை அலங்கரித்து புகைப்படம் எடுத்திருந்தால் அழகாகத் தோற்றமளிப்பான். ஏனோ தானோ என்றிருந்தால் அங்கே அழகான தோற்றம் இடம்பெற முடியாது. இதற்காக புகைப்படத்தைப் பாராட்டவோ, வெறுக்கவோ முடியுமா? முடியாது. ஏனெனில் அது அவனாலேயே வகுத்துக்கொண்ட இறந்த காலத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கும்.

அவ்வாறே ஒரு கண்ணாடியின் முன்னால் ஒருவன் சிரித்த முகத்தோடு தோற்றம் கொடுத்தால் அவன் சிரித்த பிம்பமாகவும், கடுகடுத்த முகத்தோடு தோற்றம் கொடுத்தால் கடுகடுத்த பிம்பமாகவும் பிரதிபலிப்பான். இதற்காக கண்ணாடியைப் பாராட்டுவதோ அல்லது அதனுடன் கோபித்துக்கொள்வதோ சரியாகுமா?

புகைப்படம் கடந்த காலத்தைக் காட்டுவது போல, கண்ணாடி நிகழ்காலத்தைக் காட்டி நிற்கின்றது. மாணவர்களே சற்று சிந்தியுங்கள். மனிதனின் இறந்த கால, நிகழ்கால செயல்களைப் பிரதிபலிக்கச் செய்யும் சாதனங்களை உருவாக்க முடிந்த அல்லாஹ்வுக்கு எதிர்காலத்தைப் புலப்படுத்தும் ஒரு சாதனத்தை உருவாக்குவது இயலாத காரியமா? அவனால் அது முடியும். அதுதான் லவ்ஹுல் மஹ்பூழ் ஆகும்.

இந்த லவ்ஹுல் மஹ்பூழ் எதிர்காலத்தைக் காட்டுகிறது என்பதற்காக மனிதனின் செயல்பாடுகளுக்கு லவ்ஹுல் மஹ்பூழைக் காரணம் காட்டுவது நியாயமாகுமா? புகைப்படம் இறந்த காலத்துக்கும், கண்ணாடி நிகழ்காலத்துக்கும் எவ்வாறு பொறுப்பில்லையோ அவ்வாறே லவ்ஹுல் மஹ்பூழ் எதிர்காலத்துக்கும் பொறுப்பில்லை என்பதுவே நியாயமானதாகும்.

*நஸ்ருல்லாஹ்:* லவ்ஹுல் மஹ்பூழில் செயல்கள் அனைத்தும் பதியப்பட்டுள்ளதால் மனிதன் நிர்ப்பந்தமாக செயல்படுவதற்கு உந்தப்படுகிறானா?

*ஆசிரியர்:* இல்லை. இங்கு எத்தகைய நிர்ப்பந்தமும் இல்லை. மாற்றமாக மனிதன் சுயமாகச் செய்யப்போகும் விடயங்களை அல்லாஹ் அறிந்து வைத்துள்ளான் என்பதுவே கருத்தாகும்.

*ரம்ஸி:* ஒருவன் லவ்ஹுல் மஹ்பூழைக் காரணங் காட்டி தனது செயல்களுக்குப் பொறுப்புக் கூறுவதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாமா?

*ஆசிரியர்:* அப்படித் தப்பித்துக்கொள்ள முடியுமென்றால் மனிதனுக்கு வழிகாட்டுவதற்கு ரஸூல்மார்கள், நபிமார்கள், வேதங்கள் அனுப்பப்பட்டமைக்கு அர்த்தம் இல்லாது போய்விடும்.

*ரபீக்:* ஸேர் மிக்க நன்றி. கழா கத்ர் பற்றி சிறப்பாக விளங்கிக்கொண்டோம். **'அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் எதையும் நாட மாட்டீர்கள்'** (76: 30) என்ற அல்குர்ஆன் வசனம் எதனைச் சுட்டிக்காட்டுகிறது?

ஆசிரியர்: இதற்கு இரண்டு விளக்கங்கள் உண்டு. ஒன்று நாட்டம் என்ற செயல் அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்டது. ஆதலால் ஒரு மனிதன் ஒரு விடயத்தைச் சுயமாகச் செய்தாலும் அது அல்லாஹ்வின் நாட்டமே.

இரண்டாவது மனிதன் எதனையும் சுயமாகச் செய்ய வேண்டுமென்பது அல்லாஹ்வின் விருப்பமாகும். இதற்கமைய தானாகவே சுயமாகச் செய்தாலும் அது அல்லாஹ்வின் நாட்டத்துக்கமையவே இடம்பெறும் என்பதாகும்.

இதற்கும் ஒரு உதாரணத்தை எடுத்துக்காட்டுகிறேன். விவசாயி விதையை நடுகிறான் - அல்லாஹ்வே அதனைப் பயிராக்குகிறான். பழ விதைகளை நட்டினால் பழங்களும், பூச்செடிகளை நட்டினால் பூக்களும் கிடைக்கப்பெறுகின்றன. இதனை ஏற்படுத்துபவன் யார்? நிச்சயமாக அவன் அல்லாஹ்வே அன்றி வேறு யாருமில்லை. இங்கு மனிதனுக்கு நாட்ட சுதந்திரம் இருக்கின்றது. அதற்குரிய இறுதி விளைவை நிச்சயிப்பது அல்லாஹ்வின் நாட்டமேயாகும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.
இதற்கமைய கழா கத்ரின் இரண்டாம் பகுதியில் மனித செயல்களுக்கு மனிதன் பொறுப்பாகிறான் என்பது தெளிவாகிறதல்லவா?

மிப்ளி: எமது பரீட்சைப் பெறுபேறுகளுக்கு நாம்தானா பொறுப்பு?

ஆசிரியர்: ஒவ்வொருவரும் அவரவர் முயற்சிக்கேற்ப விளைவுகளைப் பெற்றுக்கொள்வார்கள். அந்த இறுதி விளைவு அல்லாஹ்வின் அறிவுக்கும் நாட்டத்துக்கும் ஏற்பவே அமைந்திருக்கும் என்பதை நாம் நம்ப வேண்டும். ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் முன்னேற்பாடான கழா கத்ரை ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை, சுயமுயற்சியிலும் ஈடுபட வேண்டும். யா அல்லாஹ் அறிவை விருத்தியாக்குவாயாக என்று துஆக் கேட்டுக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. துஆக் கேட்பதுடன் படிக்கவும் வேண்டும். எல்லாம் அல்லாஹ்வின் ஏற்பாட்டின்படி நடைபெறுகின்றன என்று கூறிக்கொண்டு ஓய்ந்திருப்பதை இஸ்லாம் ஊக்குவிப்பதில்லை. பத்ர் யுத்தத்தின்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மேற்கொண்ட முன்னேற்பாடுகள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

பிர்தவ்ஸ்: ஸேர் வகுப்புக்கு வரும்போது பரீட்சைப் பெறுபேறுகள் பற்றி யோசித்து, சங்கடத்தோடு இருந்தோம். இப்போது நாம், தலையிலிருந்த சுமையை இறக்கி வைத்தால் கிடைக்கும் சந்தோசத்தை உணர்பவர்கள் போன்று இருக்கின்றோம்.

ஆசிரியர்: *நீங்கள் சொல்வது சரி. கழா கத்ரை நம்புவதால் மேலும் பல நன்மைகள் உள்ளன. அவற்றை பட்டியற்படுத்திக் காட்டுவது நல்லது என நினைக்கின்றேன்.*

1. அல்லாஹ் அளித்தவற்றில் திருப்தி கண்டு வாழ அது வழிநடத்தும்.
2. ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கு அது தூண்டல் செய்யும்.
3. அபாயகரமான சந்தர்ப்பங்களில் துணிச்சலோடு செயல்பட தூண்டுதலாக அமையும்.
4. தீமைகளை எதிர்ப்பதில் உறுதியாக இருக்கச் செய்யும்.
5. துன்பங்கள், துயரங்களின்போது பொறுமையைக் கைக்கொள்ளச் செய்யும்.

*இந்த இடத்தில் கழா கத்ர் பற்றி விளங்கிக் கொள்வதற்கு, இப்னு அப்பாஸ் ரழியல்லாஹுᵘ அன்ஹுᵘ அவர்கள் குறிப்பிடும் ஹதீஸ் பொருத்தமாக இருப்பதைக் காண்கின்றேன். அவதானமாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.*

*நபி ஸல்லல்லாஹுᵘ அலைஹி வஸல்லம் அவர்கள் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹுᵘ அன்ஹுᵘ அவர்களைப் பார்த்து குறிப்பிட்டார்கள்.*

''சிறுவனே! நான் உனக்குச் சில வார்த்தைகளைக் கற்பிக்கின்றேன். அல்லாஹ்வின் வழிகாட்டலைப் பேணி நடப்பாயாக. அப்போது அல்லாஹ் உன்னைப் பாதுகாப்பான். நீ கேட்பதாயின் அல்லாஹ்விடமே கேள். நீ உதவி கோருவதாயின் அல்லாஹ்விடமே உதவி கோருவாயாக. இந்த உலகமே ஒன்று திரண்டு நன்மை செய்ய முயன்றாலும் உனக்கு ஏற்கனவே அல்லாஹ் விதித்து வைத்துள்ளதைத் தவிர மேலதிகமாக எந்த நன்மையையும் செய்ய முடியாது. இந்த உலகமே ஒன்று திரண்டு உனக்குத் தீங்கிழைத்து விட முயன்றாலும் அல்லாஹ் உனக்கு ஏற்கனவே விதித்ததைத் தவிர வேறு எந்தத் தீங்கையும் செய்ய இயலாது. எழுதுகோல்கள் உயர்த்தப்பட்டு விட்டன. ஏடுகள் காய்ந்து விட்டன'' (திர்மிதி)

மாணவர்கள்: *ஜஸாக்கல்லாஹுᵘ ஹைரன் ஸேர்.*

**பயிற்சி**

*சரி, பிழை கூறுக.*

1. *கழா கத்ர் நம்பிக்கை இலாஹிய்யத் என்ற பிரிவைச் சார்ந்ததாகும்.* ( )
2. *மனிதனின் விருப்பு வெறுப்புக்களை அல்லாஹ் அறிந்துவைத்துள்ளான்.* ( )
3. *மனித செயற்பாடுகளுக்கு பொறுப்புக் கூற வேண்டிய கட்டாய நிலை மனிதனுக்கு உண்டு.* ( )

செயற்பாடு

1. *கழா கத்ர் பற்றிப் பிரஸ்தாபிக்கும் இரண்டு அல்குர்ஆன் வசனங்களையும், இரண்டு ஹதீஸ்களையும் தமிழ் மொழிபெயர்ப்புடன் வகுப்பில் காட்சிப்படுத்துக.*

2. *வெற்றியால் அளவுக்கதிகம் பூரிப்படைந்த அல்லது தோல்வியால் துவண்ட உமது நண்பரொருவரை நிதான நிலைக்கு மீட்டி வருவதற்கு எவ்வாறு உபதேசம் செய்வீர்?*

# 6

# ஜனாபத்திலிருந்து சுத்தம் பெறுவோம்

தூக்கத்திலேற்பட்ட அசாதாரண நிலை காரணமாக அன்பல் விழித்துக் கொண்டான். வழமைக்கு மாறாக ஏற்பட்ட நிலையை நண்பனிடம் தெரிவித்தான். 'நாம் பருவ வயதை அடையும்போது இப்படியான நிலை ஏற்படும். அதற்காகப் பதற்றமடைய வேண்டியதில்லை. குளித்துச் சுத்தமாகிக் கொண்டால் போதுமானது' என நண்பன் கூறினான். இருந்தாலும் அவன் மனம் திருப்தியடையவில்லை. இஸ்லாம் பாட ஆசிரியரை அணுகி நடந்ததைத் தயக்கத்துடன் கூறினான். இன்று இஸ்லாம் பாடத்தில் அது பற்றித்தான் படிக்க இருக்கிறோம். இவ்வாறு நிகழ்ந்தால் கடமையான குளிப்பை நிறைவேற்றுவதாக நிய்யத் வைத்துக் குளிக்க வேண்டும் என்றார்.

ஆறாம் பாடவேளைக்காக மணி அடித்ததும் மௌலவி ஆசிரியர் வகுப்புக்கு வந்து பாடத்தை ஆரம்பித்தார்.

'நீங்கள் 'ஜனாபத்' என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா'? எனக் கேட்டார். 'ஜனாபத்' என்பது ஓர் அரபுச் சொல். 'தொடக்கு' என்பது அதன் கருத்தாகும் என்று நான் மத்ரஸாவில் படித்திருக்கிறேன் என்றான் ஷிஹாம்.

நல்லது. இதனை முழுக்கு என்றும் கூறுவர். மனித உடலில் இயல்பாக ஏற்படும் சில நிலைமைகள் காரணமாகக் குளிப்பது கடமையாகின்றது. அதனையே ஜனாபத் என்ற சொல் குறித்து நிற்கின்றது. இதனை ***'அல் ஹதஸுல் அக்பர்'*** (பெருந் தொடக்கு) என்றும் அழைப்பதுண்டு. இவ்வாறான நிலையிலிருப்போர் 'ஜுனுப்' என அழைக்கப்படுவர்.

**''நீங்கள் ஜனாபத் அடைந்தால் குளித்துச் சுத்தமாகிக் கொள்ளுங்கள்''** (5:6) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. 'ஹைழ் (மாதவிடாய்) வந்துவிட்டால் தொழுகையை விட்டு விடுவீராக. அது வெளிவருவது நின்றுவிட்டால் குளித்துவிட்டுத் தொழுவீராக!' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு பெண்மணிக்கு அறிவுறுத்தினார்கள். இதுவும் ஒருவகை ஜனாபத் ஆகும். ஜனாபத்துடையோர் குளித்துச் சுத்தமாகிக் கொள்ள வேண்டும். ஜனாபத்தை ஏற்படுத்தும் காரணங்களைத் தெளிவாக நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இதனை எவரேனும் கூற முடியுமா? என்று ஆசிரியர் வினவினார். பகுதி நேர மத்ரஸாவுக்குச் செல்லும் ஹுஸ்னி எழுந்து நின்றான். ஆசிரியர் அனுமதி கொடுத்ததும் அவற்றைச் சொல்ல ஆரம்பித்தான்.

1. ஒரு முஸ்லிம் மரணமடைதல்
2. தூக்கத்தில் அல்லது விழிப்பில் இந்திரியம் வெளியாதல்
3. ஆண் - பெண் உடலுறவு கொள்ளல்
4. ஹைழ் ஏற்படல்
5. நிபாஸ் ஏற்படல்

இங்கு பெண்கள் தொடர்பான விடயத்தை மாத்திரம் சுருக்கமாகக் கூறுகிறேன். குறிப்பிட்ட வயதில் ஆண்களும் பெண்களும் பருவமடைவர். ஆண்கள் பருவமடைவதற்கு அறிகுறியாக விந்து வெளியாகின்றது. பெண்கள் பருவமடைவதன் அறிகுறியாக ஹைழ் எனும் உதிரப் போக்கு ஏற்படுகிறது. இதனை மாதவிடாய் எனவும் கூறுவர். இது குறைந்தது ஒரு நாளில் நின்றுவிடும். சிலருக்குப் பதினைந்து நாட்கள் வரை நீடிக்கும். பொதுவான காலம் ஒரு வாரமாகும்.

நிபாஸ் என்பது பிரசவத்தின்போது ஏற்படும் உதிரப் போக்கு. இதன் கால எல்லை குறைந்தது ஒரு விநாடி, கூடியது அறுபது நாட்கள். பெரும்பாலும் நாற்பது நாட்களில் நின்றுவிடும். ஹைழ், நிபாஸ் நின்றதும் அவர்கள் குளித்துச் சுத்தமாகிக் கொள்ள வேண்டும். ஹைழ், நிபாஸ் காலங்களில் பெண்கள் தொழவோ, அல்குர்ஆனை ஓதவோ, தொடவோ, நோன்பு நோற்கவோ கூடாது. சுத்தமான பின் அவர்கள் விடுபட்ட தொழுகையை மீட்ட வேண்டியதில்லை. ஆனால் விடுபட்ட நோன்பைக் கழாச் செய்ய வேண்டும்.

ஆசிரியர் பிரிஸ்டல் அட்டையொன்றைக் காட்சிப்படுத்தி அதனை மாணவனொருவனுக்கு வாசிக்கும்படி பணித்தார்.

**ஜனாபத் உடையோர் செய்யக் கூடாதவை**

- ★ தொழுதல்
- ★ பள்ளியில் இஃதிகாப் இருத்தல்
- ★ கஃபாவைத் தவாப் செய்தல்
- ★ அல்குர்ஆனை ஓதுதல், தொடுதல், சுமத்தல்

ஒரு மாணவர் உரத்து வாசிக்க ஏனையோர் அதனை அவதானித்தனர்.

இத்தோடு மற்றொன்றையும் தெரிந்துகொள்ள வேண்டும். எமது பாலுறுப்பிலிருந்து இந்திரியம் அல்லாத சிறுநீர், மதி, வதி என்ற திரவப் பொருள்களும் வெளியாகின்றன. இவை நஜீஸானவை. இவை வெளியேறினால் குளிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் உறுப்பைக் கழுவுவதோடு அவை படிந்த இடங்களையும் கழுவிச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும் என விளக்கிய ஆசிரியர், மற்றொரு பிரிஸ்டல் அட்டையை விரித்துக் காட்சிப்படுத்தினார்.

**கடமையான குளிப்பு**

**நிபந்தனைகள்**

- ★ மிகச் சுத்தமான நீரைப் பயன்படுத்தல்
- ★ நீர் படுவதைத் தடுக்கக் கூடிய பொருட்கள் உடம்பில் இல்லாதிருத்தல்

**பர்ளுகள்**

- ★ 'பர்ளான குளிப்பை நிறைவேற்றுகிறேன்' என நிய்யத்து வைத்தல்
- ★ உடல் முழுவதையும் சுத்தமான நீரினால் கழுவுதல்

**ஸுன்னத்துகள்**

- ★ குளிக்குமுன் சிறுநீர் கழித்தல்
- ★ உடம்பில் படிந்திருக்கும் அசுத்தங்களை அகற்றிவிடுதல்
- ★ இரு கைகளையும் மணிக்கட்டு வரையில் கழுவிக் கொள்ளல்
- ★ வாய் கொப்பளித்தல், நாசிக்கு நீர் செலுத்தல்
- ★ பற்களைத் துலக்குதல்
- ★ வுழூச் செய்தல்
- ★ உடல் முழுவதையும் தேய்த்துக் குளித்தல்

மாணவர்கள் அமைதியாக வாசிக்கத் தொடங்கினர். விளங்காதவை எவையேனும் இருக்கின்றனவா என ஆசிரியர் வினவி தேவையான விளக்கங்கள் அளிக்கப்பட்ட பின்னர்

பின்வரும் ஹதீஸோடு வகுப்பு முடிவடைகிறது.

''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜனாபத்துக்காகக் குளிக்க நாடினால் இரு முன்னங் கைகளையும் மூன்று முறை கழுவிக் கொள்வார்கள். பின்னர் தொழுகைக்காக வுழூச் செய்வது போல வுழூச் செய்து கொள்வார்கள். பின் தமது கைவிரல் களை நீருள் நுழைத்தெடுத்து முடியின் வேர் வரை விரல்களால் கோதிக் குடைந்து கிளறிவிடுவார்கள். பின் இரு கைகளாலும் மூன்றுமுறை நீரை அள்ளித் தலையில் ஊற்றுவார்கள். அதன் பின்புதான் உடல் முழுவதும் நீரை வார்ப்பார்கள்.'' (திர்மிதி)

**பயிற்சி**

**அ. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. தொடக்கு, முழுக்கு என்பன சுத்தமான நிலையைக் குறிப்பிடுகின்றன. ( )
2. ஹைழ், நிபாஸ் என்பன பெண்களோடு தொடர்பானவை. ( )
3. மதி, வதி என்பன உடம்பிலிருந்து வெளியாகும் சுத்தமான திரவப் பொருட்களாகும். ( )
4. ஆணோ பெண்ணோ மரணித்தால் அவரைக் குளிப்பாட்ட வேண்டும். ( )
5. அல்குர்ஆனைத் தொடுவதற்கு ஜனாபத்திலிருந்து நீங்கியிருத்தல் வேண்டும். ( )
6. குளிக்குமுன் வுழூச் செய்வது சுன்னத்தாகும். ( )

**ஆ. சுருக்கமான விடை தருக.**

1. ஜனாபத்தை ஏற்படுத்தும் காரணிகள் யாவை?
2. மாதவிடாய் உள்ள பெண்கள் செய்யக் கூடாதவை யாவை?

# 7

# அல் கஸ்ரு – வல் ஜம்உ

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் தொழுகை மிக முக்கியமானதாகும். தொழுகையை விடுவதற்கு இஸ்லாத்தில் அனுமதியில்லை. பிரயாணம், நோய், யுத்தம், அச்சமான சூழ்நிலை போன்ற நெருக்கடியான நேரங்களிலும்கூட தொழுகையை நிறைவேற்றியே ஆகவேண்டும். இதனாலேயே பிரயாண சூழ்நிலைகளில் தொழுகையை நிறைவேற்றுவதற்கு இலகுபடுத்தப்பட்ட வழிமுறைகளை இஸ்லாம் அறிமுகம் செய்துள்ளது. அவற்றுள் ஒன்றே **ஜம்உ** மற்றும் **கஸ்ர்** ஆகும். இது சேர்த்து மற்றும் சுருக்கித் தொழுவதாகும்.

### சேர்த்துத் தொழுதல் (ஜம்உ)

பிரயாணத்திலிருக்கும் ஒருவர் பகல் நேரத் தொழுகைகளான ழுஹர், அஸர் இரண்டையும், அதேபோல் இரவு நேரத் தொழுகைகளான மஃரிப், இஷா ஆகிய இரண்டையும் சேர்த்துத் தொழுவது ''ஜம்உ'' என அழைக்கப்படுகின்றது. இந்த ''ஜம்உ'' தொழுகையை பின்வரும் ஏதாவது ஒருவகையில் நிறைவேற்றலாம்.



**முற்படுத்தி சேர்த்துத் தொழுதல் (ஜம்உத் தக்தீம்)**

பிரயாணம் செய்பவர் ழுஹருடைய நேரத்தில் ழுஹர் தொழுது விட்டு அதைத் தொடர்ந்து அஸரையும், மஃரிபுடைய நேரத்தில், மஃரிபைத் தொழுது விட்டு அதைத் தொடர்ந்து இஷாவையும் சேர்த்துத் தொழலாம். இவ்வாறு தொழுவதை ''ஜம்உத் தக்தீம் - முற்படுத்தி சேர்த்துத் தொழுதல்'' என அழைப்பர்.

**பிற்படுத்தி சேர்த்துத் தொழுதல் (ஜம்உத் தஃகீர்)**

பிரயாணம் செய்பவர் ளுஹரைப் பிற்படுத்தி, அஸருடைய நேரத்தில் முதலில் ழுஹர் தொழுது விட்டு அதைத் தொடர்ந்து அஸரையும் அவ்வாறே மஃரிபைப் பிற்படுத்தி, இஷாவுடைய நேரத்தில் முதலில் மஃரிபைத் தொழுது விட்டு அதைத் தொடர்ந்து இஷாவையும் சேர்த்துத் தொழுது கொள்ளலாம். இவ்வாறு தொழுவதை ''ஜம்உத் தஃகீர்'' என அழைப்பர்.

## சுருக்கித் தொழுதல் (கஸ்ர்)

நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டு ரக்அத்துகளாகச் சுருக்கித் தொழுவதை ''கஸ்ர்'' என்பர். இவ்வாறு சுருக்கித் தொழுவது பிரயாணிகளுக்கு மட்டும் உரிய சலுகையாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது பிரயாணங்களில் இவ்வாறு சுருக்கித் தொழுதுள்ளார்கள்.

**''நீங்கள் பூமியில் பிரயாணம் செய்யும்போது (நீங்கள்) தொழுகையைச் சுருக்கிக் கொள்வது உங்கள் மீது குற்றம் ஆகாது.''** (4: 101)

### அல் ஜம்உ வல் கஸ்ர்

நான்கு ரக்அத்கள் கொண்ட தொழுகைகளை இரண்டிரண்டாக சுருக்கி ஜம்உத் தக்தீமாகவோ ஜம்உத் தஃகீராகவோ நிறைவேற்றலாம். ஆனால் மஃரிப் தொழுகையைப் பொறுத்தவரை அதன் ரகஅத் எண்ணிக்கை எத்தகைய மாற்றத்துக்கும் உட்பட மாட்டாது.

### ஜம்உ - கஸ்ர் செய்பவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டியவை:

1. நான்கு ரக்அத் தொழுகைகளான ழுஹர், அஸர் மற்றும் இஷா தொழுகைகளை மட்டுமே சுருக்கி இரண்டு ரக்அத்களாகத் தொழலாம். பஜ்ரு தொழுகையைச் சேர்த்தோ, சுருக்கியோ தொழ முடியாது. மஃரிப் தொழுகையைப் பொறுத்த வரை அதனைச் சுருக்கித் தொழ முடியாது. ஆனால் சேர்த்துத் தொழ முடியும்.
2. நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டு ரக்அத்களாக ''கஸ்ர்'' செய்யும் போது ஒவ்வொரு ரக்அத்திலும் வழமை போல் ஸூரத்துல் பாத்திஹாவையும் திருக்குர்ஆனின் சில வசனங்களையும் ஓதி முறைப்படி தொழ வேண்டும்.
3. கஸ்ர் ஜம் செய்வதற்குப் பிரயாணம் நீண்டதாக இருக்க வேண்டும். இச்சலுகை ஊரின் எல்லையைத் தாண்டியதிலிருந்து ஆரம்பமாகிறது. அதனைத் தொடர்ந்து

ஜம்உத் தஃகீர் செய்பவர், குறிப்பிட்ட தொழுகையின் நேரம் கழிவதற்கு முன் அடுத்த நேரத் தொழுகையுடன் சேர்த்துத் தொழுவதாக நிய்யத்து வைக்க வேண்டும்.

4. பிரயாணத்தில் இருப்பவர் வித்ரு மற்றும் பஜ்ருடைய ஸுன்னத்தான தொழுகைகளை விடாமல் தொழுவது விரும்பத்தக்கது.

5. பிரயாணத்திலிருப்பவர்கள் ஜம்உ செய்யும்போது இரண்டு தொழுகைகளுக்கும் ஓர் அதானும் ஒவ்வொரு தொழுகைக்கும் தனித் தனியே இகாமத்தும் சொல்லலாம்.

6. சுருக்கித் தொழுபவர்கள் பூரணமாகத் தொழும் ஓர் இமாமைப் பின்பற்றித் தொழ முடியாது.

## பயிற்சி

அ. சரி பிழை கூறுக:

1. பிரயாணத்தில் இருக்கும் ஒருவருக்குத் தொழுவது கஷ்டமாயின் கழாச் செய்து கொள்ளலாம். ( )

2. பஜ்ருத் தொழுகையை சேர்த்தோ அல்லது சுருக்கியோ தொழ முடியாது. ( )

3. ஜம்உத் தக்தீம் என்பது முற்படுத்தி சேர்த்துத் தொழுவதைக் குறிக்கும். ( )

4. பிரயாணிகள் எந்த ஒரு ஸுன்னத்தான தொழுகையையும் நிறைவேற்ற வேண்டியதில்லை. ( )

ஆ. உமது வாழ்வில் கஸ்ர், ஜம்உ செய்து தொழுத ஓர் அனுபவத்தினைச் சுருக்கமாக எழுதுக.

# 8

# ஜுமுஆத் தொழுகை

ஒவ்வொரு சமூகத்திலும் ஒவ்வொரு நாள் விசேட தினமாகக் கொள்ளப்படுகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் அவர்களது சமுதாயத் தினருக்கும் அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட விசேட தினம் யவ்முல் ஜுமுஆ என அழைக்கப்படுகின்ற வெள்ளிக்கிழமையாகும். இந்நாளுக்குரிய சிறப்புகளைத் தெரிந்து வணக்கங்களிலும் நன்மையான காரியங் களிலும் ஈடுபடுவது முஸ்லிம்களாகிய எங்களது கடமையாகும். வெள்ளிக் கிழமையில் இடம்பெறுகின்ற முக்கிய அமல் ஜுமுஆத் தொழுகையாகும்.

ஜுமுஆவின் முக்கியத்துவத்தை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:

**''நம்பிக்கையாளர்களே! வெள்ளிக்கிழமையன்று ஜுமுஆ தொழுகைக்காக அழைக்கப்பட்டால் வியாபாரத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வை நினைவுகூர நீங்கள் விரைந்து செல்லுங்கள். அறிவுடையவர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிக நன்று. (இதனை நீங்கள் அறிந்துகொள்வீர்களாக).''** (62: 09)

வெள்ளிக்கிழமையின் சிறப்புப் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

''உங்களிடத்தில் சிறந்த நாள் வெள்ளிக்கிழமை நாளாகும். அந்நாளில்தான் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் படைக்கப்பட்டார்கள், அதிலேதான் அவர்கள் மரணித்தார்கள். அதில்தான் மறுமை நாள் நிகழும். அத்தினத்தில்தான் மனிதன் விசாரணைக்காக மீண்டும் எழுப்பப்படுவான்.



இத்தினத்தில் அதிகமதிகம் என் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். நிச்சயமாக நீங்கள் சொல்லக்கூடிய ஸலவாத்து என்னிடத்தில் எடுத்துக் காட்டப்படும், நபிமார்களின் உடலை பூமி உண்பதை (அழிப்பதை) விட்டும் அல்லாஹ் ஹராமாக்கினான்'' (அபூ தாவூத், நஸாஈ)

## ஜுமுஆ தினத்தன்று கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள்

வெள்ளிக்கிழமை ஜுமுஆத் தொழுகைக்காகப் பல் துலக்கி குளிப்பது முக்கிய ஸுன்னத்தாகும். பள்ளிக்கு வரும்போது தலைக்கு எண்ணெய் மற்றும் நறுமணம் பூசிக் கொள்வதோடு அழகான ஆடையை அணிந்து கொள்வது சிறந்ததாகும். பள்ளியில் இருக்கின்ற மனிதர்களைக் கடந்து செல்லாமல் தன்னால் முடியுமான அளவு தொழுதுவிட்டு மௌனமாக இருந்து கதீபின் உரையைச் செவிதாழ்த்திக் கேட்க வேண்டும். அதன் பின்னர் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு செய்பவருடைய முந்தைய ஜுமுஆவுக்கும் மறு ஜுமுஆவுக்கும் இடையேயுள்ள சிறு பாவங்கள் மன்னிக்கப்படும் (புஹாரி, அஹ்மத்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.



ஜுமுஆ நாளில் ஸூரத்துல் கஹ்ஃப் (18 ஆவது) அத்தியாயத்தை ஓதுதல் அடுத்த ஜும்ஆ வரை உள்ளத்தைப் பிரகாசிக்கச் செய்கிறது. அத்துடன் வெள்ளிக்கிழமைகளில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அதிகமாக ஸலவாத் சொல்லுவது சிறந்த நற்செயல்களில் ஒன்றாகும். (அபூ தாவூத், நஸாஈ)

''ஜுமுஆ நாளில் ஒரு நேரம் உண்டு. அந்த நேரம் மிகவும் குறைந்த நேரமே. அதில் ஒரு முஸ்லிமான அடியார் தொழுகையில் நின்று அல்லாஹ்விடம் எதையேனும் கேட்டால் அதை அவருக்கு அல்லாஹ் கொடுக்காமல் இருப்பதில்லை'' (புஹாரி) என நபிமொழி கூறுகின்றது.

ஜுமுஆத் தொழுகை என்பது வெள்ளிக்கிழமை ழுஹர் தொழுகைக்குப் பதிலாக இமாம் மிம்பரில் குத்பா நிகழ்த்திய பின்னர் தொழப்படும் இரண்டு ரக்அத்கள் கொண்ட தொழுகையாகும். இத்தொழுகை, அனைத்து முஸ்லிம்கள் மீதும் கட்டாயக் கடமையாகும். இதன் மூலம் ஒவ்வொரு முஸ்லிமும் வாரத்தில் ஒரு நாள் சன்மார்க்க உபதேசங்களைச் செவிமடுத்துக் கற்றுக் கொள்ளுதல், ஊரிலுள்ள ஏனைய மஹல்லாக்களைச் சேர்ந்த முஸ்லிம் சகோதரர்களை ஓரிடத்தில் சந்தித்தல் மற்றும் வாராந்தம் ஜுமுஆவுக்கு இடைப்பட்ட கால முக்கிய விவகாரங்களைக் கலந்துரையாடல், தேவையான அறிவுறுத்தல்களை வழங்கல் போன்ற பல வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுகின்றன.

இத்தொழுகைக்கும் இத்தொழுகை இடம்பெறும் நாளான வெள்ளிக் கிழமைக்கும் அல்லாஹ் பல சிறப்புக்களை அளித்துள்ளான்.

## ஜுமுஆவுக்கு முற்கூட்டி சமுகமளித்தல்

'ஜுமுஆ நாள் வந்து விட்டால் வானவர்கள் பள்ளியின் நுழைவாயிலில் நின்று கொண்டு முதலில் வருபவரையும், அதைத் தொடர்ந்து வருபவர்களையும் வரிசைப்படி பதிவு செய்கிறார்கள். முதலில் வருபவர் ஒட்டகத்தையும், அதற்கடுத்து வருபவர் மாட்டையும், அதற்கடுத்தவர் ஆட்டையும் குர்பானி கொடுத்தவர் போன்று கருதப்படுவர். பிறகு வருபவர் கோழி, அதனையடுத்தவர் முட்டையையும் தானம் செய்தவர் போன்று கணிக்கப்படுவர். இமாம் மிம்பரில் ஏறிவிட்டால் வானவர்கள் தங்கள் ஏடுகளை மூடிவிட்டுச் சொற்பொழிவைக் கேட்க ஆரம்பித்து விடுவார்கள்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (புஹாரி)

நம்முடைய பெயர் வெள்ளியன்று பள்ளிக்கு வரும் மலக்குகளின் பதிவேட்டில் பதியப்பட வேண்டுமெனில், நாம் இமாம் மிம்பரில் ஏறுவதற்கு முன்பே பள்ளிக்குச் சென்றாக வேண்டும். ஜுமுஆத் தொழுகைக்காக மஸ்ஜிதுக்கு வருபவர் இமாம் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தாலும் கூட ஜுமுஆத் தொழுகைக்கு முன் சுருக்கமாக இரண்டு ரக்அத்கள் தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுகையைத் தொழுது கொள்ள வேண்டும்.

''யார் குளித்துவிட்டு முன்கூட்டியே (பள்ளிக்கு) வந்து, இமாமுக்கு நெருக்கமாக இருந்து அவரது உரையைச் செவியுற்று, ஜுமுஆவை வீணாக்காமல் இருக்கின்றாரோ அவருக்கு அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் ஓர் ஆண்டு நோன்பு நோற்று, ஓர் ஆண்டு நின்று வணங்கிய கூலி உண்டு'' (திர்மிதி) என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

பருவ வயதை அடையாதவர்கள், பெண்கள், பள்ளிக்கு வர முடியாத நிலையிலுள்ள நோயாளிகள், பயணிகள் முதலானோர் ஜுமுஆத் தொழுகை கடமையாக்கப்படாதோர் ஆவர்.

*ஜுமுஆவில் இமாம் சொற்பொழிவு நிகழ்த்தும் போது அவரது சொற்பொழிவைச் செவிமடுத்துக் கொண்டிருப்பவர்கள் பேசுவது முற்றாகத் தடைசெய்யப்பட்ட விடயமாகும். பேசிக் கொண்டிருக்கும் ஒருவரை விழித்து, 'பேசாமலிரு' என்று சொல்வது கூட இருவரது நன்மையையும் இழக்கச் செய்துவிடும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.*

*ஜும்ஆத் தொழுகையினதும் வெள்ளிக்கிழமையினதும் சிறப்புக்களையும் பயன்களையும் குறிப்பிட்டுள்ள இஸ்லாம், ஜுமுஆத் தொழுகையை அலட்சியம் செய்வோரை எச்சரித்துமுள்ளது. அதாவது: ''அலட்சியமாக மூன்று ஜுமுஆக்களை யார் விட்டு விட்டாரோ அவரது உள்ளத்தில் அல்லாஹ் முத்திரையிட்டு விடுகின்றான்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)*

*அவ்வாறே ஜுமுஆவை அலட்சியம் செய்து வீடுகளில் இருப்போரை அவர்களது வீட்டுடன் எரித்துவிட எனக்குத் தோன்றுகிறது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் குறிப்பிட்டுள்ளமை ஜுமுஆவின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்து கின்றது.*

***எனவே ஜுமுஆவின் சிறப்புக்களையும் அதனை விடுவதன் ஆபத்தையும் கவனத்திற் கொண்டு ஜுமுஆவைத் தவற விடாமல் நிறைவேற்றுவோமாக. ஜுமுஆத் தொழுகைக்கு முன் நிகழ்த்தப்படுகின்ற குத்பா உரையைத் தவறாமல் முழுமையாகச் செவிமடுத்து அன்றைய தினத்தின் பூரண பயனைப் பெற்றுக் கொள்வோமாக!***

**பயிற்சி**

1. ஜுமுஆத் தொழுகை எத்தனை ரக்அத்களைக் கொண்டது?
2. வெள்ளிக் கிழமையின் சிறப்புக்களில் இரண்டைக் குறிப்பிடுக.
3. ஜுமுஆ நாளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் எவை?
4. ஜுமுஆத் தொழுகையின் மூலம் பூரணமான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் ஐந்து தருக.
5. ஜுமுஆ குத்பாவை செவிமடுப்பதால் ஏற்படும் நன்மைகளையும், புறப்பணிப்பதால் ஏற்படும் பாதிப்புகளையும் எடுத்துக்காட்டுக.

# 9

# ஜனாஸாவுக்கான கடமைகள்

காழியார் வீட்டிலிருந்து ஜனாஸா வெளியே கொண்டுவரப்படுகிறது. திரண்டிருந்த கூட்டத்தின் நடுவே மாணவர்கள் சிலரும் இருந்தனர். ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டு மக்கள் மையவாடியிலிருந்து வெளியேறும் வரை அனைத்து விடயங்களையும் கவலையோடு உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்த அம்மாணவர்கள் நிஸாம் ஆசிரியரைச் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றைத் தொடர்ந்தனர்.

**முஸ்லிம்கள் ஜனாஸாவை நாட்கணக்கில் வைத்திருக்காமல் அவசரமாக அடக்கம் செய்வது பற்றி அறிந்து கொள்ளலாமா?**

இஸ்லாம் மார்க்கமானது அவசரமாக நிறைவேற்ற வேண்டிய சில விடயங்களைச் சுட்டிக் காட்டியுள்ளது. அதிலொன்று, ஒருவர் மரணித்தால் அவரை அவசரமாக அடக்கம் செய்தல் வேண்டும் என்பதாகும். மரணித்தவர் நல்லவராக இருந்தால் அவர் செல்லுமிடம் சிறந்தது. இந்நிலையில் அவரைத் தாமதப்படுத்துவது நல்லதல்ல. மேலும், மரணித்தவரை வீட்டில் தொடர்ந்து வைத்திருப்பது வீட்டாருக்கும் உறவினருக்கும் கவலையை நீடிக்கும். அவசரமாக அடக்கம் செய்வதால் அந்த நிலை தவிர்க்கப்படுகின்றது.



**மரணித்தவரின் உடலை மற்றவர்கள் பார்ப்பது தொடர்பாக நாங்கள் வரையறைகளை வைத்துள்ளோம் அல்லவா? எல்லோருக்கும் ஜனாஸாவைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லையே?**

ஆம், முஸ்லிம்களுக்கு சில வரையறைகள் உள்ளன. ஆண் மையித்தை ஆண்களும், பெண் மையித்தைப் பெண்களும் பார்வையிடலாம். ஆயினும் 'மஹ்ரமிகள்' (திருமண முடிக்கத் தடைசெய்யப்பட்டோர்) பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

**நாம் ஜனாஸாவுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் யாவை?**

முஸ்லிம் ஒருவர் மரணித்தால் அவருக்காக நான்கு கடமைகளை நிறைவேற்றுவது மற்ற முஸ்லிம்களின் கடமையாகும்.

★ குளிப்பாட்டுதல்

★ கபனிடுதல்

★ தொழுவித்தல்

★ அடக்கம் செய்தல்

***இக்கடமைகளை நிறைவேற்றாது போனால் முழுச் சமூகமும் குற்றவாளியாகக் கணிக்கப்படும். இவ்வாறான கடமைகள் 'பர்ளு கிபாயா' எனப்படுகின்றன.***

**ஒருவர் மரணித்தவுடன் என்ன செய்ய வேண்டும்?**

ஒருவர் மரணித்ததாக உறுதியானால் முதலில் அவரது கண் இமைகளை மூடிவிட வேண்டும். பின்னர் வாயை மூடி நாடியைத் தலையுடன் சேர்த்து சீலைப் பட்டியால் கட்டிவிட வேண்டும். கால் பெருவிரல்கள் இரண்டையும் இணைத்துக் கட்டிவிட வேண்டும். மூட்டுக்களை மடித்து நிமிர்த்த வேண்டும். நெஞ்சு முதல் அடிவயிறு வரை மெதுவாக அழுத்தி வயிற்றிலுள்ள அசுத்தங்களை வெளியேற்றிய பின்னர் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். பின்னர் படுக்க வைத்து ஒரு துணியால் மூடிவிட வேண்டும். இவை ஜனாஸாவுக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய கருமங்களாகும்.

**பிறகு என்ன செய்ய வேண்டும்?**

முதலாவதாக மையித்தைக் குளிப்பாட்ட வேண்டும். மரணித்தவரின் அவ்ரத், குறைகள் மற்றும் அந்தரங்க விடயங்களை வெளிப்படுத்தாத நம்பிக்கைக்குரிய உறவினரே இதனை நிறைவேற்றுவது பொருத்தமாகும். இயலாதபோது அனுபவ சாலிகளை இணைத்துக் கொள்ளலாம். குளிர்நீர், வெந்நீர், உவர்நீர் என்பவற்றில் பொருத்தமான ஒன்றைப் பயன்படுத்துவர். இலந்தை இலையையும், சவர்க்காரத்தையும் சேர்த்துக் கொள்வர். கற்பூரத்தையும் கலந்துகொள்ளலாம். நீராட்டு முன் அசுத்தங்கள் (நஜீஸ்) ஏதுமிருப்பின் அவற்றை அகற்றிவிட வேண்டும். முதலில் வுழூச் செய்வித்து பின்னர் நீராட்டி முடிந்ததும் மென்மையான துணியால் துடைக்க வேண்டும்.

### குளிப்பாட்டிய பின்னர் என்ன செய்ய வேண்டும்?

மையித்தைக் கபனிட வேண்டும்.

### கபன் என்றால்?

மையித்திற்கு அணிவிக்கும் வெள்ளை உடை கபன் எனப்படுகிறது. இது சுத்தமான பழைய வெள்ளைப் புடைவையாகவும் இருக்கலாம். எனினும் புதிய புடைவையையே பயன்படுத்துவர். ஆண்களாயின் மூன்று துணிகளாலும், பெண்களாயின் ஐந்து துணிகளாலும் மையித்தைப் போர்த்துவர். அவ்ரத் வெளிப்படாத நிலையில் சில இடங்களில் எளிமையாக நூலோடுவர். அதற்குப் பொருத்தமாக நேர்த்தியான முறையில் துணியை வெட்டி எடுப்பர். இறுதியாகக் கபனில் வாச னையைத் தெளிப்பர். கபனிடப்பட்ட பின் தலைக்கு மேல் ஒரு கட்டும், காலுக்குக் கீழ் ஒரு கட்டும், இடுப்பில் மற்றொரு கட்டும் போடுவர். பின்னர் அடக்கம் செய்வதற்காக சந்தூக்கில் வைத்து தோளில் சுமந்து செல்வர். தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் வாகனத்தில் கொண்டு செல்வதுண்டு.



### தொழுகை எப்போது நடக்கும்?

குளிப்பாட்டி கபனிட்ட பின்னர் தொழுகை நடத்தப்படும். மையித்துக்கான தொழுகை, ஏனைய தொழுகைகளிலிருந்து சற்று வித்தியாசமானது. நின்ற நிலையிலேயே அது நிறைவேற்றப்படுகின்றது. மையித் வைக்கப்பட்ட சந்தூக்கு இமாமவர்களுக்கு முன்னால் கிடையாக வைக்கப்படும். ஆண் மையித்தாயின் முகத்துக்கு நேராகவும் பெண் மையித்தாயின் அதன் நடுப்பகுதிக்கு நேராகவும் இமாம் நிற்பார். அவருக்குப் பின்னால் மக்கள் அணியணியாக நின்று அவரைப் பின்பற்றித் தொழுவர்.

*'இந்த மையித்தின் மீது விதியான நான்கு தக்பீர்களையும் அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன்' என்ற நிய்யத்தோடு தொழுகையை ஆரம்பிப்பர். தொழுகையை நடத்துபவர் 'அல்லாஹு அக்பர்' என்று ஒலி எழுப்பியதும் மஃமூம்கள் தக்பீர் கட்டிக்கொள்வர். பின்னர் ஸூரத்துல் பாத்திஹாவை ஓதுவர்.*

*இரண்டாவது தக்பீருக்குப் பின் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வர். தொழுகையின் கடைசி அத்தஹிய்யாத்தில் இடம்பெறுகின்ற ஸலவாத் இப்றாஹீமிய்யாவை ஓதுவதே நல்லது.*

اَللَّهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ
وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيمَ وَعَلَى آلِ إِبْرَاهِيمَ ، إِنَّكَ حَمِيدٌ مَجِيدٌ

பொருள் : யா அல்லாஹ்! இப்ராஹீம் நபி மீதும் அவர்களின் வழிவந்தவர்களின் மீதும் நீ கருணை புரிந்தது போன்று முஹம்மத் நபி மீதும் அவர்களின் வழிவந்தவர்களின் மீதும் கருணை புரிவாயாக! மேலும் யா அல்லாஹ்! இப்ராஹீம் நபி மீதும் அவர்கள் வழிவந்தவர்களின் மீதும் நீ அருட்பேறுகள் பொழிந்தது போன்று முஹம்மத் நபி மீதும் அவர்களின் வழிவந்தவர்களின் மீதும் நீ அருட்பேறுகள் பொழிவாயாக! நிச்சயமாக நீயே புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன்.

(ஆதாரம்: புகாரி)

*மூன்றாவது தக்பீருக்குப் பின் மையித்துக்காகப் பிரார்த்தனை செய்யப்படும். அதன்போது பின்வரும் துஆவை ஓதுவது மிகவும் சிறப்பானது.*



**பொருள்:** இறைவா! இவரை மன்னிப்பாயாக! இவருக்கு அருள் புரிவாயாக! இவரைக் குணப்படுத்துவாயாக. இவரது தவறுகளை அலட்சியப்படுத்துவாயாக! இவர் தங்குமிடத்தை மதிப்பு மிக்கதாக ஆக்குவாயாக! இவர் நுழையும் இடத்தை விசாலமாக்குவாயாக! இவரைத் தண்ணீராலும் பனிக் கட்டியாலும் ஆலங்கட்டியாலும் கழுவுவாயாக! வெண்மையான ஆடையை அழுக்கிருந்து சுத்தம் செய்வதைப் போல் இவரை குற்றத்திருந்து சுத்தம் செய்வாயாக! இங்கிருக்கும் வீட்டை விடச் சிறந்த வீட்டையும், இங்கிருக்கும் குடும்பத்தை விடச் சிறந்த குடும்பத்தையும் இங்கிருந்த வாழ்க்கைத் துணையை விடச் சிறந்த துணையையும் இவருக்கு வழங்குவாயாக! இவரைச் சுவர்க்கத்தில் நுழை விப்பாயாக! இவரைக் கப்ரின் வேதனையிருந்தும் நரக வேதனையிலிருந்தும் காப்பாயாக!

*நான்காவது தக்பீருக்குப் பின் ஸலாம் கூறித் தொழுகையை முடிப்பர். ஸலாம் கூற முன் பின்வரும் துஆவை ஓதிக் கொள்ளலாம்*

اَللّٰهُمَّ لاَ تَحْرِمْنَا أَجْرَهُ وَلاَ تَفْتِنَّا بَعْدَهُ وَاغْفِرْلَنَا وَلَهُ

**பொருள் :** இவரது நற்செயலுக்கான கூலியை எங்களுக்குத் தடுத்து விடாதே! இவருக்குப் பின் எங்களைச் சோதனையில் ஆழ்த்தி விடாதே! எமக்கும் இவருக்கும் மன்னிப்பளிப்பாயாக.

*அதன் பின்னர் ஜனாஸாவைச் சுமந்து சென்று நல்லடக்கம் செய்வர்.*

## மையித்தைக் கப்ரில் வைத்து அடக்கம் செய்வது எவ்வாறு?



*வெறுந் தரையிலேயே மையித் வைக்கப்படும். இதற்காகத் தனியான அமைப்பில் கப்ரைத் தோண்டுவர். மையித்தின் பருமனுக்கேற்ப நீளமும் அகலமும் கொண்டதாகக் கப்ர் இருக்கும். அதில் உட்குழி, வெளிக்குழி என இரண்டு குழிகள் இருக்கும். மையித்தைக் கிப்லாவை முன்னோக்கி உட்குழியில் வைப்பர். அதன்போது மையித்தின் வலப் பக்கம் நிலத்தில் பட்டிருக்குமாறும், முதுகுப்புறம் குழியின் பக்க வாட்டை தொட்டிருக்குமாறும் இருக்கும். மையித்தை உட்குழியில் இறக்கு வதற்காகப் பட்டியொன்றை அல்லது*

பலமான சேலையைப் பயன்படுத்துவர். உட்குழியில் மையித் வைக்கப்பட்ட பின்னர் கபனில் கட்டப்பட்ட மூன்று கட்டுக்களையும் அவிழ்த்து விடுவர். வலது கன்னத்தைத் திறந்து ஒரு பிடி மண்ணை அணைத்து வைப்பர். உட்குழியைப் பலகையால் மூடுவர். வெளிக் குழியை மண்ணால் நிரப்புவர். பின்னர் மையித்துக்காகப் பிரார்த்திப்பர்.

இவ்வாறு கருத்துப் பரிமாறியதன் பின்னர், மாணவர்கள் நிஸாம் ஆசிரியருக்கு நன்றி கூறி விடை பெற்றுச் சென்றனர்.

### பயிற்சி

1. ஒரு ஜனாஸாவுக்கு நிறைவேற்ற வேண்டிய நான்கு கடமைகளையும் குறிப்பிடுக.
2. ஒருவர் மரணித்தவுடன் உடனடியாக அவருக்குச் செய்ய வேண்டிய விடயங்களை எழுதுக.
3. நான்கு தக்பீர்கள் கொண்ட ஜனாஸா தொழுகையில் ஒவ்வொரு தக்பீருக்குப் பிறகும் ஓத வேண்டிய அவ்ராதுகளை எழுதுக.
4. ஜனாஸாவில் கலந்து கொண்டபோது உங்கள் உள்ளத்தில் எழுந்த உணர்வுகளை ஒரு கட்டுரையாக எழுதுக.

### செயற்பாடு

1. ஜனாஸா தொழுகையின் பர்ளுகளைக் கேட்டறிந்து எழுதுங்கள்.
2. ஜனாஸாத் தொழுகையில் மூன்றாம் தக்பீருக்குப் பின்னர் ஓதக்கூடிய துஆவை மனனமிட்டு ஓதிக்காட்டுங்கள்

# 10

# ஸக்காத்

அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள அருட்கொடைகளுள் செல்வமும் ஒன்றாகும். அதிலிருந்து செல்வந்தர்கள் மட்டுமன்றி அனைவரும் பயன்பெற வழிசெய்ய வேண்டும். அதற்கான வழிமுறைகளுள் ஒன்றாகவே இஸ்லாம் ஸக்காத்தை அறிமுகம் செய்துள்ளது.

ஸக்காத் என்ற சொல் தூய்மை, வளர்ச்சி, அபிவிருத்தி போன்ற கருத்துக்களைத் தருகின்றது. ஸக்காத் வழங்குவதனால் அதனை வழங்குபவரின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைகின்றது. செல்வம் பாதுகாப்புப் பெறுகிறது. அவரது உள்ளம் தூய்மை பெற்று தயாளம், பிறர் நலம் பேணல் போன்ற நற்குணங்களால் வளர்ச்சி பெறுவதுடன் சுயநலம், கர்வம், கருமித்தனம் போன்ற துர்க்குணங்களில் இருந்தும் தூய்மை பெறுகின்றது.

**ஒரு முஸ்லிம் தன்னிடமுள்ள சொத்து, செல்வங்களில் இருந்து குறிப்பிட்ட ஓர் அளவை அல்குர்ஆன் வரையறுத்துக் குறிப்பிடும் எட்டுப் பிரிவினரிடையே தர்மமாக வழங்குது இஸ்லாமிய வழக்கில் ஸகாத் எனப்படுகின்றது.**

இது இஸ்லாத்தின் அடிப்படை வணக்கங்களுள் ஒன்றாகவும் இஸ்லாமியப் பொருளாதார நடவடிக்கைகளுள் முக்கியமானதோர் அம்சமாகவும் காணப்படுகின்றது. இதனைக் கூட்டாக நிறைவேற்றுவதை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

அல்குர்ஆனில் சுமார் 83 இடங்களில் தொழுகையோடு இணைத்து ஸக்காத் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஸக்காத்தை நிறைவேற்றாதுவிட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் அல்குர்ஆனும் அல் ஹதீஸும் எச்சரிக்கை செய்துள்ளன.

''நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தும் ஸக்காத்தைக் கொடுத்தும் வாருங்கள்.'' (2: 110)

''மேலும், பொன்னையும் வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு அவற்றை இறைவழியில் செலவிடாதிருப்பவர்களுக்கு நோவினை செய்யும் வேதனையுண்டு என்று (நபியே!) நீர் கூறும்! (நபியே!) அந்த நாளில் (அவர்கள் சேமித்து வைத்திருந்த செல்வத்தை) நரக நெருப்பிலிட்டுக் காய்ச்சி அதைக் கொண்டு அவர்களின் நெற்றிகளிலும் விலாப்புறங்களிலும் முதுகுகளிலும் சூடு போடப்படும். (மேலும்) இதுதான் நீங்கள் உங்களுக்காகச் சேமித்து வைத்தவை. எனவே, நீங்கள் சேமித்து வைத்ததைச் சுவைத்துப் பாருங்கள் என்று கூறப்படும்.'' (9: 34, 35)

''ஸக்காத் மூலம் நீங்கள் உங்கள் செல்வங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.'' (அபூதாவூத்)

''ஸக்காத்தை வழங்காது தடுத்துக்கொள்ளும் சமூகத்தினரை அல்லாஹ் பஞ்சத்தைக் கொண்டு சோதிப்பான்.'' (தபரானி)

**ஸக்காத் கடமையை முறையாக நிறைவேற்றுவதால் கிடைக்கக்கூடிய சில நன்மைகள்**

★ சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைதல்

★ செல்வம் பெருகுதல்

★ வறுமை நீங்குதல்

★ குற்றச் செயல்கள் குறைதல்

★ பரக்கத் ஏற்படுதல்

★ மறுமையில் ஈடேற்றம் கிடைத்தல்

★ அன்பு வளர்ந்து குரோதம் நீங்குதல்

★ ஒருவர் தனது செல்வத்தில் அல்லாஹ்வுக்காகச் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றிய உளத் திருப்தியைப் பெறுதல்

**ஸக்காத் விதியாவதற்கான நிபந்தனைகள் (ஷர்த்துகள்)**

1. முஸ்லிமாக இருத்தல்
2. சுதந்திரவானாக இருத்தல்
3. பொருள் உரிமை பெற்றிருத்தல்
4. நிஸாபை அடைந்திருத்தல்
5. வருடம் பூர்த்தியாக இருத்தல் (ஹவ்ல்)
6. சொத்து வளர்ச்சியடைவதாக இருத்தல்
7. அடிப்படைத் தேவைகளுக்கு மேலதிகமாக இருத்தல்

**ஸக்காத் விதியாகும் பொருட்கள்:**

1. தங்கம், வெள்ளி, பணம்
2. தானியங்கள் (கோதுமை, நெல் போன்றன)
3. கால்நடைகள் (ஆடு, மாடு, ஒட்டகம்)
4. பழவகைகள் (பேரீச்சை, திராட்சை)
5. வியாபாரப் பொருட்கள்

## தங்கம், வெள்ளி, நாணயங்கள்

தங்கத்தின் மீது ஸக்காத் கடமையாகும் ஆகக் குறைந்த நிஸாப் 20 மிஸ்கால் அல்லது அதற்குச் சமமான 85 கிராம் நிறையாகும். இதற்கு இரண்டரை வீதம் ஸக்காத் வழங்கப்பட வேண்டும்.

வெள்ளிக்கான ஆகக்குறைந்த நிஸாப் ஐந்து ஊக்கியாக்கள் அல்லது அதற்குச் சமமான 595 கிராம் நிறையாகும். அதிலிருந்து இரண்டரை வீதம் ஸக்காத் வழங்கப்பட வேண்டும்.

பணத்திற்கான நிஸாப் தங்கம் அல்லது வெள்ளியின் நிஸாபை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும். இதிலிருந்து இரண்டரை வீதம் வழங்கப்பட வேண்டும்.

## கால்நடைகள் (ஆடு, மாடு, ஒட்டகை)

**ஆடுகளுக்குரிய ஆரம்ப நிஸாப் 40 ஆடுகளாகும்.**

| | ஆடுகளின் எண்ணிக்கை | வழங்க வேண்டிய பெண் ஆடுகள் |
|---|---|---|
| 1. | 40 முதல் 120 ஆடுகள் வரை | 01 பெண் ஆடு |
| 2. | 121 முதல் 200 ஆடுகள் வரை | 02 பெண் ஆடுகள் |
| 3. | 201 முதல் 399 ஆடுகள் வரை | 03 பெண் ஆடுகள் |
| 4. | 400 முதல் 499 ஆடுகள் வரை | 04 பெண் ஆடுகள் |

ஆடுகளின் எண்ணிக்கை 400ஐ அடைந்து விட்டால் அதற்கு மேலதிகமான ஒவ்வொரு நூறு ஆடுகளுக்கும் ஒரு பெண் ஆடு வீதம் வழங்கப்பட வேண்டும்.

**மாடுகளுக்குரிய ஆரம்ப நிஸாப் 30 ஆகும்.**

30 மாடுகளுக்கு ஒரு வயதுடைய ஒரு காளை மாடு ஸக்காத் ஆக வழங்கப்பட வேண்டும். 40 மாடுகள் இருப்பின் அதற்கு இரண்டு வயதுள்ள ஒரு பசு ஸக்காத்தாக வழங்கப்பட வேண்டும். இதற்கு மேற்படின் இவ்விரு இலக்கங்களினதும் தனித்தனிப் பெருக்கங்களுக்கோ அல்லது கூட்டுத் தொகைகளின் பெருக்கங்களுக்கோ ஸக்காத் கணிக்கப்பட வேண்டும். உதாரணம் 65 மாடுகள் இருப்பின் ஒரு வயதுள்ள இரண்டு காளை மாடுகள் வழங்கப்பட வேண்டும்.

**ஒட்டகத்துக்கான ஆரம்ப நிஸாப் 05 ஆகும்.**

ஐந்து ஒட்டகங்களுக்கு 01 ஆடு என்று தொடங்கி 20 ஒட்டகங்களுக்கு 04 ஆடுகள் என்பது வரை சென்று, ஒட்டகங்களின் எண்ணிக்கை 25 ஐ அடைந்து விட்டால் ஒரு வயதுள்ள ஒரு பெண் ஒட்டகை கொடுக்க வேண்டும்.

### தானியங்கள்





தானிய வகைகளுக்கான நிஸாப் ஐந்து வஸகுகள் ஆகும். விவசாய உற்பத்திகளான கோதுமை, நெல், போன்ற தானிய வகைகளை அறுவடை செய்ததும் அவை பாவனைக்குத் தயார் செய்யப்பட்ட நிலையில் ஐந்து வஸக் (தற்காலத்தில் சுமார் 675 கிலோ கிறாம்) அளவை எட்டுமாயின் அதில் ஸக்காத் கடமையாகும்.

விவசாய உற்பத்தியானது உற்பத்திச் செலவினங்களுக்கு உட்பட்டதாயின் ஐந்து வீதமும் முழுமையாக இயற்கை வளங்களால் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் பத்து வீதமும் அறுவடை முடிந்ததுமே வழங்கப்பட வேண்டும்.

### பழ வகைகள் (பேரீச்சை, திராட்சை)





தானியத்துக்குரிய ஸக்காத் விதிமுறைகள் யாவும் பழவகைகளுக்கும் உரியதாகும்.

### வியாபாரப் பொருட்கள்:

வர்த்தக நடவடிக்கையில் ஒரு வருடப் பூர்த்தியின்போது வியாபாரப் பொருட்களின் சந்தைப் பெறுமானம் பணத்திற்கான நிஸாபை எட்டியிருந்தால் அதிலிருந்து இரண்டரை வீதம் ஸக்காத் வழங்கப்பட வேண்டும்.

இவற்றுடன் புதையல் போன்றவற்றுக்கு நிஸாப் மற்றும் ஹவ்ல் என்பன கிடையாது. அவை கிடைக்கப் பெற்றதும் அவற்றிலிருந்து ஐந்தில் ஒரு பகுதி ஸக்காத்தாக வழங்கப்படல் வேண்டும்.

## *ஸக்காத் பெறத் தகுதியுடையவர்கள்*

*ஸக்காத் பெறத் தகுதியுடையோர் யாவர் என்பதை அல்குர்ஆன் தெளிவாக விபரித்துள்ளது.*

''தானம் எல்லாம் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், தானத்தை வசூல் செய்யும் ஊழியர்களுக்கும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், கடனில் மூழ்கியவர்களுக்கும், அல்லாஹ்வின் பாதையில் ஈடுபடுவோருக்கும், வழிப்போக்கர்களுக்கும் உரித்தானதாக அல்லாஹ் ஏற்படுத்தியதாகும். அல்லாஹ் (அனைத்தையும்) மிக அறிந்தவனும் ஞானமுடைய வனாகவும் இருக்கிறான்.'' (9:60)

***இஸ்லாத்தின் மிக முக்கியமான இக்கடமையைத் தெளிவாக விளங்கிச் சரிவர நிறைவேற்றும் வாய்ப்பினை அல்லாஹ் அனைவருக்கும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக!***

### பயிற்சி

*1. ஸக்காத் என்ற பதத்தின் மொழிக் கருத்து யாது?*

*2. ஸக்காத் விதியாவதற்கான நிபந்தனைகள் யாவை?*

*3. ஸக்காத்தின் பயன்களைக் குறிப்பிடுக.*

*4. ஸக்காத் விதியாகும் பொருட்களைக் குறிப்பிடுக.*

*5. ஸக்காத் பெறத் தகுதியானோரைப் பட்டியற்படுத்துக.*

### செயற்பாடு

தொழுகையுடன் ஸக்காத் இணைத்துக் கூறப்பட்ட அல் குர்ஆன் வசனம் ஒன்றையும் ஸக்காத் பற்றி வந்துள்ள ஹதீஸ் ஒன்றையும் எழுதிக் காட்சிப்படுத்துக.

# 11

# ஹஜ் கிரியைகளும் முக்கியத்துவமும்



''ஹஜ்ஜையும் உம்றாவையும் அல்லாஹ்வுக்காகப் பூர்த்தி செய்யுங்கள்.'' (2: 196)

***ஹஜ் என்பது மக்காவில் உள்ள புனிதத் தலங்களுக்குச் சென்று வரையறுக்கப்பட்டுள்ள கிரியைகளைக் குறிப்பிட்ட காலத்தில் செய்வதாகும்.***

இது ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டில் கடமையாக்கப்பட்டது என்பதே அதிகமானோரின் கருத்தாகும். முஸ்லிமான, சுதந்திரமுள்ள, புத்திசுவாதீனமுள்ள, பருவ வயதையடைந்த வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் தங்கள் வாழ்வில் ஒரு தடவையேனும் ஹஜ் செய்வது கட்டாயக் கடமையாகும்.

நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் குடும்பத்தினர் அல்லாஹ்வின் கட்டளைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகப் பல்வேறு தியாகங்களைச் செய்தனர். தங்களது உயிர், உறவுகளைக்கூட இழப்பதற்கு முன்வந்தனர். அந்நிகழ்வுகளின் அடையாளமாகவே ஹஜ் திகழ்கிறது.

நபிமார்கள் பல்வேறு விதத்திலும் அல்லாஹ்வால் சோதிக்கப்பட்டோராவர். இவர்களுள் மிகவும் சோதிக்கப்பட்ட ஒருவர்தான் நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள். இச்சோதனைகளின்போது சகலவற்றிலும் அவர்கள் வெற்றி கண்டார்கள். இவர்களினதும் இவர்களது குடும்பத்தினரதும் தியாக வரலாற்றை நினைவுபடுத்தக்கூடிய ஒரு கடமையாகவே ஹஜ் காணப்படுகின்றது. இவ்வகையில் ஹஜ்ஜுடன் தொடர்பான சில சட்டங்களைச் சுருக்கமாக நோக்குவோம்.

### ஹஜ்ஜின் அர்கான்கள் (பர்ளுகள்)

- நிய்யத் வைத்தல் (இஹ்ராம் தரித்தல்)
- துல்ஹஜ் 9 ஆம் நாள் அரபாவில் தரித்தல்
- தவாபுல் இபாழாவை நிறைவேற்றல்
- ஸஃயு செய்தல்
- தலைமுடி களைதல்
- ஒழுங்குமுறையாக செய்தல்



### ஹஜ்ஜின் வாஜிபுகள்

1. குறிப்பிட்ட மீக்காத்தில் நிய்யத் வைத்தல். (இலங்கை ஹாஜிகள் யலம்லம் என்ற இடத்தில் நிய்யத் வைப்பர்)
2. துல்ஹஜ் பத்தாம் நாள் இரவு முஸ்தலிபாவில் தங்குதல்.
3. அய்யாமுத் தஷ்ரீக் எனப்படும் (துல்ஹஜ் 11, 12, 13) ஆகிய நாட்களில் மினாவில் தங்குதல்.
4. துல்ஹஜ் பத்தாம் நாள் ஜம்றதுல் அகபாவில் ஏழு கற்களை எறிதல்.
5. அய்யாமுத் தஷ்ரீக் தினங்களில் மதியத்துக்குப் பின்னர் ஜம்ரதுல் அகபா, ஜம்ரதுல் வுஸ்தா, ஜம்ரதுல் ஊலா ஆகிய மூன்று ஜம்ராக்களிலும் ஏழேழு கற்கள் எறிதல்.
6. தவாபுல் விதாவை நிறைவேற்றுதல்.

### ஹஜ்ஜின் ஸுன்னத்துகள்

1. நிய்யத்துக்கு முன்பும், மக்காவுக்குள் நுழைய முன்பும், அரபா, முஸ்தலிபாக் களில் தங்க முன்பும், ஜம்ராக்களில் கல்லெறிய முன்பும், தவாப் செய்ய முன்பும் குளித்துக் கொள்ளல்.
2. நிய்யத்துக்கு முன் உடம்பில் மணம் பூசிக் கொள்ளல்.
3. நிய்யத்தை வாயால் மொழிதல்.
4. தல்பியா ஓதுதல்.
5. மக்காவுக்குள் நுழைந்ததும் தவாப் செய்தல். (தவாபுல் குதூம்)

6. துல்ஹஜ் 9 ஆம் நாள் இரவில் மினாவில் தங்குதல்.

7. குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட துஆக்களை ஓதுதல்.

8. ஸம்ஸம் நீரை அதிகமாக அருந்துதல்.

### இஹ்ராம் தரித்த பின் தவிர்ந்து கொள்ள வேண்டியவை

1. முடியை சிரைத்தல் அல்லது கத்தரித்தல்.
2. நகம் வெட்டுதல்.
3. ஆண்கள் தமது தலையை மறைத்தல்.
4. ஆண்கள் தைத்த ஆடைகளை அணிதல்.
5. நறுமணம் பூசுதல்.
6. தரையில் வாழும் மிருகங்களை வேட்டையாடுதல்.
7. திருமணம் முடித்தல்.
8. தாம்பத்திய உறவில் ஈடுபடல்.

### ஹஜ் கடமையை மூன்று முறைகளில் நிறைவேற்றலாம்:

**1. அல் இப்றாத்:** இது ஹஜ்ஜை மட்டும் நிறைவேற்றும் முறையாகும்.

**2. அத்தமத்துஉ:** இது உம்றாவை செய்து விட்டு இஹ்ராம் களைந்து மீண்டும் ஹஜ்ஜுக்குத் தனியாக இஹ்ராம் தரித்து (இரண்டையும் சேர்த்து) செய்யும் முறையாகும்.

**3. அல் கிறான்:** இது ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்து ஒரே இஹ்ராமில் செய்வதாகும்.

இம் மூன்று முறைகளுள் ஏதாவதொன்றைப் பின்பற்றி ஒருவர் தனது ஹஜ்ஜை நிறைவேற்றலாம்.

### ஹஜ் செய்யும் முறை

துல்ஹஜ் எட்டாம் நாளோடு ஹஜ் ஆரம்பமாகின்றது. அன்று ஹாஜிகள் குளித்து, சுத்தமாகி மணம்பூசி நிய்யத்துடன் இஹ்ராம் தரித்து தங்கியிருக்கும் இடத்திலிருந்து தல்பியா முழங்கியவாறு மினாவை அடைவர். அங்கு ளுஹரையும் அஸரையும், மஃரிபையும், இஷாவையும், ஸுப்ஹையும் தொழுவர். நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டு ரக்அத்தாகச் சுருக்கித் தொழுவது ஸுன்னத் ஆகும். அங்கிருந்து ஒன்பதாம் நாள் சூரியன்

உதித்த பின் அரபாவுக்குச் செல்வர். அங்கு ளுஹருடன் அஸரையும் சேர்த்து சுருக்கித் தொழுவர். அதிகமான நேரங்களை நீண்ட துஆக்களில் கழிப்பர். சூரியன் மறைந்ததும் அங்கிருந்து முஸ்தலிபாவுக்குப் பயணமாவர். அங்கு மஃரிபையும் இஷாவையும் சேர்த்துத் தொழுவர். இஷாவை சுருக்கித் தொழுவர். இரவில் அங்கு தரித்திருப்பர்.

பத்தாம் நாள் சுப்ஹ் தொழுகையை முஸ்தலிபாவில் நிறைவேற்றிவிட்டு மினாவுக்குப் புறப்படுவர். (ஜம்ராக்களில் எறிவதற்காகக் கற்களையும் பொறுக்கிக் கொள்வர்) மினாவிலிருந்து சென்று (ளுஹருக்கு முன்னர்) ஜம்ரதுல் அகபாவில் ஏழு கற்களை எறிவர். பின்னர் தலைமுடிகளை (பெண்கள் தலைமுடியில் சிறிதளவை) கத்தரித்துக் கொள்வர். அன்று பிறை 10 பெருநாள் தினம் என்பதால் இஹ்ராம் உடையைக் களைந்து சாதாரண உடையை அணிவர். இதன்பின் மக்கா சென்று தவாபுல் இபாழாவை நிறைவேற்றுவர். இதனைப் பிற்படுத்தியும் நிறைவேற்றலாம்.

துல்ஹஜ் 11, 12, 13 நாள்களில் மினாவில் தங்கி ளுஹருக்குப் பின்னர் மூன்று ஜம்ராக்களிலும் கல்லெறிவர். ஏற்கனவே தவாபுல் இபாழாவை நிறைவேற்றாதவர்கள் கஃபாவுக்குச் சென்று அதனை நிறைவேற்றுவர். தவாபுக்குப் பின்னர் ஸஈ செய்ய வேண்டும். இறுதியாக மக்காவிலிருந்து ஊருக்கோ, மதீனாவுக்கோ செல்லுமுன் தவாபுல் விதாவை நிறைவேற்றுவர்.

### பயன்கள்

**''ஹஜ் செய்ய வசதியிருந்தும் அதனை நிறைவேற்றாதவன் யஹூதியாகவோ நஸாராவாகவோ மரணிப்பான்.'' (திர்மிதி)** என்றும் **''சரியான முறையில் ஹஜ்ஜை நிறைவேற்றியவர் அன்று பிறந்த பாலகன் போல் மீள்கிறார்.'' (புஹாரி)** என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஹஜ்ஜுக்காக வீட்டிலிருந்து புறப்பட்டு வழியில் மரணித்துவிட்டாலும் அவருக்கு ஹஜ் செய்த நற்கூலி கிடைக்கும்.



இவை மட்டுமன்றி ஹஜ்ஜின் மூலம் ஓர் அடியான் தனது முழுமையான அடிமைத்துவத்தை அல்லாஹ்விடம் வெளிப்படுத்துகிறான். அதற்காகத் தனது நேரம், பொருள், உடல், உள்ளம் ஆகிய அனைத்தையும் ஈடுபடுத்துகிறான். நன்மையான காரியங்களில் நேரத்தைச் செலவிடுகிறான். இறை சிந்தனையில் இன்பம் காண்கின்றான். தக்வாவை வளர்த்துக்கொள்கிறான். சகோதர முஸ்லிம்களுடன் ஒன்றிணைகிறான்.

**சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல், சகித்துக் கொள்ளல், கூட்டு வாழ்வு, மறுமை நினைவு போன்றன ஹஜ்ஜின் மூலம் பயிற்றுவிக்கப்படுகின்றன.**

**பயிற்சி**

1. ஹஜ்ஜின் பர்ளுகளையும் வாஜிபுகளையும் வெவ்வேறாகக் குறிப்பிடுக.
2. ஹஜ்ஜின் மூலம் ஏற்படும் சமூகப் பயன்கள் நான்கைத் தருக.
3. ஹஜ் கடமை நிறைவேற்றப்படும் மூன்று முறைகளையும் குறிப்பிடுக.
4. ஹஜ் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு கடமையாக்கப்பட்டது?

**செயற்பாடு**

ஹஜ்ஜுக்குச் சென்று வந்த ஒருவரைச் சந்தித்து அவர் பெற்ற அனுபவங்களைக் கேட்டறிந்து எழுதுங்கள்.

# 12

# நேரம் பேணல்



அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள அருட்கொடைகளுள் நேரம் முதன்மையானது. எந்த ஒரு சொத்தோ, செல்வமோ மனித ஆயுளின் ஒரு வினாடிக்கு ஈடாகாது. அவனது இம்மை - மறுமை வாழ்வின் வெற்றி - தோல்வியைத் தீர்மானிப்பதில் நேரத்தின் பயன்பாடு குறிப்பிடத்தக்கதாகும்.

நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அல்லாஹ் அதன் மீது சத்தியம் செய்துமுள்ளான். **''காலத்தின் மீது சத்தியமாக''** (103: 01) **''விடியற்காலையின் மீது சத்தியமாக''** (89: 01), **''காலையின் மீது சத்தியமாக அது தெளிவாகிய போது''** (81: 18), **''முற்பகல் மீது சத்தியமாக''** (93: 01)

நேரம், அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள ஓர் அமானிதமுமாகும். இது தனித்துவம் மிக்கதோர் அருட்கொடை. அதனைக் கட்டுப்படுத்தவோ, அது இழக்கப்பட்டால் அதனை மீளப் பெற்றுக்கொள்ளவோ முடியாது. இதனையே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பின்வரும் ஹதீஸ் உணர்த்துகின்றது.

''மறுமையில் நான்கு விடயங்களுக்குப் பதிலளிக்காத வரையில் எந்த ஒரு மனிதனாலும் நகர முடியாது. உனது வாலிபத்தை எவ்வாறு கழித்தாய்? அறிவை எவ்வாறு பயன்படுத்தினாய்? செல்வத்தை எவ்வாறு சம்பாதித்து, எவ்வாறு செலவழித்தாய்? வாழ்நாளை எவ்வாறு பயன்படுத்தினாய்?'' (திர்மிதி).

நேரத்தை விரயம் செய்வது மரணத்தை விடவும் அபாயகரமானது. ஏனெனில், மரணம் மனிதனை வாழ்வின் ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்கு நகர்த்துகிறது. ஆனால் நேர விரயமோ வாழ்வின் இலக்கையே தகர்த்துத் தோல்விக்கு இட்டுச் செல்கிறது.

இஸ்லாத்தின் அடிப்படை இபாதத்கள் நேரத்துடன் தொடர்புற்றிருப்பது இதன் முக்கியத்துவத்தை மேலும் உணர்த்துகின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருவர் வந்து ''அல்லாஹ்வின் தூதரே, நற்செயல்களில் இறைவன் அதிகம் விரும்புவது எது?'' என வினவ, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதற்கு ''தொழுகையை ஆரம்ப நேரத்தில் தொழுவதாகும்'' என்று பதிலளித்தார்கள். (முஸ்லிம்)

''அல்லாஹுத்தஆலா படைத்த நாட்களில் சில விஷேட பொழுதுகள் உள்ளன. அவற்றை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அவற்றைப் பயன்படுத்திக் கொண்டவருக்கு இதன் பின்னர் வாழ்க்கையில் நஷ்டமே கிடையாது'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மற்றொரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள். (தபரானி)

வாழ்வில் வெற்றி பெற வேண்டுமாயின் நேரத்தினை முகாமை செய்ய வேண்டியது அவசியமாகும். இதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு வலியுறுத்தினார்கள்.

''ஐந்து விடயங்கள் நிகழ முன்னர், ஐந்து விடயங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மரணத்திற்கு முன்னர் வாழ்வை; நோய்க்கு முன்னர் ஆரோக்கியத்தை; வேலைப்பளுவுக்கு முன்னர் ஓய்வை; முதுமைக்கு முன்னர் இளமையை; வறுமைக்கு முன்னர் செல்வத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.'' (ஹாகிம்)

''அல்லாஹ் வழங்கிய இரண்டு நிஃமத்துக்கள் குறித்து அதிகமானவர்கள் மிகவும் கவனயீனமாக இருக்கிறார்கள். அவை ஆரோக்கியமும் ஓய்வும் ஆகும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (புஹாரி)

நேரத்தை உரிய முறையில் பயன்படுத்திச் சாதனை புரிந்தவர்களை வரலாறு நெடுகிலும் காணலாம். கலீபா அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது இரண்டு வருட குறுகிய ஆட்சிக் காலத்தில் பல முக்கிய சாதனைகளை நிகழ்த்தினார்கள். அல்குர்ஆனை ஒன்று திரட்டுதல், போலி நபிமார்களின் சதியை முறியடித்தல், இஸ்லாமிய ஆட்சியை பலப்படுத்தல் போன்றன அவற்றுள் சிலவாகும்.

கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்களது ஆட்சிக் காலம் சுமார் இரண்டு வருடங்களாகும். ஹதீஸ்களை ஒன்று திரட்டுவதற்கான பணியை ஆரம்பித்தமை, ஸக்காத் மூலம் வறுமையற்ற செல்வச் செழிப்புமிக்க நாடாக இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை மாற்றியமைத்தமை போன்றன குறுகிய காலத்தில் அவர் செய்த முக்கிய சில சாதனைகளாகும். நாற்பது வயதில் மரணித்த இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 500க்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். இவ்வாறான சாதனைகளுக்கு காரணம் அவர்கள் நேரத்தை உரிய முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தியமையாகும்.

நேரத்தை உரிய முறையில் பயன்படுத்தி வெற்றியடைவதற்கு நாம் பின்வரும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்:

- நேரம் ஓர் அமானிதம். அது குறித்து நாம் மறுமையில் விசாரிக்கப்படுவோம் என்பதை நினைவில் கொள்ளல்.
- நேரம் குறைவாகவும் கடமைகள் அதிகமாகவும் உள்ளன என்பதை உணர்ந்து செயற்படுதல்.
- தொழுகை முதலான அமல்களை உரிய நேரத்தில் நிறைவேற்றுதல்.
- திலாவத்துல் குர்ஆன், திக்ர், காலை மாலை அவ்ராதுகள் முதலானவற்றை தொடராக ஓதிவருதல்.
- அன்றாடம் நிறைவேற்ற வேண்டிய செயல்களைத் திட்டமிட்டுக் கொள்ளல்.
- தினமும் நிறைவேற்றிய செயல்கள் குறித்து ஒவ்வொரு நாள் முடிவிலும் சுயவிசாரணை செய்துகொள்ளல்.
- கற்றல் நடவடிக்கைகளைத் தினமும் திட்டமிட்டு நிறைவேற்றுதல்.
- ஓய்வு நேரங்களைப் பயனுள்ள வழிகளில் செலவிடுதல்.
- பிரயோசனமற்றவற்றிலிருந்து விலகி நடத்தல்.
- சோம்பலை அகற்றி உற்சாகத்தை ஏற்படுத்திக் கொள்ளல்.

**நேரத்தை உரியவாறு பயன்படுத்துவதற்கு நாம் இளம் வயதிலிருந்தே பழகிக்கொள்ள வேண்டும். உரிய நேரத்திற்கு உரிய வேலைகளை நிறைவேற்றுவதன் மூலம் நேர முகாமைத்துவத்தைப் பேணி வாழ்வொழுங்கை வடிவமைப்பது இம்மை, மறுமை வெற்றிக்குத் துணையாக அமையும்.**

### பயிற்சி

1. நேரம் குறித்து அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு ஆயத்துக்களை எழுதுக.
2. நேரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இரண்டு ஹதீஸ்களை எழுதுக.
3. நேரத்தை விரயம் செய்வது மரணத்தை விட அபாயகரமானது ஏன் என்பதை எழுதுக.
4. நேரம் விரயமாகக் கழியும் சந்தர்ப்பங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

### செயற்பாடு

1. தினமும் நிறைவேற்ற வேண்டிய கடமைகள், பொறுப்புக்கள் அடங்கிய நேர அட்டவணை ஒன்றைத் தயாரியுங்கள்.
2. வார இறுதி நாளொன்றைப் பயன்படுத்துவதற்கான திட்டமொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துங்கள்.
3. நேரத்தை விரயமாக்கும் உமது நண்பருக்கு 'நேரம் வாள் போன்றது, நீ அதனை உரிய முறையில் பயன்படுத்தாவிட்டால் அது உன்னை வெட்டிவிடும்' என்பதை வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுங்கள்.

# 13

# மஸ்ஜித்

முஸ்லிம்களின் வாழ்வோடு என்றும் பின்னிப்பிணைந்த இடம் மஸ்ஜிதாகும். அது அருள் நிறைந்த இடம்; அமைதியும் பக்தியும் பிரவாகிக்கும் இடம்; மலக்குகள் ஆஜராகும் இடம். எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் மஸ்ஜிதுடன் பலமானதும் உணர்வு பூர்வமானதுமான உறவை வைத்துக்கொள்ளல் வேண்டும். அது ஈமானின் வெளிப்பாட்டிற்கான ஓர் அடையாளமாகும். மறுமையில் ஈடேற்றம் பெறுவதற்கான ஒரு வழியுமாகும்.

*''எவருடைய உள்ளம் மஸ்ஜிதோடு நெருக்கமாகப் பிணைந்திருக்கின்றதோ அவர் மறுமையில் அர்ஷின் நிழலின் கீழ் இருப்பார்'' (புஹாரி)*

அல்லாஹ்வை வழிபடுவதற்குப் பயன்படுத்துகின்ற இறை இல்லங்களையே மஸ்ஜித் என்ற பதம் குறிக்கிறது. ஸுஜூத் செய்யுமிடம் என்பது இதன் நேரடி மொழிக் கருத்தாகும்.

**''நிச்சயமாக மஸ்ஜிதுகளெல்லாம் அல்லாஹ்வை வணங்குவதற்காக உள்ளன.''** (72: 18)

அல்லாஹ் மஸ்ஜிதுகளின் அந்தஸ்தை உயர்த்தியும் மகிமைப்படுத்தியும் அவற்றை தனக்கே உரியன எனக் குறிப்பிட்டிருப்பதும் இவ்வுலகில் தனக்கு மிகவும் விருப் பத்துக்குரிய இடம் மஸ்ஜிதே எனச் சிலாகித்துக் கூறியிருப்பதும் அதன் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறான சிறப்புக்கள் நிறைந்த இறை இல்லங்களின் புனிதத்து வத்தைப் பேணுவதும் அதற்கே உரித்தான கண்ணியத்தை வழங்குவதும் அதைப் பாதுகாப்பதும் எமது கடமையாகும்.

அவ்வாறே மஸ்ஜித்களில் பேணி நடக்க வேண்டிய ஒழுக்கங்களை இஸ்லாம் கற்றுத்தந்துள்ளது. அவை ''ஆதாபுல் மஸ்ஜித்'' என அழைக்கப் படுகின்றன.



### 1. வணக்கங்களை நிறைவேற்றுமிடம்

மஸ்ஜிதுகள் நாம் இறைவனுக்காக வணக்க வழிபாடுகளை மேற்கொள்ளும் புனிதமான இடங்களாகும். தொழுவது, அல்லாஹ்வை நினைவுகூர்வது, அல்குர்ஆனை ஓதுவது போன்றன அங்கு இடம்பெற வேண்டிய மிக முக்கிய இபாதத்களாகும்.

**''அவ்வீடுகளில் அல்லாஹ்வின் திருப்பெயர்கள் கூறவும், அதை கண்ணியப் படுத்தவும் அவன் கட்டளையிட்டிருகின்றான்.'' (24: 36)**

''நிச்சயமாக அவை மஸ்ஜிதுகள் அல்லாஹ்வை திக்ரு செய்வதற்கும் தொழு வதற்கும் அல்குர்ஆனை ஓதுவதற்குமான இடங்களாகும்'' (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



### 2. தஹிய்யதுல் மஸ்ஜித் தொழுதல்

இஸ்லாத்தில் எந்தவொரு இடத்திற்கும் இல்லாத முக்கியத்துவமும் புனிதத்துவமும் மஸ்ஜிதுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆகவே தான் மஸ்ஜிதுக்குள் நுழைந்ததும் ஒருவர் காணிக்கையாக இரண்டு ரக்அத்துக்கள் தொழுது செல்லுமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டார்கள்.

''உங்களில் ஒருவர் மஸ்ஜிதினுள் நுழைந்தால் இரண்டு ரக்அத்துக்கள் தொழாமல் மஸ்ஜிதில் அமர வேண்டாம்.'' (புஹாரி)

வெள்ளிக்கிழமை தினமொன்றில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்திக்கொண்டிருந்த வேளை மஸ்ஜிதினுள் நுழைந்து உட்கார்ந்த ஸுலைக்கா அல்அத்பானி என்ற ஸஹாபியை நோக்கி இரண்டு ரக்அத்துக்கள் தொழுதுவிட்டு அமருங்கள் எனக் கட்டளை பிறப்பித்தார்கள். எனவே மஸ்ஜிதுக்குள் நுழையும் ஒருவர் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவது ஸுன்னத்தான செயலாகும்.

இது தஹிய்யத்துல் மஸ்ஜித் (மஸ்ஜிதுக்கான காணிக்கைத் தொழுகை) எனப்படும். இதனை மஸ்ஜிதுக்கேயுரிய சிறப்பம்சம் எனவும் குறிப்பிடலாம்.

ஆனால் மஸ்ஜிதுல் ஹராமில் நுழைபவர் இத்தொழுகைக்குப் பதிலாகத் தவாப் செய்தலே அதற்குரிய தஹிய்யத்துல் மஸ்ஜித் ஆகும்.

### 3. தூய்மை பேணல்

மஸ்ஜிதினுள் நுழைபவரது உடலும் உடையும் தூய்மையாக இருக்க வேண்டும். நஜீஸுடனோ, துர்வாடைகளுடனோ நுழைவதை இஸ்லாம் தடுத்துள்ளது.

**''ஆதமுடைய மக்களே மஸ்ஜிதுகளில் (ஆடைகளினால்) உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்.'' (7: 31)** என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

எப்போதும் வெண்மையான ஆடைகள் அணிவதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் வரவேற்றுள்ளார்கள்.

''நீங்கள் வெள்ளை நிறமான ஆடைகளை அணியுங்கள். ஏனெனில் அதுவே உங்கள் ஆடைகளில் மிகவும் சிறப்பானதாகும். மேலும் உங்களில் மரணித்தவர்களை அதனால் கபன் செய்யுங்கள்.'' (அபூதாவூத்)

### 4. மஸ்ஜிதுக்குள் நுழையும்போதும் வெளியேறும் போதும் பிரார்த்தித்தல்:

உங்களில் எவரேனும் மஸ்ஜிதுக்கு வந்தால் அவர் முதலில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் கூற வேண்டும். பிறகு வலது காலை வைத்து

اَللَّهُمَّ افْتَحْ لِيْ أَبْوابَ رَحْمَتِكَ

**''இறைவா எனக்கு நீ உன் கருணையின் வாசலைத் திறந்து வைப்பாயாக''** என்று பிரார்த்திக்க வேண்டும். (முஸ்லிம்)

மஸ்ஜிதினுள் இருந்து வெளிச்சென்றால் முதலில் இடது காலை வைத்து

اَللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ

**''இறைவா நான் உனது அருளை உன்னிடம் வேண்டுகிறேன்''** என்று பிராத்தித்துக் கொள்ள வேண்டும். (முஸ்லிம்)

### 6. மஸ்ஜிதில் அமைதி பேணல்

மஸ்ஜிதுகள் இறையில்லங்கள். எனவே அங்கு அமைதியாகவும் பணிவாகவும் நடந்து கொள்வதும் அதன் கண்ணியத்தைப் பேணி நடப்பதும் ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

ஒரு முறை மஸ்ஜிதுன் நபவியில் இரண்டு மனிதர்கள் சப்தமிட்டுக் கதைத்துக் கொண்டிருந்ததை உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டார்கள். அவர்களைத் தன்னிடம் அழைத்துவருமாறு பணித்தார்கள்.

அவர்களை அழைத்து வந்ததும், ''நீங்கள் இருவரும் எங்கிருந்து வருகின்றீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள் ''நாங்கள் தாஇப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்'' எனப் பதிலளித்தனர். ''நீங்கள் மதீனா வாசிகளாக இருந்திருந்தால் இறைத்தூதரின் மஸ்ஜிதாகிய இந்த ''மஸ்ஜிதுல் நபவியில்'' உயர் தொனியில் கதைத்த உங்கள் இருவரையும் தண்டித்திருப்பேன்'' என்றார்கள்.

**எனவே மஸ்ஜிதுகளில் சப்தத்தை உயர்த்திக் கதைப்பது, பிறருக்கு இடையூறாக சப்தமிட்டு குர்ஆன் ஓதுவது, தொழுபவருக்கு முன்னால் குறுக்காகச் செல்வது, உட்கார்ந்திருப்பவர்களை விலக்கிக்கொண்டு தோளுக்கு மேலால் கடந்து செல்வது, வியாபாரம் செய்வது, காணாமல் போன பொருட்கள் பற்றி அறிவிப்புச் செய்வது போன்றவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்துள்ளார்கள்.**

## 5. மஸ்ஜிதைத் தூய்மையாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வைத்திருத்தல்

''மஸ்ஜிதைக் கூட்டிப் பெருக்குவது, தூய்மையாக வைத்திருப்பது, மஸ்ஜிதில் உள்ள குப்பைக்கூளங்களை வெளியேற்றுவது, நறுமணம் கமழச் செய்வது போன்றன சுவனத்திற்கு இட்டுச் செல்லும் வழிகளாகும். (இப்னு மாஜா)

''மஸ்ஜிதைத் தூய்மைப்படுத்தி வைத்திருப்பது ஹூருல்ஈன்களுக்குரிய மஹர் ஆகும்.'' (தபரானி)

இஸ்லாத்தின் அடையாளச் சின்னமும், முஸ்லிம்களின் மத்திய தலமுமாகிய மஸ்ஜிதை அழகாகவும் தூய்மையாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதற்கும் அதனை மணம் கமழச்செய்வதற்கும் ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்வது உயர்ந்த நற்செயலாகும்.



### 7. மஸ்ஜிதுடன் நெருக்கமான உறவைப் பேணல்

ஒரு முஸ்லிம் எப்போதும் மஸ்ஜிதுடன் நெருக்கமான உறவைப் பேணுவதும் அதன் பணிகளில் உளப்பூர்வமாகவும் முழுமையாகவும் பங்கேற்பதும் அதற்காக உழைப்பதும் தொண்டாற்றுவதும் அவசியமானதாகும்.

''ஒரு முஸ்லிம் மஸ்ஜிதில் தொழுதுவிட்டு அடுத்த நேரத் தொழுகைக்காக அங்கு காத்திருந்தால் அவர் அங்கிருந்து திரும்பிச் செல்லும் வரை மலக்குகள் ''இறைவா இந்த மனிதனது பாவங்களை மன்னிப்பாயாக. அவர் மீது அருள் புரிவாயாக'' என பிரார்த்திப்பார்கள். (முஸ்லிம்)

***எனவே மஸ்ஜிதுகளின் மகிமைகளை மனதிற் கொண்டு, அவற்றைத் தூய்மையாக வைத்திருப்போம்.***

***அவற்றுக்குரிய ஒழுங்குகளைப் பேணுவோம்.***

***அவற்றின் கண்ணியத்தை மேலோங்கச் செய்வதற்காக ஒன்றுபட்டு உழைப்போம்.***

**பயிற்சி**

*1.* மஸ்ஜிதின் சிறப்புகள் யாவை?

*2.* மஸ்ஜிதுடனான தொடர்பை வலுப்படுத்தக்கூடிய செயற்பாடுகள் ஐந்து குறிப்பிடுக.

*3.* மஸ்ஜிதில் பேண வேண்டிய ஒழுங்குகள் யாவை?

*4.* மஸ்ஜிதை அழகாகவும் தூய்மையாகவும் வைத்திருப்பதனால் கிடைக்கும் நன்மைகள் யாவை?

**செயற்பாடு**

ஆசிரியரின் வழிகாட்டலுடன் உமது பாடசாலைக்கு அருகிலுள்ள ஒரு பள்ளிவாசலை சிரமதானம் மூலம் சுத்தம் செய்யுங்கள்.

# 14

# இஸ்திஃபார் (பாவ மன்னிப்பு)

பலவீனமாக படைக்கப்பட்ட மனிதன் பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்ட புனிதனல்லன். அவன் பாவம் செய்யக்கூடியவன். இருப்பினும் பாவங்களிலிருந்து மீட்சி பெறுவதற்கான வழிகாட்டல்களையும் அல்லாஹ் வழங்கியுள்ளான். அவற்றுள் ஒன்றே பாவ மன்னிப்பு - இஸ்திஃபார் என்பதாகும். இதனை அல்லாஹ் சிறப்பித்துக் கூறியுள்ளான்.

**''ஆதமின் மக்கள் அனைவரும் தவறிழைக்கக் கூடியவர்கள். அவர்களுள் பாவ மன்னிப்புக் கோரக் கூடியவர்களே தவறிழைத்தவர்களில் சிறந்தவர்களாவர்.'' (திர்மிதி)**

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுவனத்தில் தன் மனைவி ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்களோடு வாழ்ந்தார்கள். இப்லீஸ் அவர்களைத் தவறிழைக்கத் தூண்டினான். அவனின் சதி வலையில் சிக்குண்ட அவர்கள் அதற்காக அல்லாஹ்விடம் மன்றாடிப் பாவ மன்னிப்புக் கேட்டார்கள். அல்லாஹ் அவர்களது பாவ மன்னிப்பை ஏற்று மன்னித்தருளினான்.

பாவ மன்னிப்புத் தேடுவது நபிமார்களிடம் காணப்பட்ட சிறப்புப் பண்புகளிலொன்றாகும். **''எங்கள் இறைவனே எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரியாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்.'' (7:23)** என்று ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிரார்த்தித்தார்கள்.



''என் இறைவனே எனது பாவங்கள், எனது பெற்றோரின் பாவங்கள், என்னை ஏற்று விசுவாசம் கொண்டோரின் பாவங்கள், விசுவாசம் கொண்ட ஆண், பெண் அனைவரினதும் பாவங்களையும் மன்னித்து அருள்புரிவாயாக'' (71: 28) *என நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மன்னிப்புத் தேடினார்கள்.*

''எமது இரட்சகனே எங்களை நீ நிராகரிப்பவரின் துன்பத்திற்குள்ளாக்கி விடாதே. எங்களை நீ மன்னிப்பாயாக. நிச்சயமாக நீதான் (அனைவரையும்) மிகைத்தவனும் ஞானமுடையவனும் ஆவாய்'' (60: 5) *என்று இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பாவ மன்னிப்புக் கேட்டார்கள்.*

*இவ்வாறே மூஸா அலைஹிஸ்ஸலாம், தாவூத் அலைஹிஸ்ஸலாம் போன்ற பல நபிமார்களும் இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோரியதை அல்குர்ஆன் முன்மாதிரியாகக் கற்றுத்தருகின்றது. பாவ மன்னிப்புக் கோருமாறு அது எமக்குக் கட்டளையிடுகின்றது.*

''விசுவாசிகளே நீங்கள் அனைவரும் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு கோருங்கள்.'' (24: 31)

''விசுவாசிகளே நீங்கள் அல்லாஹ்விடம் மிகத் தூய்மையாகவும் உண்மையாகவும் பாவ மன்னிப்பு கோருங்கள்.'' (66: 8)

*பாவ மன்னிப்புக் கோருவது முஃமின்களின் பண்பாகும். பாவ மன்னிப்பு கோரு வோரை அல்லாஹ் நேசிக்கிறான். பாவ மன்னிப்புக் கோருபவர்களது வேண்டுதலை அங்கீகரிப்பதற்கு அல்லாஹ் காத்திருக்கின்றான்.*

''தமக்குத்தாமே தீங்கிழைத்துக்கொண்ட எனது அடியார்களே! நீங்கள் அல்லாஹ் வின் அருளிலிருந்து நிராசையாகிவிட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கிறான்.'' (39: 53)

*''எவன் கைவசம் எனது ஆத்மா இருக்கின்றதோ அவன்மீது சத்தியமாக! வானம் பூமிக்கு இடைப்பட்ட பகுதிகளை நிரப்புமளவு நீங்கள் பாவம் செய்திருந்தபோதும் அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்டால் அவன் நிச்சயமாக உங்களை மன்னிக்கவே செய்வான்.'' (அஹ்மத்)*

***பாவ மன்னிப்புக் கோருவதில் மிக உயர்ந்த வழிமுறையாகத் தவ்பா காணப்படு கின்றது. பாவங்கள் செய்வதை விட்டுவிட்டு முழுமையாக இறைவன்பால் திரும்பி விடுவதையே இது குறிக்கின்றது.*** *அதாவது ஓர் அடியான் அதுவரை காலமும் வாழ்ந்து வந்த வழிமுறையிலிருந்து திரும்பி புதியதொரு வழிமுறையை நோக்கி மீள்வதையே இது குறிக்கின்றது. இந்த மீளுதல் வெறுமனே வார்த்தைகளால் மட்டுமன்றி அறிவு, மனப்பாங்கு, செயற்பாடு அனைத்தின் மூலமும் இடம்பெறல் வேண்டும். நாவு மன்னிப்புக் கேட்க, உள்ளம் அதற்காக வருத்தப்பட வேண்டும். உறுப்புக்கள் அந்தப் பாவங்களை விட்டுவிட வேண்டும். அதுவே தவ்பாவாகும்.*

*இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்: ''நீ தவ்பா செய்கிறாய். பின் அந்தத் தவ்பாவை முறித்துக்கொள்கிறாய். மீண்டும் பாவம் செய்கிறாய்.*

உடனடியாகத் தவ்பா செய்துகொள். மீண்டும் பாவத்தில் விழுந்து விடுதற்கு முன் நான் மரணித்துவிட வேண்டும் என உனக்குள் கூறிக்கொள். இவ்வாறே தொடர்ந்து செய்துகொள். உன்னால் ஒரு பாவம் இடம்பெற்று விட்டால் உடனடியாகத் தவ்பா செய்துகொள்வதை உனது வழக்கமாக மாற்றிக்கொள். பாவம் இடம் பெற்றுவிட்டால் அதனைத் தொடர்ந்து தவ்பா செய்துகொள்ளும் சந்தர்ப்பம் உனக்குத் தவறி விடாமல் இருக்கட்டும். நீ நம்பிக்கை இழந்து விடாதே. ஷைத்தான் உனது தவ்பாவிற்குத் தடையாக இருக்கக் கூடாது. அதுவே நீ நன்மையடைவதற்கு அடையாளமாகும்.''



பாவமீட்சி பெறுவதற்கு ஒருவழியாக தவ்பா காணப்படுவதுபோல பாவ மன்னிப்பு கோருவதற்கான மற்றொரு வழியாக இஸ்திஃபார் காணப்படுகின்றது. அல் குர்ஆனும் ஸுன்னாவும் இதனை அதிகமாக வலியுறுத்துகின்றன. தவ்பாவை முழுமைப் படுத்தக்கூடிய ஒரு செயலே **இஸ்திஃபார்** ஆகும்.

நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட புனிதராவார். ஆனாலும் அவர்கள் ஒவ்வொரு நாளும் எழுபதுக்கும் அதிகமான சந்தர்ப்பங்களில் இஸ்திஃபார் செய்ததன் மூலம் எமக்கு முன்மாதிரியான ஒரு வாழ்க்கையைக் காட்டிச் சென்றுள்ளார்கள்.

ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''உங்களது வீடு, கடை, பாதைகள், சபைகளில் இஸ்திஃபாரை அதிகப்படுத்திக்கொள்ளுங்கள். ஏனென்றால் எந்நேரத்தில் மன்னிப்பு கிடைக்குமென்று கூற முடியாது.''

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சிறியவர்களிடம் அவர்கள் பாவங்கள் செய்யாதளவு இஸ்திஃபார் செய்யுமாறு வேண்டுவார்கள். ''பாவத்திற்குரிய பரிகாரம் இஸ்திஃபார் ஆகும்'' என ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அடியான் பாவமன்னிப்புத் தேடுவதற்கு மிகப் பொருத்தமான நேரமாகத் தஹஜ்ஜுத் நேரம் காணப்படுகின்றது. **''நல்லடியார்கள் அதிகாலைப் பொழுதில் பாவமன்னிப்புத் தேடுவார்கள்'' (3: 17)** என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. வெள்ளிக் கிழமை தினம், அரபாவுடைய நாள், ரமழான் மாதம் போன்றன பாவமன்னிப்புத் தேடுவதற்கான விசேட சந்தர்ப்பங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் அடியான் பாவ மன்னிப்புத் தேடுவதனை பிற்படுத்தக்கூடாது.

தான் செய்த பாவங்களுக்காக உடனடியாகத் தவ்பா செய்வதோடு மீண்டும் மீண்டும் தவ்பா செய்வதற்கான நேரங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

***பாவ மன்னிப்புக் கோருவதற்கான நிபந்தனைகள்:***

1. தான் செய்த பாவங்களை எண்ணி மனம் வருந்திக் கைசேதப்படுவது

2. செய்த பாவம் மனிதர்களுடன் சம்பந்தப்பட்டதெனில் முதலில் அவர்களிடம் மன்னிப்புக் கேட்பது

3. தூய எண்ணத்துடன் (இக்லாஸ்) பாவமன்னிப்பு கோருவது

4. குறித்த பாவத்தை மீண்டும் செய்யமாட்டேன் என உறுதிகொள்வது

5. தான் செய்த பாவங்களை முற்றுமுழுதாக விட்டுவிட்டு அவற்றிலிருந்து நீங்கியிருப்பது

தவ்பா, இஸ்திஃபார் என்பன ஒரு முஸ்லிமிடம் கட்டாயம் காணப்பட வேண்டிய பண்புகளாகும். இதன் மூலம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. இறை நெருக்கமும் நேசமும் கிடைக்கின்றன. நரகிலிருந்து பாதுகாக்கப்பட்டு சுவனம் செல்ல வாய்ப்பு கிடைக்கின்றது. வாழ்க்கையில் சுபீட்சமும் அபிவிருத்தியும் ஏற்படுகின்றன. பஞ்சமும், வரட்சியும் நீங்கி பொலிவும் செழுமையும் ஏற்படுகின்றன. வாழ்வில் நன்மைகள் அதிகரித்து சிறந்த நல்லடியானாக மாறுவதற்கு வழியேற்படுகின்றது.

***ஆகவே நாமும் தவ்பா, இஸ்திஃபாரின் யதார்த்த நிலையைத் தெளிவாக அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடித்தொழுகி ஈருலகிலும் வெற்றி பெற முயலுவோம்.***

### பயிற்சி

1. பாவ மன்னிப்பு கோருவதை வலியுறுத்தும் இரண்டு அல்குர்ஆன் வசனங்களை எழுதுக.
2. பாவ மன்னிப்பு கோருவதற்குப் பொருத்தமான சந்தர்ப்பங்கள் 5 தருக.
3. பாவ மன்னிப்பு கோரும்போது பேண வேண்டிய நிபந்தனைகளை எழுதுக.

### செயற்பாடு

ஒவ்வொரு நபியும் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு கோரிப் பிரார்த்தித்த அல் குர்ஆன் வசனங்களைத் தொகுத்து எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.



# 15

# அல்குர்ஆன் அருளப்படல்

இற்றைக்கு பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரேபியா எங்கும் அறியாமை இருள் படர்ந்திருந்தது. அங்கு வாழ்ந்தோர் பாவங்களின் மொத்த உருவமாக திகழ்ந்தார்கள். இக்காலப் பிரிவில் அவர்களிடையே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்தார்கள். இயல்பிலேயே நற்பண்புகள் குடிகொண்ட அவர்கள் அம்மக்களின் அறியாமை கண்டு ஆழ்ந்த கவலை கொண்டார்கள். அவலத்தில் இருந்தும் பஞ்சமா பாதகங்களிலிருந்தும் அவர்களை விடுவிக்க வழி தேடினார்கள். அவர்கள் வாலிப வயதை அடைந்து சமூகப் பொறுப்புக்களைச் சுமக்கும் பக்குவம் வந்தபோது சமூகம் பற்றிய அக்கறையும் கவலையும் மேலும் அதிகரித்தது. தொடர்ந்தும் சீர்திருத்தம் பற்றியே சிந்திக்கலானார்கள்.

மக்காவில் இருந்து சுமார் மூன்று மைல் தொலைவில் ஹிரா என்ற பெயரில் ஒரு குகை இருந்தது. பெரும்பாலான நேரங்களில் தனியாகச் சென்று தனது சமூகத்தின் நிலை குறித்தும் அவர்களுக்கான விமோசனம் குறித்தும் சிந்திக்கலானார்கள். உண்ணவும் பருகவும் தேவையானவற்றை உடன் எடுத்துச் சென்றார்கள். அவை தீர்ந்த போது அவர்களே வீடு வந்து மீண்டும் எடுத்துச் சென்றார்கள். சிலபோது மனைவி கதீஜாவும் கொண்டு வந்து கொடுத்தார்கள்.


ஹிரா குகை

அப்போது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நாற்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். நாற்பது வயது பூர்த்தியாவதற்கு ஆறு மாதங்கள் இருந்த வேளையில் அவர்களுக்குத் தெளிவான கனவுகள் தென்பட ஆரம்பித்தன. அவை அச்சொட்டாக நடைபெறுவனவாகவும் இருந்தன.

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு நாற்பது வயது பூரணமாகியது. அன்றும் அவர்கள் வழமை போன்று ஹிராவில் தங்கி இருந்தார்கள். அன்றைய நாள் அந்தி சாய்ந்துகொண்டிருந்தது. ஹிராவையும் அதனைச் சூழ இருந்த பகுதிகளையும் இருள் கவ்வ ஆரம்பித்தது. அவ்வேளை இருளை ஊடறுத்தவாறு பாய்ந்து வந்த பேரொளிப் பிளம்பொன்று அப்பிராந்தியத்தையே பிரகாசமடையச் செய்தது.

ஒளி வடிவில் வந்த ஓர் உருவம் ஹிராவில் தனிமையாக இருந்த முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கட்டித் தழுவி 'இக்ரஃ' (ஓதுவீராக) எனக் கூறியது. தனக்கு ஓதத் தெரியாது என அவர்கள் கூறியபோது, மீண்டும் அந்த உருவம் 'இக்ரஃ' எனக் கூறியது. அப்போதும் அவர்கள் அதே பதிலைக் கூறினார்கள்.

எனவே அந்த உருவம் மூன்றாவது தடவையாகவும் அவர்களைக் கட்டித் தழுவி 'இக்ரஃ' என்றது. இப்போதும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனக்கு ஓதத் தெரியாது என்று பதிலளிக்கவே, அந்த உருவம் ஸூரா அலக்கின் முதல் ஐந்து வசனங்களை ஓதிக்காட்டி அவற்றை மீண்டும் ஓதுமாறு கூறியது. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவற்றைப் மனனமிட்டுக் கொண்டார்கள்.

இவ்வாறுதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிராவில் இருந்தபோது அல்குர்ஆன் முதன் முதலில் அருளப்பட்டது. ஹிராவில் ஒளி வடிவில் தோன்றிய ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்குர்ஆனைக் கற்றுக் கொடுத்தார்கள். இதன் மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு நபியாகப் பிரகடனப்படுத்தப்பட்டார்கள்.

அல்லாஹ் மக்காவிலும் மதீனாவிலுமாக சுமார் 23 வருட காலம் அல் குர்ஆனை அருளினான். ஒரே முறையில் அருளப்படாமல் சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் ஒரு வசனமாகவும் சில வசனங்களாகவும் ஸூராக்களாகவும் அல்குர்ஆன் அருளப்பட்டது.

வஹி அருளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உடலில் மாற்றங்கள் நிகழ்ந்தன. தன்மீது அருளப்பட்ட வஹியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாமும் மனனமிட்டு தம்மோடு இருக்கும் மனைவிமார் மற்றும் தோழர்களுக்கும் எடுத்துக் கூறுவார்கள். அவர்களும் அவற்றை அப்படியே மனனமிட்டுக் கொண்டார்கள். அத்துடன் குத்தாபுல் வஹீ எனப்படும் வஹீ எழுதுனர்களாக நியமிக்கப்பட்டிருந்த ஸஹாபாக்களை அழைத்து உடனுக்குடன் அவற்றை எழுதச் செய்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் மனனமிடல், எழுதி வைத்தல் என்ற இரண்டினூடாகவும் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்டது.

### பயிற்சி

சுருக்கமான விடை தருக.

1. முதன் முதலாக வஹி அருளப்பட்ட முறையினைத் தொகுத்து எழுதுக.
2. ஹிராக் குகை ஏன் முக்கியத்துவம் பெறுகிறது?
3. முதலில் அருளப்பட்ட வசனங்கள் எந்த ஸூராவில் அமைந்துள்ளன?
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏன் ஹிராவுக்குச் சென்றார்கள்?
5. 'இக்ரஃ' என்ற சொல்லின் பொருள் யாது?

### செயற்பாடு

அல்குர்ஆனின் முதலில் அருளப்பட்ட ஐந்து வசனங்களையும் அரபு மொழியில் எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

16

# அல்குர்ஆன் தொகுக்கப்படல்

அல்குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருந்த காலத்திலேயே அதனைத் தொகுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தமக்கு வஹி வந்த போது அதனைத் தம்மோடு இருந்த தோழர்களிடம் எடுத்துக் கூறினார்கள். தாமும் மனனமிட்டுக்கொண்டு அப்படியே தோழர்களையும் மனனமிடச் செய்தார்கள். அல்குர்ஆன் கட்டம் கட்டமாக அருளப்பட்டமை அதனை மனனமிடுவதற்கு வசதியாக அமைந்தது.

அத்துடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்மீது அருளப்பட்ட வசனங்களை எழுத்துருப்படுத்துவதற்காக சில ஸஹாபாக்களை உத்தியோக பூர்வமாக நியமித்திருந்தார்கள். **குத்தாபுல் வஹீ** (வஹியை எழுதுவோர்) எனப்பட்ட இவர்கள், அவ்வப்போது அருளப்படும் வசனங்களை உடனுக்குடன் பதிந்து கொண்டார்கள். தோல், அகலமான எலும்புகள், பட்டை போன்றன எழுதுவதற்காகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு அருளப்பட்ட வசனங்கள் எந்த ஸூராவில் எந்த இடத்தில் அமைய வேண்டும் என்பதற்கான வழிகாட்டலை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வழங்கி வந்தார்கள். இதற்கமையவே அல்குர்ஆன் இன்றும் ஓதப்பட்டு வருகிறது. இந்த ஒழுங்கு **'தர்தீபுத் திலாவத்'** (ஓதப்படும் ஒழுங்கு) எனப்படுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது 40ஆம் வயது முதல் மக்காவிலும் மதீனாவிலுமாக சுமார் 23 வருட காலம் அருளப்பட்டு வந்த அல்குர்ஆன் வசனங்கள் அவர்களின் வபாத்தோடு முற்றுப் பெற்றன.



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரி 11இல் வபாத்தானார்கள். இதனைத் தொடர்ந்து கிலாபத்தைப் பொறுப்பேற்ற அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் பல போராட்டங்கள் இடம்பெற்றன.

யமாமா யுத்தத்தில் அல்குர்ஆனை மனனம் செய்திருந்த சுமார் எழுபது ஸஹாபாக்கள் ஷஹீதாகினர். எனவே, எஞ்சியுள்ள ஹாபிழ்களும் இவ்வாறு ஷஹீதானால் அல்குர்ஆன் அழிந்து போய்விடுமோ என்ற அச்சம் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஏற்பட்டது. இவ்விடயம் தொடர்பாக கலீபா அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களோடு கலந்தாலோசனை செய்தார்கள். இறுதியில் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த கலீபா அவர்கள், அதனை நூலுருப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கலானார்கள்.

அல்குர்ஆனை எழுதுவதற்காக ஒரு குழு தெரிவு செய்யப்பட்டது. அக்குழுவிற்குக் குத்தாபுல் வஹியில் இடம்பெற்றிருந்த ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்கள். தன் மீது ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை அமானிதமாகக் கருதிய ஸைத் இப்னு ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்பணியை மிக நுணுக்கமாகப் பிழையேதுமின்றிச் செய்து முடித்தார்கள்.

இவ்வாறு தொகுக்கப்பட்ட முதல் மூலப்பிரதி **முஸ்ஹப்** எனப்பட்டது. இதனை அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தன்வசம் பாதுகாத்து வந்தார்கள். தனது கடைசிக் காலப் பகுதியில் அதனை உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அவரின் பின்னர் ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது.

கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் அரபுத் தீபகற்பத்துக்கு வெளியே இஸ்லாம் பரவியது. கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் இது மேலும் விரிவடைந்தது. அரபு மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாதோரும் இஸ்லாத்தினுள் நுழைந்தனர்.

இக்காலப்பிரிவில் ஆர்மீனியா-ஆஜர்பைஜான் பிரதேசத்தில் யுத்தம் ஒன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட முஸ்லிம் படையணியைச் சேர்ந்த ஈராக், சிரிய வீரர்கள் தத்தமது மொழி வழக்கிலேயே அல்குர்ஆனை ஓதியதோடு அதுவே சரியானது எனவும் வாதிட்டுக் கொண்டனர்.



பண்டைய கால குர்ஆன் பிரதியொன்றின் பக்கத் தோற்றம்

இதனை அவதானித்த ஹுதைபா இப்னுல் யமானி ரழியல்லாஹு அன்ஹு என்ற நபித்தோழர், அதுபற்றிக் கலீபாவிடம் முறையிட்டு அல்குர்ஆனை ஓதுவதில் முஸ்லிம்கள் பிளவுபடாமல் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இதனை ஏற்ற கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்பணியை மேற்கொள்வதற்காக ஒரு குழுவைத் தெரிவு செய்தார்கள். இக்குழுவிற்கும் ஸைத் இப்னு ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்களே தலைவராக நியமிக்கப்பட்டார்கள். இக்குழு ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் இருந்த மூலப் பிரதியைப் பெற்று சரிபார்த்து அதனடிப்படையில் பல பிரதிகளை எழுதியது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட பிரதிகள் பிரதான நகரங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. கூடவே, குறைஷியரின் மொழி வழக்கில் நன்கு ஓதத் தெரிந்த காரிகளும் ஹாபிழ்களும் அனுப்பி வைக்கப்பட்டனர். மொழிநடையில் வித்தியாசமாகக் காணப்பட்ட பிரதிகள் ஒன்றுசே ர்க்கப்பட்டு அவை அழிக்கப்பட்டன. இதன் மூலம் அல்குர்ஆனின் ஒருமுகத்தன்மை பாதுகாக்கப்பட்டது. இதற்கமைய, உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் **ஜாமிஉல் குர்ஆன்** (அல்குர்ஆன் மூலம் முஸ்லிம்களை ஒன்றுபடுத்தியவர்) என்று அழைக்கப் படுகிறார்கள். இவ்வாறு தொகுக்கப்பட்ட பிரதிகள் முஸ்ஹப் உஸ்மானி என அழைக்கப்படுகின்றன. இன்று இதுவே பிரயோகத்தில் இருந்து வருகின்றது.

அல்குர்ஆன் எவ்விதக் குறைபாடுமின்றி நபித்தோழர்கள் காலத்திலேயே நூலுருப் படுத்திப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. குறைஷியரின் மொழிவழக்கில் அல்குர்ஆன் அருளப்பட்டதால், அம்மொழி வழக்கிலேயே அது பதிவு செய்யப்பட்டும் வந்துள்ளது. தொடர்ந்து வந்த காலப் பகுதிகளில் மட்டுமன்றி மறுமை வரையும் அதனைப் பாதுகாப்பதற்கு அல்லாஹ் பொறுப்பேற்றுள்ளான். பின்வரும் அல்குர்ஆன் வசனம் அதனையே உறுதிசெய்கின்றது.



**பயிற்சி**

**அ** பகுதியை **ஆ** பகுதியுடன் இணைக்குக.

| அ | ஆ |
|---|---|
| 1. அல்குர்ஆன் ஓதப்படும் ஒழுங்கு | 1. குத்தாபுல் வஹி |
| 2. அல்குர்ஆனைத் தொகுப்பதற்கு அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் | 2. பட்டை, அகலமான எலும்பு |
| 3. கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் இடம்பெற்ற ஒரு யுத்தம் | 3. தர்தீபுத் திலாவத் |
| 4. கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வபாத்தைத் தொடர்ந்து குர்ஆனின் மூலப்பிரதியைப் பாதுகாப்பாக வைத்திருந்தவர் | 4. யமாமா போர் |
| 5. ஆரம்பத்தில் வஹீ எழுதப் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள் | 5. உமர் ரழியல்லாஹு அன்ஹு |
| 6. கலீபா அபூபக்ர் காலத்தில் இடம்பெற்ற ஹாபிழ்கள் ஷஹீதான போர் | 6. ஸைத் பின் ஸாபித் ரழியல்லாஹு அன்ஹு |
| 7. கலீபா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்புப் பெயர் | 7. முஸ்ஹப் |
| 8. அல்குர்ஆன் தொகுப்பு பற்றி முதலில் கலீபா அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் ஆலோசனை கூறியவர் | 8. ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா |
| 9. அல்குர்ஆன் மூலப் பிரதி | 9. ஆர்மீனியா யுத்தம் |
| 10. வஹியை எழுதியோர் | 10. ஜாமிஉல் குர்ஆன் |



# 17

# سُوْرَةُ الضُّحٰى

# ஸூரதுல் ழுஹா



அல்லாஹ்வின் அருள் வேதமான அல்குர்ஆனில் ஸூரா ழுஹா 93 ஆவது அத்தியாயமாகும். இந்த ஸூரா 11 ஆயத்துக்களைக் கொண்டது. இதில் 40 சொற்கள் 164 எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஸூரத்துல் பஜ்ரை அடுத்து மக்காவில் அருளப் பட்ட இந்த ஸூராவின் முதல் ஆயத்தும் முதல் சொல்லுமான அல்ழுஹா என்ற பதமே இதற்குப் பெயராகச் சூட்டப்பட்டுள்ளது. இதன் கருத்து முற்பகல் என்பதாகும்.

### அருளப்பட்ட பின்னணி

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவனிடமிருந்து வந்து கொண்டிருந்த வஹி சில காலங்கள் தாமதமாகியது. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடனான தொடர்பும் துண்டிக்கப்பட்டது. இதனை அறிந்துகொண்ட முஷ்ரிக்குகள் எள்ளிநகையாடினர். முஹம்மதை அவருடைய இறைவன் கைவிட்டுவிட்டான். அவரிடம் வந்து சென்ற ஷைத்தானின் வருகையும் முற்றுப்பெற்றுவிட்டது. இவ்வாறு கேலி செய்தவர்களுள் அபுலஹபின் மனைவி அல் அவ்ரா பின்த் ஹர்ப் குறிப்பிடத்தக்கவளாவாள். எதிரிகளின் விமர்சனங்கள், கேலிப்பேச்சுக்கள் என்பவற்றால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனச்சோர்வுற்றிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த ஸூரா அருளப்பட்டது.

## ஸூராவும் அதன் பொருளும்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَالضُّحٰى ﴿١﴾ وَالَّيْلِ اِذَا سَجٰى ﴿٢﴾ مَا وَدَّعَكَ رَبُّكَ

وَمَا قَلٰى ﴿٣﴾ وَلَلْاٰخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ الْاُوْلٰى ﴿٤﴾ وَلَسَوْفَ

يُعْطِيْكَ رَبُّكَ فَتَرْضٰى ﴿٥﴾ اَلَمْ يَجِدْكَ يَتِيْمًا فَاٰوٰى ﴿٦﴾

وَوَجَدَكَ ضَآلًّا فَهَدٰى ﴿٧﴾ وَوَجَدَكَ عَآئِلًا فَاَغْنٰى ﴿٨﴾

فَاَمَّا الْيَتِيْمَ فَلَا تَقْهَرْ ﴿٩﴾ وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنْهَرْ ﴿١٠﴾

وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ﴿١١﴾

***அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன்.***

முற்பகல் மீது சத்தியமாக

ஒடுங்கிக் கொள்ளும் இரவின் மீது சத்தியமாக

உம்முடைய இறைவன் உம்மைக் கைவிடவுமில்லை; அவன் (உம்மை) வெறுக்கவுமில்லை.

மேலும் பிந்தியது (மறுமை) முந்தியதை (இம்மையை) விட உமக்கு மேலானதாகும்.

இன்னும், உம்முடைய இறைவன் வெகு சீக்கிரம் உமக்கு (உயர் பதவிகளைக்) கொடுப்பான்; அப்பொழுது நீர் திருப்தியடைவீர்.

(நபியே!) அவன் உம்மை அநாதையாகக் கண்டு, அப்பால் (உமக்குப்) புகலிடமளிக்கவில்லையா?

இன்னும், உம்மை வழியற்றவராகக் கண்டு அவன், (உம்மை) நேர்வழியில் செலுத்தினான்.

மேலும், அவன் உம்மைத் தேவையுடையவராகக் கண்டு, (உம்மைச் செல்வத்தால்) தேவையில்லாதவராக்கினான்.

எனவே, நீர் அநாதையைக் கடிந்து கொள்ளாதீர்.

யாசிப்போரை விரட்டாதீர்.

மேலும், உம்முடைய இறைவனின் அருட்கொடையைப் பற்றி (பிறருக்கு) அறிவித்துக் கொண்டிருப்பீராக.

***மையக் கருத்து***

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவனிடமிருந்து வந்த வஹி திடீரென நின்றுவிட்டது. இதனால் இறை நேசத்தின் சுகந்தம் அறுபட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாங்கிக்கொள்ள முடியாத துன்பத்திற்காளாகி வெறுமையுணர்வுடன் தனிமைப்பட்டவர் போல் கவலையுற்றிருந்தார்கள். இந்த சூழ்நிலையில் தான் இந்த ஸூரா இறங்கியது. இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்பு, அரவணைப்பு, பாசம், பரிவு, கருணை, கனிவு, நேசம், பற்று, நம்பிக்கை ஆகிய அனைத்தையும் அள்ளிப் பொழிந்தது. இதனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அளவில்லா மகிழ்ச்சியடைந்தார்கள்.*

*உம்மைக் கைவிடவுமில்லை; புறக்கணிக்கவுமில்லை; மறக்கவுமில்லை; உம் மீது சினம் கொள்ளவுமில்லை; உம்மை ஒருபோதும் கைவிடமாட்டோம். உமக்கு எக்குறையையும் வைக்கவும் மாட்டோம். இவ்வுலகில் வழங்கியிருக்கும் நன்மைகளை விட மிகச் சிறப்பானவை உமக்கு மறுமையில் காத்திருக்கின்றன போன்ற வசனங்கள் மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறது.*

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது அல்லாஹ் அன்பையும் பாசத்தையும் பொழிந்துள்ளான். அநாதையாய்ப் பிறந்த அவரை அவன் அரவணைத்தான், அன்பைச் சொரிந்தான். வறுமையிலிருந்த அவர்களுக்கு வளமான வாழ்வளித்தான் என்று குறிப்பிட்டுக் காட்டுகிறது.*

இறுதியாக அநாதைகளை அதட்டவோ அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தவோ அவர்களை இழிவுபடுத்தவோ கேவலப்படுத்தவோ தண்டிக்கவோ கூடாது. அவ்வாறே யாசகம் கேட்போரிடம் மென்மையாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்ளுமாறு பணிக்கிறது.

### ஸூரா தரும் போதனைகள்

1. நல்லடியார்களை இறைவன் கைவிடமாட்டான் அவர்களுக்கு எப்போதும் இறைநேசமும் பாசமும் கிடைத்துக்கொண்டேயிருக்கும் என்ற நம்பிக்கை ஊற்றை உள்ளங்களில் ஆழப் பதியச் செய்கிறது.
2. இவ்வுலகிலும் மறு உலகிலும் இறைவன் நல்லதையே தருவான். இங்கிருப்பதை விட அங்கிருப்பவை மிகவும் மேலானவை என்று கூறுவதன் மூலம் மறுமை வாழ்வில் ஆசையைத் தூண்டுகிறது.
3. அநாதைகளைக் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு புகலிடம் அளிக்க வேண்டும், யாசிப்பவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும், ஒருபோதும் அவர்களை இழிவுபடுத்தவோ இம்சைப்படுத்தவோ கூடாது முதலான போதனைகளைக் கற்றுத் தருகிறது.
4. இறைவன் தந்த பேரருள்களை எடுத்துரைப்பதும் அவற்றுக்காக இறைவனுக்கு நன்றிக் கடனை முழுமையாக செலுத்துவதும் அவசியம் என்பதை உணர்த்துகிறது.

### பயிற்சி

அ. சரி பிழை கூறுக.

1. ஸூரா ழுஹா, ஒரு மதனி ஸூராவாகும். ( )
2. ஸூரா ழுஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது. ( )
3. இறை அருட்கொடைகளை மறைக்கக் கூடாது. ( )
4. விரும்பினால் அநாதைகளை ஆதரிக்கலாம். ( )

ஆ. இடைவெளி நிரப்புக.

1. ஸூரா ழுஹாவில் ............... ஆயத்துகள் காணப்படுகின்றன.
2. இந்த ஸூரா .................................. ஆகியோரை சிறப்பாக பராமரிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.
3. ஸூரா ழுஹா என்பதன் கருத்து ................... ஆகும்.

### செயற்பாடு

ஸூரா ழுஹாவின் ஊடாக நீங்கள் கற்றுக்கொண்ட முக்கிய படிப்பினைகள் ஐந்தினை எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.



# 18

# ஹதீஸ் துறை இமாம்கள்

## பகுதி – 1

நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல், செயல், அங்கீகாரம், அவர்களது குணநலன்கள், அங்கலட்சணங்கள் முதலானவை ஹதீஸ் என வழங்கப்படுகின்றன.

அல்குர்ஆன் அருளப்பட்ட சந்தர்ப்பத்தில் **குத்தாபுல் வஹீ** எனப்பட்டோர் அதன் வசனங்களைப் பதிவுசெய்து பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் இக்காலத்தில் ஹதீஸ்களைப் பதிவதற்கான உத்தியோகபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அல்குர்ஆனுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை, ஹதீஸ்கள் அல்குர்ஆனோடு கலந்துவிடும் என்ற அச்சம், எழுத்தறிவுடையோர் குறைவாகக் காணப்பட்டமை போன்றன ஹதீஸ்கள் பதிந்து பாதுகாக்கப்படாமைக்கான முக்கிய காரணங்களாக உள்ளன.

இருப்பினும் ஹதீஸ்களை நபித்தோழர்கள் தமக்கிருந்த அபார மனன ஆற்றலைக் கொண்டும் அவற்றை நாளாந்த வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதன் மூலமும், சக தோழர்களோடு தாம் அறிந்தவற்றைப் பரிமாறிக்கொள்வதன் மூலமும், தமது அடுத்த பரம்பரையான தாபிஈன்களுக்கு ஹதீஸ்களைப் போதித்ததன் மூலமும் பாதுகாத்தனர். இவற்றுடன் ஒருசில ஸஹாபாக்களால் உத்தியோகபூர்வமற்ற முறையில் ஹதீஸ்கள் எழுதப்பட்டமையும் அவதானிக்கத்தக்கதாகும்.

ஹதீஸ்களைப் பாதுகாக்கும் வகையில் அவற்றைப் பரவலாகத் தேடிப் பதியும் பணி, தாபிஈன்கள் காலத்தில் இடம்பெற்றது. கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி, தனது ஆட்சிக் காலத்தில் கவர்னர்களுக்கும் அறிஞர்களுக்கும் நிருபங்கள் எழுதி, ஹதீஸ்களைச் சேகரிக்கும் பணியை ஊக்குவித்தார். இதன் பயனாக ஹதீஸ் துறையில் பல்வேறு கிரந்தங்கள் தோற்றம் பெற்றன.

தொடர்ந்து வந்த தபஉத் தாபிஈன்கள் காலப் பிரிவிலேயே ஹதீஸ் துறை உச்ச வளர்ச்சியைக் கண்டது. தாபிஈன்களிடம் ஹதீஸ்களைப் பயின்ற ஹதீஸ்துறை அறிஞர்கள் இத்துறைக்கு மகத்தான பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர்.

இக்காலப்பிரிவில் முஸ்னத், முஸன்னப், ஜாமிஉ எனப் பல வகையான ஹதீஸ் கிரந்தங்கள் தோற்றம் பெற்றன.

இவற்றுள் ''ஸிஹாஹுஸ் ஸித்தா'' என வழங்கப்படும் ஆறு பெரும் ஹதீஸ் கிரந்தங்கள் பிரபலமானவையாகும். இவ்வகையில் இக்கிரந்தங்களைத் தொகுத்துத் தந்த இமாம்கள் பற்றி அறிந்து கொள்வதும் முக்கியமானதாகும்.

### இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 194 - 256)

ஹிஜ்ரி 194 இல் பிறந்த இவரது முழுப் பெயர் **அபூ அப்தில்லாஹ் முஹம்மத் இஸ்மாயீல் அல் புஹாரி** என்பதாகும். உஸ்பெகிஸ்தானின் புஹாராவில் பிறந்ததனால் புஹாரி என அழைக்கப்படுகிறார். இளம் வயதில் தந்தையை இழந்த இவர் சிறு பராயத்திலேயே அல்குர்ஆனையும் ஏராளமான ஹதீஸ்களையும் மனனமிட்டுக் கொண்டார். ஹதீஸ் துறையில் அதீத ஆர்வம் காட்டிய இமாமவர்கள் ஹதீஸ்களை மனனம் செய்ததோடு ஹதீஸ் அறிவிப்பாளர்களது வாழ்க்கை வரலாற்றையும் அறிந்து வைத்திருப்பதில் கவனம் செலுத்தினார். அறிவுத் திறனும் அபார மனன ஆற்றலும் பெற்றிருந்த இவர் ஹதீஸ்களைப் பதிவதில் மிகவும் பேணுதலோடு நடந்துகொண்டார்.



தனது பதினாறாவது வயதில் முதல் தடவையாக ஹஜ்ஜுக்குச் சென்ற இமாமவர்கள் மக்காவிலேயே தங்கி அங்குள்ள முஹத்திஸ்களிடம் ஹதீஸ்களைப் பயில ஆரம் பித்தார். மேலும் பல பிரதேசங்களுக்கும் பிரயாணம் செய்து ஹதீஸ்களைக் கற்றுக் கொண்டார்.

ஸஹீஹான ஹதீஸ்களை மாத்திரம் கொண்ட நூலொன்றைத் தொகுக்க வேண்டுமென அவர் அவாக் கொண்டிருந்தார். இமாம் அவர்களின் ஆர்வத்தைக் கண்ட இவரது ஆசிரியர் இமாம் இஸ்ஹாக் இப்னு ராஹவைஹி அவர்களும் அதற்கு ஆர்வமூட்டினார்கள். இதன் விளைவாகத் தோற்றம் பெற்றதே ஸஹீஹுல் புஹாரி ஆகும். இதனைத் தொகுப்பதற்கு இமாமவர்கள் பதினாறு வருடங்கள் கடுமையாக உழைத்தார்கள். தனக்குக் கிடைக்கப் பெற்ற சுமார் ஆறு இலட்சம் ஹதீஸ்களையும் பகுத்தாய்ந்து அவற்றில் சுமார் 7275 ஹதீஸ்களை புஹாரியில் பதிந்துள்ளார்கள்.

அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் ஆதாரபூர்மாக நோக்கப்படுகின்ற இக்கிரந்தத்துக்குப் பல விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் எழுதிய பத்ஹுல் பாரி சிறப்பிடம் வகிக்கின்றது. இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரி 256 இல் ஸமர்க்கந்தில் வபாத்தானார்கள்.

## 2. இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 204 - 261)



ஹிஜ்ரி 204 இல் நைஸாபூரில் உள்ள குஷைர் எனுமிடத்தில் பிறந்த இவரது இயற்பெயர் **அபுல் ஹஸன் முஸ்லிம் இப்னு ஹஜ்ஜாஜ் அல்குஷைரீ** என்பதாகும். ஆரம்பக் கல்வியை நைஸாபூரில் கற்றார். இயல்பிலேயே அபார நினைவாற்றலும் ஹதீஸ்களைத் திரட்டுவதில் ஆர்வமும் உடையவராக இருந்த இமாம் முஸ்லிம், ஹதீஸ்களைத் திரட்டும் நோக்கில் இமாம் புஹாரி போலவே பல தேசங்களுக்குப் பிரயாணம் செய்தார். இவர் திரட்டிய ஹதீஸ் தொகுப்பே ஸஹீஹ் முஸ்லிம் என அழைக்கப்படுகின்றது. இது ஸஹீஹுல் புஹாரிக்கு அடுத்த தரத்தில் மதிக்கப்படுகின்றது.

இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி தாம் திரட்டிய சுமார் மூன்று இலட்சம் ஹதீஸ்களில் இருந்து 7000 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிலிருந்து சுமார் 4000 ஹதீஸ்களைக் கொண்டு ஸஹீஹ் முஸ்லிமைத் தொகுத்துள்ளார்.

இக்கிரந்தத்துக்கு பல விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் இமாம் நவவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் எழுதிய அல் மின்ஹாஜ் எனும் நூல் மிகவும் பிரசித்தமானது. இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரி 261 இல் நைஸாபூரில் வபாத்தானார்கள்.

இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி, இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி ஆகிய இருவரது கிரந்தங்களும் ஹதீஸ் துறை அறிஞர்கள் மத்தியில் **''ஸஹீஹைன்''** எனவும் இவ்விரு கிரந்தங்களிலும் ஒரேவிதமாகப் பதியப்பட்டுள்ள ஹதீஸ்கள் **''முத்தபகுன் அலைஹி''** எனவும் அழைக்கப்படுகின்றன.

### பயிற்சி

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களதும் ஸஹாபாக்களதும் காலங்களில் ஹதீஸ்கள் தொகுக்கப்படாமல் இருந்ததற்கான காரணங்கள் யாவை?
2. ஹதீஸ் துறைக்கு இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி ஆற்றிய பங்களிப்பு யாது?
3. தபஉத் தாபிஈன்கள் காலத்தில் தோற்றம் பெற்ற ஹதீஸ் நூல்களுள் இரு வகையினைக் குறிப்பிடுக.
4. ஸஹீஹுல் புஹாரியின் விளக்கவுரை நூல் ஒன்றைக் குறிப்பிடுக.
5. ஸஹீஹ் முஸ்லிமின் விளக்கவுரையான அல்மின்ஹாஜின் ஆசிரியர் யார்?
6. ஹதீஸ்களைத் தொகுக்க, உத்தியோகபூர்வமாக உத்தரவு பிறப்பித்த கலீபா யார்?

## பகுதி –2

முன்னைய பகுதியில் ஹதீஸ் துறை இமாம்களில் இருவரது வாழ்க்கை வரலாற்றையும் அவர்களது கிரந்தங்கள் பற்றியும் நோக்கினோம். இங்கு ஏனைய நான்கு இமாம்களது வரலாறுகளையும் அவர்கள் தொகுத்த கிரந்தங்கள் பற்றியும் நோக்குவோம்.




### *இமாம் அபூதாவூத் ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 201 - 275)*

**அபூதாவூத் ஸுலைமான் இப்னு அஷ்அஸ் அஸ் ஸஜஸ்தானி** என்பது இவரது முழுப் பெயராகும். ஹிஜ்ரி 201 இல் ஸிஜிஸ்தானில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை நைஸாபூரிலும் பின்னர் குராஸான், எகிப்து, ஸிரியா, ஹிஜாஸ் முதலான இடங்களிலும் கற்றார். இவர் ஹதீஸ்களை திரட்டுவதற்காகப் பல இடங்களுக்குப் பயணங்களை மேற்கொண்டார்.

இவர் சிறந்த நினைவாற்றல் கொண்டவராகவும், இறையச்சம், தியானம், ஈகை முதலிய நற்பண்புகளின் உறைவிடமாகவும் திகழ்ந்தார்.

இமாமவர்கள் தான் தேடிப் பெற்றுக்கொண்ட ஐந்து இலட்சம் ஹதீஸ்களில் சுமார் 4800 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து சுமார் 20 வருட கால உழைப்பில் **ஸுனன் அபூதாவூத்** எனும் கிரந்தத்தைத் தொகுத்தார். இமாம் அபூதாவூத் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரி 275இல் பஸராவில் வபாத்தானார்கள்.

### *இமாம் திர்மிதி ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 209 - 279)*




**இமாம் அபூ மூஸா முஹம்மத் இப்னு ஈஸா அத்திர்மிதி** ஹிஜ்ரி 209 இல் குராஸான் மாநிலத்தில் திர்மித் எனுமிடத்தில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை குராஸானில் பெற்றுக் கொண்ட இவர், இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி, இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்று ஹதீஸ் துறைக்குப் பங்காற்ற வேண்டுமென உறுதி பூண்டார்.

இவ்விரு இமாம்களிடமும் கல்வி பயின்ற இவர் ஹதீஸ்களைத் திரட்டுவதற்காகப் பல பிரதேசங்களுக்கும் பயணங்களை மேற்கொண்டார். இவர் இறையச்சமும் நல்லொழுக்கமும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தார்.

இமாம் திர்மிதி தனக்குக் கிடைத்த பல இலட்சம் ஹதீஸ்களில் சுமார் 4800 ஐத் தேர்ந்தெடுத்து ஹதீஸ் தொகுப்பு நூலொன்றை வெளியிட்டார். இது **ஜாமிஉத் திர்மிதி** என அழைக்கப்படுகிறது. ஹதீஸ்கள் திரும்பத் திரும்ப இடம்பெறாமையும் ஹதீஸ்களின் இறுதியில் அதன் தரம் குறிப்பிடப்பட்டிருப்பதும் இதன் சிறப்பம்சமாகும். இமாம் திர்மிதி ரஹ்மதுல்லாஹி அலைஹி ஹிஜ்ரி 279 இல் தன் பிறந்தகமான திர்மித் நகரிலேயே வபாத்தானார்கள்.




## இமாம் நஸாஈ ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 215 - 303)

ஹிஜ்ரி 215 இல் குராஸான் மாநிலத்திலுள்ள நஸாஃ எனும் ஊரில் பிறந்த இவரது முழுப் பெயர் **அபூ அப்துர் ரஹ்மான் அஹ்மத் இப்னு ஷுஐப் அந்நஸாஈ** என்பதாகும். முன்னைய ஹதீஸ் துறை அறிஞர்களைப் போலவே இமாம் நஸாஈயும் ஹதீஸ் துறையில் ஆர்வம் காட்டினார். அக்காலப் பிரிவில் ஹதீஸ் துறையில் பிரபலம் பெற்றிருந்த முஹத்திஸ்களைத் தேடிப் பல பிரதேசங்களுக்கு பயணம் மேற்கொண்டார்.

இப்பயணங்கள் மூலம் இவர் சேகரித்துக் கொண்ட ஐந்து இலட்சம் ஹதீஸ்களில் சுமார் 4341 ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்து ஒரு ஹதீஸ் கிரந்தத்தை வெளியிட்டார். அதுவே **ஸுனன் நஸாஈ** என அழைக்கப்படுகின்றது. இக்கிரந்தம் தவிர இவர் வேறு பல நூல்களையும் எழுதியுள்ளார். எகிப்தை மையமாக வைத்துப் பாடபோதனை நடத்தி வந்த இமாம் நஸாஈ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், இமாம்களான தப்ரானீ, தஹாவீ போன்றோரது ஆசிரியரும் ஆவார். இவர் ஹிஜ்ரி 303 இல் மக்காவில் வபாத்தானார்.

## இமாம் இப்னு மாஜா ரஹ்மதுல்லாஹி அலைஹி (ஹிஜ்ரி 209 - 273)

ஹிஜ்ரி 209 இல் கஸ்வீன் நகரில் பிறந்த இமாம் இப்னு மாஜா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களது முழுப் பெயர் **அபூ அப்துல்லாஹ் முஹம்மதிப்னு யஸீத் அல் கஸ்வீனீ** என்பதாகும். ஹதீஸ் துறையின் புகழ்பூத்த காலப் பகுதியில் வாழ்ந்த இவருக்கு ஹதீஸ் துறையில் ஏனைய இமாம்களைப் போன்று தானும் தேர்ச்சி பெற வேண்டும் என ஆர்வம் பிறந்தது. இதன் காரணமாகத் தனது பிறந்தகத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற பின்னர் குராஸான், ஈராக், ஹிஜாஸ், ஸிரியா, எகிப்து முதலான ஹதீஸ் துறையில் புகழ் பெற்று விளங்கிய நகர்களுக்குச் சென்று ஹதீஸ் கலையைப் பயின்றார்.



இமாம்களான அபூபக்ர் இப்னு அபீ ஷைபா ரஹ்மதுல்லாஹி அலைஹி, இப்றாஹீம் இப்னு முன்ஸிர் ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்றோர் இமாம் இப்னு மாஜாவின் ஆசிரியர்களாவர்.

ஸுனன் இப்னுமாஜா ஸிஹாஹுஸ் ஸித்தாவில் ஒன்றாகும். இமாமவர்கள் தமக்குக் கிடைத்த சுமார் நாற்பதாயிரம் ஹதீஸ்களில் சுமார் 4000 ஹதீஸ்களைத் தெரிவு செய்து இந்நூலைத் தொகுத்துள்ளார்கள். இமாமவர்கள் ஹிஜ்ரி 273 இல் வபாத்தானார்கள்.

இந்நால்வரது கிரந்தங்களும் ஹதீஸ் துறை அறிஞர்கள் மத்தியில் **''ஸுனன் அர்பஆ''** என அழைக்கப்படுகின்றன.

| பெயர் | பிறப்பு ஹிஜ்ரி | புனைப் பெயர் | தந்தை பெயர் | பிறந்த ஊர் | ஹதீஸ் தொகுப்பு | உள்ள டக்கம் | மறைவு ஹிஜ்ரி |
|---|---|---|---|---|---|---|---|
| முஹம்மத் | 194 | புஹாரி | இஸ்மாஈல் | புஹாரா | ஸஹீஹ் புஹாரி | 7275 | 256 |
| முஸ்லிம் | 204 | | ஹஜ்ஜாஜ் | நைசாபூர் | ஸஹீஹ் முஸ்லிம் | 4000 | 261 |
| முஹம்மத் | 209 | திர்மிதி | ஈஸா | திர்மிதி | ஜாமிஉத் திர்மிதி | 4800 | 279 |
| ஸுலைமான் | 201 | அபூ தாவூத் | அஷ்அஸ் | சிஜிஸ்தான் | ஸுனன் அபூதாவூத் | 4800 | 275 |
| அஹ்மத் | 215 | நஸாஈ | சுஐப் | நஸாஃ | ஸுனன் நஸாஈ | 4341 | 303 |
| முஹம்மத் | 209 | இப்னு மாஜா | யஸீத் | கஸ்வின் | ஸுனன் இப்னு மாஜா | 4000 | 273 |

**பயிற்சி**

1. புனைப் பெயராலன்றி சொந்தப் பெயரால் அழைக்கப்படும் ஹதீஸ் துறை இமாம் யார்?
2. திர்மிதி கிரந்தத்தின் சிறப்பம்சங்கள் யாவை?
3. இமாம் நஸாஈ அவர்களின் மாணவர்கள் யாவர்?
4. இமாம் இப்னு மாஜாவின் ஆசிரியர்கள் இருவரின் பெயர்களைத் தருக.
5. ஸுனன் அர்பஆவில் அடங்கும் கிரந்தங்கள் யாவை?



# 19

# ஹஜ்ஜதுல் விதாஃ

***''ஹஜ்ஜதுல் விதாஃ''*** என்பது **பிரியாவிடைக்குரிய ஹஜ்** எனப் பொருள்படும். இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வாழ்வின் கடைசிக் காலகட்டத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வொன்றாகும்.

ஹிஜ்ரி 10, துல்கஃதா மாதம் ஐந்தாம் நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா செல்ல இருப்பதாக அறிவித்தார்கள். இச்செய்தியை அறிந்த மக்கள் ஆண்கள், பெண்கள் எனப் பல பாகங்களில் இருந்தும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஹஜ் கடமையை நிறைவேற்றத் தயாரானார்கள்.

தன் சார்பில் அபூ துஜானா ரழியல்லாஹு அன்ஹு அவர்களை மதீனாவிற்குப் பொறுப்பாளராக நியமித்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் தோழர்களுடன் துல்கஃதா 26ஆம் நாள் பயணத்தை ஆரம்பித்தார்கள். துல் ஹுலைபா என்ற இடத்தில் இஹ்ராம் அணிந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தல்பியாவை முழங்கியவர்களாக பெரும் திரளான மக்களுடன் மக்காவை நோக்கி வந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஃபாவுக்கு வந்த செய்தி மக்காவெங்கும் பரவ ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் பெரும் திரளான மக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்ப்பதற்காக மகிழ்ச்சிப் பிரவாகத்தோடு வந்து சேர்ந்தார்கள்.

**யவ்முத் தர்வியா** எனப்படும் துல்ஹஜ் எட்டாம் நாள், வியாழக்கிழமை ழுஹா நேரத்தில் மினாவை நோக்கிச் சென்றார்கள். 9 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று அரபாவை நோக்கிச் சென்றார்கள். சூரியன் சாயும் வரை அங்கு தங்கியிருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்னர் கஸ்வா என்ற தனது ஒட்டகையில் ஏறி உர்னா என்ற பள்ளத்தாக்கின் மத்தியை அடைந்தார்கள். அங்கே குழுமியிருந்த பெருந்திரளான முஸ்லிம்கள் மத்தியில் தன் வரலாற்றுப் புகழ்மிக்க உரையை நிகழ்த்தினார்கள்.

## நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹஜ் பேருரை

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது உரையை ஆரம்பிக்கும் போது தனது வாழ்வின் கடைசி உரையாக இது இருக்கலாம் எனக் கூறினார்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இவ்வுரை, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது 23 வருட கால போதனைகளின் சாராம்சமாக அமைந்துள்ளது எனலாம். தனிமனித, குடும்ப, சமூக, பொருளாதார, அரசியல், வாழ்வு முதலான அனைத்து துறைகளையும் உள்ளடக்கியதாக இவ்வுரை அமைந்து காணப்படுகின்றமை இதன் சிறப்பம்சமாகும்.

### அவ்வுரையின் உள்ளடக்கம் வருமாறு:

1. இணைவைப்பு எனும் இழிவிலிருந்து நீங்கி அல்லாஹ்வுக்கு மாத்திரமே அடிபணிந்து வாழ வேண்டும்.
2. மனிதர்களிடையே சமத்துவம் பேணப்படல் வேண்டும். அரபிகள் அஜமிகளை விட சிறந்தவர்களுமல்லர். அஜமிகள் அரபிகளை விட சிறந்தவர்களுமல்லர். அனைவரும் ஆதமின் பிள்ளைகள். ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர்.
3. பழைய கொலைகளுக்காகப் பழிவாங்கும் ஜாஹிலிய்யாக் கால மரபு முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும். இதற்கு முன்மாதிரியாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ரபீஆ பின் ஹாரிஸின் புதல்வனின் கொலைக்காகப் பழிவாங்குவதை இரத்துச் செய்தார்கள்.
4. வட்டியுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களை முற்றாகத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். இதற்கு முன்னுதாரணமாக தனது சிறிய தந்தை அப்பாஸுக்கு வரவேண்டிய வட்டியை முதலில் இரத்துச் செய்தார்கள்.
5. பெண்களை மதித்து அவர்களது உரிமைகளைப் பேண வேண்டும். கணவன் மனைவியுடன் நடந்துகொள்ள வேண்டிய மென்மையான வழிமுறையினை வலியுறுத்தினார்கள்.
6. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரை நிகழ்த்திய நாள், மாதம், இடம் ஆகியன புனிதமானவை போன்று முஸ்லிம்களின் உயிர், உடமை, மானம் ஆகியனவும் புனிதமானவை. ஆகவே அவற்றைப் பாதுகாத்தல் வேண்டும்.
7. அல்குர்ஆன், ஸுன்னாவைப் பின்பற்றுதல் வேண்டும். ''உங்கள் மத்தியில் இரண்டை விட்டுச் செல்கின்றேன். அவற்றைப் பின்பற்றும் காலமெல்லாம் வழி தவற மாட்டீர்கள். அவை அல்குர்ஆனும் எனது வழிமுறையான ஸுன்னாவுமாகும்'' (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
8. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் போதனைகளைப் பிறருக்கு எத்தி வைக்க வேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரை நிகழ்த்தும்போது ரபீஅத் இப்னு உமையா என்ற ஸஹாபி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வார்த்தைகளை மக்கள் மத்தியில் சப்தமிட்டு அஞ்சல் செய்தார். உரை முடிவுற்றதும் மாஇதா என்ற அத்தியாயத்தின் மூன்றாம் வசனம் அருளப்பட்டது. அவ்வசனத்தை செவியுற்ற உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அழுதார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதற்குரிய காரணத்தை விசாரித்தார்கள். அதற்கு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ''அல்லாஹ்வின் தூதரே இதுவரை நாம் எமது மார்க்கத்தில் பூரணத்துவத்தை நோக்கி சென்று கொண்டிருந்தோம். இப்போது அது பூர்த்தியாகிவிட்டது. பூர்த்தியான எந்த ஒன்றும் குறையுமே அன்றிக் கூடாது அல்லவா?'' என்றார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''நீங்கள் கூறியது சரி'' என்றார்கள்.

தொடர்ந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ்ஜின் கிரியைகளை நிறைவேற்றலானார்கள். அப்போது ஹஜ்ஜின் ஒவ்வொரு தலங்களிலும் நிறைவேற்ற வேண்டியவற்றை ஸஹாபாக்களுக்குத் தெளிவுபடுத்தினார்கள்.

ஹஜ்ஜை நிறைவேற்றிய பின் மதீனா வந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சில நாட்களில் சுகயீனமுற்றார்கள். ஹஜ்ஜின் பின் ஏறத்தாழ இரண்டரை மாதங்களில் அதாவது ரபீஉல் அவ்வல் பிறை 12 இல் வபாத்தானார்கள். 'ஹஜ்' கடமையான பின் அவர்கள் செய்த முதலாவது ஹஜ், அவர்கள் எதிர்பார்த்தது போல் இறுதி ஹஜ்ஜாகவும் அமைந்தது. ஆகவேதான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்த ஹஜ் **''ஹஜ்ஜதுல் விதா''** (பிரியாவிடை ஹஜ்) என அழைக்கப்படுகிறது.

**பயிற்சி**

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ்ஜுக்காகச் செல்லும்போது மதீனாவுக்குப் பொறுப்பாக யாரை நியமித்தார்கள்?
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஹ்ராம் அணிந்த இடம் எது?
3. துல்ஹஜ் மாதம் எட்டாம் திகதி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உரையை அஞ்சல் செய்த ஸஹாபி யார்?
5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஹஜ், ஹஜ்ஜதுல் விதாஃ என்று அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

**செயற்பாடு**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ்ஜதுல் விதாஃவில் வலியுறுத்திய விடயங்களை எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.



# 20

# மஹப்பதுர் ரஸூல்




**"உங்களில் ஒருவருக்கு அவரது தந்தை, அவரது குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரையும் விட நான் மிக அன்பானவராக ஆகும் வரை அவர் உண்மையான ஈமான் கொண்டவராக மாட்டார்"** என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி)

அல்லாஹ், உலகிலுள்ள ஒவ்வொன்றினதும் சீரான இயக்கத்துக்காகப் பல்வேறு உந்து சக்திகளை ஏற்படுத்தியுள்ளான். அவற்றுள் அன்பு என்ற உந்து சக்தியும் ஒன்றாகும். பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான அன்பு சீரான குடும்ப அமைப்புக்கும் ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான அன்பு சீரான கற்றலுக்கும் வழிவகுக்கின்றது. சமூக அமைப்பில் தலைமைத்துவத்துக்கும் உறுப்பினர்களுக்கு மிடையிலான அன்பு சமூகத்தின் வெற்றிக்குக் காரணமாய் அமைகிறது. இது போன்றுதான் முஸ்லிம் சமூகம் கைக்கொள்ள வேண்டிய அன்பாக **மஹப்பதுர் ரஸூல் எனப்படும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதான அன்பு** அமைந்திருக்கின்றது.

நபித் தோழர்களான ஸஹாபாக்கள் தம் உயிரிலும் அதிகமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசித்தார்கள். குறைஷித் தலைவர்களில் ஒருவரான அபூ ஸுப்யான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் எதிரியாய் இருந்த காலத்தில்கூட முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

பற்றிக் குறிப்பிடும்போது ''முஹம்மதின் தோழர்கள் முஹம்மதை நேசிப்பது போன்று மனிதர்களில் எவரும் மற்றொரு மனிதனை நேசிப்பதை நான் காணவில்லை'' என்கிறார். ஸஹாபாக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீது வைத்த உண்மையான அன்பிற்கு பல சம்பவங்களை உதாரணமாக முன்வைக்கலாம்.

### சம்பவம் 1

ஒருமுறை மக்கா காபிர்கள் ஸைத் பின் தஸினா ரழியல்லாஹு அன்ஹு என்ற ஸஹாபியை கழுமரத்தில் ஏற்றிக் கடுமையாக சித்திரவதை செய்து கொண்டிருந்தனர். அப்போது அவரிடம் ''ஸைதே, நாம் உம்மை விட்டு விடுவோம். பதிலாக முஹம்மதைப் பிடித்து இவ்வாறு துன்புறுத்துவோம். அதை நீர் விரும்புவீரா?'' எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர் ''இல்லை, ஒருபோதும் இல்லை. அவர் இருக்கின்ற இடத்தில் அவரது காலில் ஒரு முள் தைப்பதைக் கூட நான் விரும்புவதில்லை'' என்றார்.

### சம்பவம் 2

உஹத் யுத்தத்தின்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதாக மதீனாவில் ஒரு வதந்தி பரவியது. இதைக் கேள்விப்பட்ட ஓர் அன்ஸாரிப் பெண்மணி உஹத் களத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார். போகும் வழியில் அவரிடம் உங்களது கணவன், தந்தை, சகோதரன் கொல்லப்பட்டனர் என சொல்லப்படுகிறது. ஆனால் அப்பெண்மனி அதைப் பொருட்படுத்தாமல் ''நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிருடன் இருக்கின்றாரா?'' என்று கேட்டவாறு களத்தை நோக்கி ஓடினார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிருடன் இருப்பதாகக் கூறப்பட்டது. அவ்வார்த்தையில் திருப்தியடையாத அப்பெண், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்ணால் காண வேண்டும் என்று வேண்டினார். பின்னர் அவள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அழைத்துச் செல்லப்பட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டதும், ''அல்லாஹ்வின் தூதரே உங்களை உயிருடன் கண்டபின் எனக்கேற்பட்ட இழப்புக்கள் எல்லாம் சர்வ சாதாரணமானதே'' என்றார்.



## சம்பவம் 3

ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து ''அல்லாஹ்வின் தூதரே! எனது உயிரை விடவும் எனது பிள்ளைகளை விடவும் எனது சொத்துக்களை விடவும் நீங்களே எனது நேசத்துக்குரியவர். நான் வீட்டில் இருக்கும் போது உங்கள் நினைவு வந்தால் உங்களை வந்து பார்க்காமல் என் மனம் நிம்மதியடையாது. உங்களது மரணத்தையும் எனது மரணத்தையும் எண்ணிப்பார்க்கும் போது நான் அறிந்துள்ளதன்படி நீங்கள் சுவர்க்கத்தில் நபிமார்களின் சபையில் இருப்பீர்கள். ஆகவே நான் சுவர்க்கம் நுழைந்தால் என்னால் உங்களைக் காண முடியாமல் போய்விடுமோ என அஞ்சுகிறேன்'' என்றார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பதில் கூறவில்லை. அப்போது அல்லாஹ்,

**யார் அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவர்கள் அல்லாஹ்வின் அருளைப்பெற்ற நபிமார்கள், ஸித்தீகீன்கள் (சத்தியவான்கள்) ஷுஹதாக்கள் (உயிர்த்தியாகிகள்) ஸாலிஹீன்கள் (நற்கருமங்களுடையவர்கள்) ஆகியவர்களுடன் இருப்பார்கள் - இவர்கள் தாம் மிக்க அழகான தோழர்கள் ஆவார்கள்.** (4: 69) என்ற அல்குர்ஆன் வசனத்தை அருளினான்.

ஸஹாபாக்களைப் போலவே அவர்களைத் தொடர்ந்த தாபிஈன்கள், தபஉத் தாபிஈன்கள் காலங்களிலும் அதற்குப் பின் உள்ள காலங்களிலும் வாழ்ந்த நல்லடி யார்கள் அனைவரும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பவர்களாகவே இருந்துள்ளனர். ''அவர்களிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றிக் கூறப்படும்போது அவர்களது உடல் நிறம் மாறிவிடும். கண்கள் கண்ணீர் சிந்தும்'' என தாபிஈன்கள் பற்றி வரலாற்று நூல்களில் எழுதப்பட்டுள்ளன. ஹதீஸ்துறை இமாம்கள் எவ்வித உலக ஆதாயமும் இன்றி ஹதீஸ்களை ஒன்று திரட்டுவதற்காகப் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்ததற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது கொண்டிருந்த அன்பே பெரும் காரணமாக அமைந்தது.



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஏன் அன்புவைக்க வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலக மக்கள் அனைவருக்கும் ஓர் அருட்கொடையாய் இருக்கின்றமை.

   **''(நபியே) உங்களை உலகத்தாருக்கு ஓர் அருளாகவேயன்றி நாம் அனுப்ப வில்லை.'' (21: 107)**

2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் உம்மத்தினரை அதிகமாக நேசித்தமை

   **''நம்பிக்கையாளர்களே! நம்முடைய ஒரு தூதர் நிச்சயமாக உங்களிடம் வந்திருக்கிறார். அவர் உங்களில் உள்ளவர்தான். உங்களுக்கு யாதொரு துன்பம் ஏற்பட்டு நீங்கள் கஷ்டத்துக்கு உள்ளாகிவிட்டால் அது அவருக்கு மிக்க வருத்தமாக இருக்கும். அவ்வளவு தூரம் உங்கள் மீது அன்புடையவர். அன்றி உங்களுக்கு நன்மையை பெரிதும் விரும்புகின்றவராகவும் நம்பிக்கையாளர்களாகிய உங்கள் மீது மிக்க கருணையும் அன்பும் உடையவராகவும் இருக்கின்றார்.'' (9: 128)**

3. மறுமையில் அனைவருக்காகவும் அல்லாஹ்விடம் ஷபாஅத் செய்யும் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒருவராக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உள்ளமை.

4. அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பதும் அவரைப் பின்பற்றுவதும் நிபந்தனையாக இருக்கின்றமை.

   **''நபியே கூறுங்கள் நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாய் இருப்பின் என்னைப் பின்பற்றுங்கள் அல்லாஹ் உங்களை நேசிப்பான்.'' (3: 31)**

5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பதன் மூலம் அவர்களுடன் சுவர்க்கத்தில் இருக்கும் உயர்ந்த பாக்கியம் கிடைக்கின்றமை.

   ''மனிதன் தான் நேசித்தவர்களுடனேயே மறுமையில் இருப்பான்.''

6. ஈமான் பூர்த்தியாவதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீது அன்பு வைப்பது நிபந்தனையாக இருக்கின்றமை.

   **''திண்ணமாக நம்பிக்கையாளர்களுக்கு அவர்களின் உயிர்களைவிட நபிதான் முன்னுரிமை பெற்றவராவார்.'' (33: 6)**

7. மக்கள் நேர்வழி பெற வேண்டும் என்பதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டிருந்த பேரவாவும் அதற்காக அவர்கள் பட்ட கஷ்டங்களும்.

மேலே கூறப்பட்ட காரணங்களை நோக்குகின்றபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பது முழு முஸ்லிம் உம்மத்துக்கும் உள்ள கடமையாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதுள்ள அன்பை நாம் வெளிப்படுத்துவதற்கு இஸ்லாம் பல வழிமுறைகளைக் கற்றுத் தருகிறது.

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அதிகமாக ஸலவாத்துச் சொல்லுதல்.
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குடும்பத்தவர்களாகிய அஹ்லுல் பைத்தினரை நேசித்தல்.
3. நபித்தோழர்களாகிய ஸஹாபாக்களை நேசித்தல்.
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிக்கக் கூடியவர்களை நேசித்தல்.
5. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸுன்னாவைப் பின்பற்றுதல்.
6. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸீராவைப் படித்தல்.
7. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் உண்மையான தூதர் என்பதை உலகிற்கு எடுத்துரைத்தல்.
8. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதிராக வருகின்ற சவால்களை முறியடித்தல்.
9. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தினராகிய முஸ்லிம்கள் மத்தியில் ஐக்கியத்தைப் பேணுதல்/ ஏற்படுத்தல்.
10. வாழ்வில் அனைத்து விடயங்களிலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்மாதிரியாகக் கொள்ளல்.
11. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னைப் பின்பற்று பவர்களிடமிருந்து எவற்றை எதிர்பார்த்தார்களோ அவற்றை நிறைவுசெய்ய உழைத்தல்.
12. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பிறர் தூற்றுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தாதிருத்தல்.

மேலே தரப்பட்ட வழிமுறைகளை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதுள்ள அன்பின் வெளிப்பாடாக நாம் மேற்கொள்கின்றபோது அவை ஒவ்வொரு தனி மனிதனின் வெற்றிக்கும் உம்மத்தின் வெற்றிக்கும் காரணமாய் அமையும்.

**ஆகவே நாமும் ஸஹாபாக்களைப் போன்று எமது உயிரிலும் மேலாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்பு வைப்போம்.**

**பயிற்சி**

*அ. பொருத்தமான விடையைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.*

*(உயிரை விடவும், மஹப்பதுர் ரஸூல், ஷபாஅத், அன்பின், சவால்களை)*

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பரஸ்பர .................. அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தைக் கட்டியெழுப்பினார்கள்.
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீது செலுத்தப்படும் அன்பு .................... எனப்படுகிறது.
3. மறுமையில் அனைவருக்காகவும் அல்லாஹ்விடம் ................... செய்யும் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒருவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாவார்.
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதிராக வருகின்ற .................. முறியடிப்பது முஸ்லிம் மீது கடமையாகும்.
5. நாம் எமது ....................... அதிகமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்பு வைக்க வேண்டும்.

*ஆ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

1. ஸஹாபாக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது வைத்த அன்பை அபூஸுப்யான் அவர்கள் எவ்வாறு வர்ணித்தார்?
2. குறைஷியர் ஸைத் பின் தஸினாவிடம் கேட்ட கேள்வியையும் அவர் அதற்கு வழங்கிய பதிலையும் குறிப்பிடுக.
3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதான அன்பை வெளிப்படுத்தும் ஐந்து வழிமுறைகளைக் குறிப்பிடுக.



# 21

# நபிமார்கள் இருவர்

## மூஸா அலைஹிஸ்ஸலாம்

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கி.மு. 1250 ஆம் ஆண்டில் எகிப்தில் பனூஇஸ்ராஈல் குடும்பத்திலே பிறந்தார்கள். யூஸுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலத்தில் பலஸ்தீனத்தில் இருந்து எகிப்துக்கு வந்து குடியேறி, மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாக அங்கு வாழ்ந்த பனூ இஸ்ரவேலர்கள் பிற்காலத்தில் பிர்அவ்ன்கள் எனப்படும் எகிப்திய மன்னர்களின் அடக்குமுறைகளுக்கு ஆளாகினர்.

பனூ இஸ்ரவேல் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் குழந்தை ஒன்று தனக்கு அச்சுறுத்தலாய் வரும் என்ற ஆரூடமொன்றின்படி, இரண்டாம் ராம்ஸீஸ் என்ற பெயரையுடைய பிர்அவ்ன் மன்னன், பனூ இஸ்ரவேல் குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொலை செய்யலானான். இவ்வாறான சூழலில்தான் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிறந்தார்கள்.

அல்லாஹ்வின் வல்லமையினால் குழந்தை மூஸா, பிர்அவ்னின் அரண்மனையில் அரசி ஆஸியாவிடம் சீராக வளர்ந்தது. தான் அஞ்சிய பனூ இஸ்ரவேல் குடும்பத்தைச் சேர்ந்த ஆண் மகன் இதுதான் என்பதை மன்னன் அப்போது அறிந்திருக்கவில்லை. என்றாலும் வாலிபத்தை அடைந்த மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எகிப்திலிருந்து மத்யனுக்கு தப்பிச் செல்ல வேண்டி ஏற்பட்டது. அங்கே இறை விசுவாசியான ஒரு வயோதிபரிடம் (ஷுஐப் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம்) தஞ்சமடைந்தார். பின்னர் அவரது இரு புதல்விகளில் ஒருவரைத் திருமணமுடித்தார்.

ஒரு நாள் இரவு தனது தாயையும் சகோதரியையும் பார்த்து வருவதற்காக மனைவியுடன் புறப்பட்டார். எதிரிகளின் கண்களில் படாதிருப்பதற்காக மாற்று வழிகளைப் பயன்படுத்தினார். வழியில் குளிரினாலும் காரிருளினாலும் திசைமாறிச் சென்று தூர்ஸீனா மலைச் சாரலை அடைந்தார். இந்நிலையில் கடுமையாக நோய்வாய்ப்பட்ட அவரது மனைவிக்கு குளிர்காய நெருப்பினைத் தேடிய வேளையிலேயே தூர்ஸீனா மலைச்சாரலில் நெருப்பெரிவதைக் கண்ணுற்றார்.

அங்கே சென்றதும் ''மூஸாவே அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் நான்தான்'' எனும் அசரீரியான சப்தத்தைக் கேட்டார். இதுவே மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தர்ப்பமாகும்.

அல்லாஹ் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு பிர்அவ்னிடம் சென்று, தான் அல்லாஹ்வின் தூதர் என்பதை எடுத்துச் சொல்லி பனூ இஸ்ரவேலர்களை அவனிடமிருந்து விடுவிக்குமாறு கட்டளை பிறப்பித்தான். தான் நபியென்பதை உறுதிப்படுத்துவதற்காக இரு முஃஜிஸாத்துக்களான (அற்புதங்களை) கைகள் பிரகாசிக்கக் கூடிய அற்புதத்தையும் கைத்தடி பாம்பாக மாறக்கூடிய அற்புதத்தையும் அவருக்கு வழங்கினான். அவரது வேண்டுகோளுக்கிணங்க சகோதரர் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் நபியாகத் தெரிவுசெய்து அவருக்கு உதவி செய்தான்.

நபிமார்கள் இருவரும் பிர்அவ்னிடம் சென்று அல்லாஹ்வின் கட்டளையை எடுத்துக் கூறினர். ஆணவம் கொண்ட பிர்அவ்ன், அவர்களைப் பரிகசித்தான். சூனியக்காரர்கள் மூலம் அவர்களது நுபுவ்வத்தை முறியடிக்க முனைந்தான். ஆனால் இறுதியில் சூனியக்காரர்களே மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நபியென விசுவாசித்தனர்.

பிர்அவ்ன் தனது பிடிவாதத்திலும் ஆணவத்திலும் இருப்பதைக் கண்ட மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், அல்லாஹ்வின் கட்டளைப்படி இரகசியமாக பனூ இஸ்ரவேலர்களை அவர்களது ஆரம்ப இடமாகிய பலஸ்தீனத்துக்கு அழைத்துச் சென்றார். பனூ இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து தப்பிச் செல்வதை அறிந்த பிர்அவ்ன் தனது பரிவாரத்துடன் அவர்களைப் பின்தொடர்ந்தான். அல்லாஹ் பிர்அவ்னையும் அவனது பரிவாரத்தையும் கடலில் மூழ்கடிக்கச் செய்து அழித்துவிட்டான்.

எகிப்திலிருந்து வந்த மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி பலஸ்தீனத்தை நோக்கி தன் சமூகத்தை அழைத்துச் சென்றார்கள். அல்லாஹ் பனூ இஸ்ரவேலர்கள் நேர்வழி நடப்பதற்காக மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தவ்ராத் எனும் வேதத்தையும் வழங்கினான்.



அதிகமான இறையருள்களைப் பெற்ற பனூ இஸ்ரவேலர்களில் அதிகமானோர் நன்றி கெட்டவர்களாகவும் மாறு செய்பவர்களாகவுமே இருந்தனர். அல்லாஹ்வுக்கு இணைவைத்தனர்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் மன வேதனைப்படுத்தினர். பலஸ்தீனத்தை அண்மித்தபோது தமது கோழைத்தனத்தை வெளிப்படுத்தி அங்கு செல்லாமல் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது கட்டளைகளுக்கு மாறு செய்தனர். ஆகவே அல்லாஹ் நீண்டகாலம் அவர்களை சீனாய் பாலைவனத்தில் சோதித்தான்.

ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் வபாத்தானார்கள். தன் சமூகத்தாரின் நன்றிகெட்ட குணம் காரணமாக அல்லாஹ் புனிதப்படுத்திய பலஸ்தீனத்தில் நுழைய முடியாது போன மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மிகவும் வேதனைப்பட்டார்கள். அல்லாஹ் வாக்களித்த பூமியைப் பார்க்க வேண்டும் என்ற பேராவலில் ஒருநாள் பலஸ்தீனை நோக்கி நடந்தார்கள். அப்போது அவருக்கு வயது 120. சென்றவர் மீண்டும் வரவேயில்லை. அவர் மரணித்திருக்கலாம் என நினைத்து பனூ இஸ்ரவேலர்கள் சில நாட்கள் துக்கம் அனுஷ்டித்தனர். அவர்கள் எவ்விடத்தில் மரணித்தார்; எங்கு அடக்கம் செய்யப்பட்டார் என்ற விபரம் எதுவும் பனூ இஸ்ரவேலர்களுக்குத் தெரியவில்லை.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மரணம் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறும்போது ''அவரது அடக்கஸ்தலம் குத்ஸ் எனும் இடத்திற்கு கல்லெறி தூரத்தில் இருக்கும் செம்மணற் குன்றடியே அமைந்துள்ள பாதையருகில் உள்ளது'' என்றார்கள்.



# ஈஸா அலைஹிஸ்ஸலாம்

இஸ்ரவேலர்களுக்கு வழிகாட்ட அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபிமார்களுள் ஸக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் ஒருவராவார். இவரது காலத்தில் பனூ இஸ்ரவேலர்களில் இம்ரான் என்றொருவர் இருந்தார். அவரது மனைவி தனக்குக் கிடைக்க இருக்கும் குழந்தையை பைதுல் முகத்தஸில் முழு நேரமும் சேவை புரிவதற்கு அர்ப்பணிப்பதாக அல்லாஹ்விடம் நேர்ச்சை வைத்தார். அவர் ஆண் குழந்தையை எதிர்பார்த்தார். ஆனால் கிடைத்ததோ பெண் குழந்தை. அதற்கு மர்யம் எனப் பெயரிட்ட தாய், அதை அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டினார். அநாதையாகப் பிறந்த குழந்தை அல்லாஹ்வின் உதவியால் சீராக வளர்ந்தது. அக்குழந்தை சிறுமியாக வளர்ந்தபோது சிறுமியின் தாய் தனது நேர்ச்சையை நிறைவேற்றினார்.

சிறுமியை ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் பொறுப்பெடுத்தார். சிறுமிக்குத் தேவையான உணவை அல்லாஹ் அனுப்பி வைத்தான். பைதுல் மக்திஸினுள் இறை வணக்கத்தோடு வளர்ந்த சிறுமி வாலிபப் பருவத்தை அடைந்தபோது மலக்குகள் அவரைச் சந்தித்தனர். அல்லாஹ்வின் அற்புதத்தால் அவர் அல்மஸீஹ் ஈஸா பின் மர்யம் என்ற ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கப் போவதாகவும் அவர் பின்னர் பனூ இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ்வின் ரஸூலாக இருப்பார் எனவும் மலக்குகள் நன்மாராயம் கூறினர்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தந்தையில்லாமல் பிறந்ததும் பனூ இஸ்ர வேலர்கள் மர்யம் அலைஹஸ்ஸலாம் மீது படுதூறு கூறினர். அப்போது கைக் குழந்தையாகிய ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பெரியவர் போன்று மக்களுடன் பேசி தாயைப் பாதுகாத்தார். பலஸ்தீனை ஆட்சி செய்த ஏரொத் என்ற மன்னனால் குழந்தை ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கொலை செய்யப்படுவதற்காகத் தேடப்பட்டார். அப்போது மர்யம் அலைஹஸ்ஸலாம் அவர்களின் குடும்பம் பாதுகாப்புக் கருதி எகிப்துக்கு பயணமாகியது. மன்னன் இறந்த செய்தி கேள்விப்பட்டதன் பின்னரேயே அவர்கள் மீண்டும் பலஸ்தீனத்துக்கு வந்தனர்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சிறுவனாக இருக்கும்போதே பனூ இஸ்ரவேலர்களின் சமய அறிஞர்களுடன் தர்க்கிப்பார்கள். அவர்களது பிழைகளைச் சுட்டிக் காட்டுவார்கள். அவர்களது அநியாயங்களை எதிர்ப்பார்கள். இதனால் அவர்களது கோபத்துக்கும் உள்ளானார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது முப்பதாவது வயதை அடைந்த போது அல்லாஹ் அவரைத் தனது நபியாகவும் ரஸூலாகவும் தேர்ந்தெடுத்தான். இன்ஜீல் எனும் வேதத்தைக் கொடுத்தான். அத்துடன் மரணித்தவர்களை உயிர்ப்பித்தல், பிறவிக் குருடர்களையும் குஷ்டரோகிகளையும் குணப்படுத்தல், வீட்டில் மறைவாக வைக்கப் பட்டுள்ள பொருட்களைச் சரியாக அறிவித்தல் போன்ற முஃஜிஸாத்துக்களையும் வழங்கினான்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், தான் அல்லாஹ்விடமிருந்து பெற்றுக் கொண்ட வேதத்தை மக்களுக்கு எத்தி வைக்கலானார்கள். தவ்ராத் வேதத்தில் உள்ள கஷ்டமான சட்டங்களை இலகுபடுத்தவே அல்லாஹ் தனக்கு இன்ஜீலைத் தந்ததாகவும்

இதன் பிறகு இவ்வேதத்தையே பின்பற்றவேண்டும் என்றும் மக்களை அழைத்தார். தன்னைப் பற்றி ஏற்கனவே மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளதையும் எடுத்துச் சொன்னார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனூ இஸ்ரவேலர்களின் மத்தியில் தீவிர பிரசாரப் பணியில் ஈடுபட்டார்கள். இதைப் பொறுக்க முடியாத பனூ இஸ்ரவேலர்களது மத அறிஞர்கள், பொதுமக்களை அவர்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டனர். மக்களிடமிருந்து வந்த எதிர்ப்புக்களை எல்லாம் பொறுமையோடு எதிர் கொண்டார்கள். அவர்களை மன்னித்துத் தனது அன்பை வெளிக்காட்டினார்கள்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காட்டிய முஃஜிஸாத்துக்களைக் கண்டு அவரது அழைப்பை முதன் முதலாக ஏற்ற அவரது சீடர்கள் 'ஹவாரிய்யூன்கள்' எனப் படுகின்றனர். இவர்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பற்றிய செய்தியை மக்கள் மத்தியில் சென்று பிரசாரம் செய்தனர். இதனால் பொதுமக்களில் அதிகம் பேர் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை விசுவாசம் கொண்டனர். இன்ஜீல் வேதம் நாளுக்கு நாள் பரவிச் செல்வதைக் கண்ட சில பனூ இஸ்ரவேலர்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தீர்த்துக்கட்டுவதற்கான வழிமுறைகள் பற்றிச் சிந்திக்கலாயினர். அதன்படி அவர்கள் பலஸ்தீனத்தை ஆட்சி செய்த ரோமானிய சிற்றரசனிடம் சென்று ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தன்னை பனூ இஸ்ரவேலர்களின் அரசராக்கிக் கொள்ள முயற்சிக்கிறார் எனக் கூறினர். இதனால் ஆத்திரமடைந்த அரசன், ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைத் தேடி வலைவிரித்தான்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒருநாள் தன் சீடர்களுடன் அமர்ந்திருக்கும் வேளையில் ரோமானியப் படைவீரர்கள் அவரைக் கைது செய்வதற்காக முன்னோக்கி வருவதைக் கண்டார்கள். அப்போது அவர்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடினார்கள். அல்லாஹ் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது உருவத்தை, அவரைக் காட்டிக் கொடுத்தவருக்கு வழங்கி, ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை தன் பக்கம் உயர்த்திக் கொண்டான். ரோமானியப் படைவீரர்கள் அந்த மனிதனை ஈஸா அலைஹிஸ்ஸலாம் என நினைத்துக் கைது செய்து இறுதியில் சிலுவையில் ஏற்றிக் கொலை செய்தனர். சிலுவையில் கொலை செய்யப்பட்டவர் ஈஸா அலைஹிஸ்ஸலாம் என்றே இன்றும் அதிகமானோர் தவறாக நம்புகின்றனர். ஈஸா அலைஹிஸ்ஸலாம் குறித்த உண்மையான செய்தியை அடுத்து வரக்கூடிய இறைத்தூதர் மக்களுக்குத் தெளிவுபடுத்துவார் என ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஏற்கனவே சொல்லி வைத்திருந்தார். இம் முன்னறிவிப்பு இன்றும் இன்ஜீல் வேதத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின் நபியாக வந்த முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பற்றிக் குறிப்பிடும்போது ''அவர் சிலுவையில் அறையப்படவுமில்லை; கொல்லப் படவுமில்லை. அவரை அல்லாஹ் தன் பக்கம் உயர்த்திக் கொண்டான். உலக முடிவின் அடையாளமாக அல்லாஹ் மீண்டும் அவரை உலகிற்கு அனுப்புவான். அவர் மக்களை இஸ்லாத்தின்பால் அழைப்பார். அநியாயத்தை எதிர்த்துப் போராடுவார். நீதியான முறையில் ஆட்சி நடாத்துவார். அதன்பிறகே அவர் மரணிப்பார்'' என விளக்கியுள்ளார்கள்.

**பயிற்சி**

*சரி பிழை கூறுக.*

1. *மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பலஸ்தீனத்தில் பிறந்தார்கள். ( )*
2. *பனூ இஸ்ரவேலர்கள் எகிப்துக்கு வந்ததிலிருந்து அடக்குமுறைக்கு ஆளாகினர். ( )*
3. *ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனூ இஸ்ரவேல் பரம்பரையைச் சேர்ந்தவராவார். ( )*
4. *ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை பனூ இஸ்ரவேலர்கள் கொலை செய்தனர். ( )*
5. *ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீண்டும் உலகிற்கு வருவார். ( )*

*பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக.*

1. *மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் யாவை?*
2. *மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு எதிராக நின்ற பிர்அவ்னின் பெயர் என்ன?*
3. *ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் யாவை?*
4. *ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது சீடர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?*

**ஒப்படை**

*மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது வரலாறு பல்வேறு சம்பவங்களை உள்ளடக்கியது. அவற்றுள் சில அல்குர்ஆனில் வந்துள்ளன. தரப்பட்டுள்ள அல்குர்ஆன் வசனங்களைப் படித்து கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் அந்தச் சம்பவங்களைக் கதையாகத் தொகுத்து சிற்றேடு தயாரிக்குக.*

1. *மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிறப்பும் பிர்அவ்னிடமிருந்து பாதுகாக்கப்பட்ட விதமும் (அல்கஸஸ்: 7-13)*
2. *எகிப்திலிருந்து தப்பிச் செல்லக் காரணம் (அல்கஸஸ்: 14-21)*
3. *திருமணம் (அல்கஸஸ்: 22-28)*
4. *மந்திரவாதிகளைத் தோற்கடித்தல் (ஷுஅரா: 34-51)*
5. *பிர்அவ்ன் அழிவுறல் (ஷுஅரா: 52-66)*

# 22

أُمَّهَاتُ الْمُؤْمِنِيْن

# உம்மஹாத்துல் முஃமினீன்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மகத்தான வெற்றிக்கு அவர்களது மனைவிமார்களின் பங்களிப்பும் முக்கிய காரணியாக அமைந்திருந்தது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பணிவிடை செய்தல், அவரது போதனைகளுக்கு முன்னுதாரணமாய் நிற்றல், ஆலோசனை கூறுதல், அவரிடமிருந்து மார்க்கத்தைக் கற்றுப் பிறருக்கும் கற்றுக் கொடுத்தல் போன்றன இவர்களது பிரதான பங்களிப்புக்களாகும். ஆகவே **உம்மஹாத்துல் முஃமினீன்** (விசுவாசிகளின் அன்னையர்) எனச் சிறப்பித்துக் கூறப்படும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவிமார்கள் பற்றி அறிந்திருப்பது அவசியமாகும். இவ்வகையில் அவர்களுள் நால்வரைப் பற்றி நாம் இங்கு நோக்குவோம்.

## ஸைனப் பின்த் ஹுஸைமா ரழியல்லாஹு அன்ஹா

உஹத் போர்க் களத்தில் முஸ்லிம்களும் காபிர்களும் மோதிக்கொண்டனர். அப்போது முஸ்லிம்கள் தரப்பில் போராடிய அப்துல்லாஹ் இப்னு ஜஹஷ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். இவரது மனைவிதான் ஸைனப் பின்த் ஹுஸைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களாவார். இவர் அன்னை மய்மூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் தாய்வழி சகோதரியாவார். தன் கணவனின் மரணத்தைத் தொடர்ந்து புகுந்த இடமாகிய மதீனாவில் விதவையாகத் தனிமைப்பட்டிருந்தார்கள். அவ் வேளையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரைத் திருமணம் முடிப்பதற்கு விருப்பம் கேட்டார்கள். அதற்கு ''அல்லாஹ்வின் தூதரே தாங்கள் விரும்பியதை நிறைவேற்ற நான் சம்மதிக்கிறேன்'' என பதில் கூறியனுப்பினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸைனப் பின்த் ஹுஸைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களை 400 திர்ஹங்கள் மஹராகக் கொடுத்து ஹிஜ்ரி மூன்றில் திருமணம் முடித்தார்கள். எனினும், இவர்களது குடும்ப வாழ்கை சில

மாதங்களே நீடித்தது. அன்னையவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் திருமணம் முடித்து ஒருசில மாதங்களில் வபாத்தானார்கள்.அன்னாரது ஜனாஸாத் தொழுகையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே நடத்தி பின்னர் ஜன்னதுல் பகீஇல் அடக்கம் செய்தார்கள்.

ஸைனப் பின்த் ஹுஸைமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஜாஹிலிய்யாக் காலம் முதலே தர்மத்திற்குப் பெயர் பெற்றிருந்தார்கள். அவர் இஸ்லாத்திற்கு முன்னரும் பின்னரும் ஏழைகள் மீதும் அநாதைகள் மீதும் அதிக இரக்கம் காட்டுபவர்; தாராளமாக செலவு செய்பவர் என்பதனால் **''உம்முல் மஸாகீன்''** (ஏழைகளின் அன்னை) என்று புகழ்ந்துரைக்கப்பட்டார்கள்.

## ஸைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா

ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தந்தையின் சகோதரியான உமைமா பின்த் அப்துல் முத்தலிப் அம்மையாரின் மகளாவார். அவர்கள் ஹிஜ்ரத்துக்கு முன்னரே இஸ்லாத்தை ஏற்றார்கள். பின்னர் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். அங்கு இருக்கும்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது வளர்ப்பு மகனாகிய ஸைத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணமுடித்துக் கொடுக்க விரும்பினார்கள். ஆனாலும் உயர் குலப்பெண்ணாகிய ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அதை விரும்பவில்லை. அப்போது அஹ்ஸாப் என்ற அத்தியாயத்தின் 36 ஆம் வசனம் அருளப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஸைத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை மணமுடிக்க இணங்கினார்கள். திருமணமும் நடைபெற்றது. ஆனாலும் அவர்களது மண வாழ்க்கை நீடிக்கவில்லை. ஸைத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தன் மனைவியை விவாகரத்துச் செய்தார்கள். இந்நிலையில் அல்லாஹ் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மணமுடிக்குமாறு கட்டளையிட்டான். ஹிஜ் 5 இல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்னாரை மணமுடித்தார்கள்.

''மார்க்க விடயங்களில் ஸைனபை விடவும் சிறந்த ஒரு பெண்ணை நான் கண்டதில்லை. அவர் மிகவும் இறையச்சமுடையவர். உண்மையே பேசுபவர். குடும்ப உறவைப் பேணுபவர். அதிகம் தர்மம் செய்பவர்'' என ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்

உலகப் பற்றற்றவராகவும் ஏழை எளியோரை அதிகம் நேசிப்பவராகவும் இருந்துள்ளார்கள்.

ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா அவர்களை மரணம் நெருங்கியபோது அங்கிருந்தவர்களிடம் ‘‘நான் எனக்குரிய கபன் துணியைத் தயார்படுத்தி வைத்திருக்கிறேன். கலீபா உமர் அவர்களும் எனக்கு கபன் துணியை அனுப்பினால் இரண்டில் ஒன்றை தர்மம் செய்யுங்கள்’’ எனக் கூறினார்கள்.

ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது மனைவியர்களிடம் நான் மரணித்தபின் உங்களில் முதலில் மரணிப்பவர் உங்களில் **நீண்ட கையை உடையவரே** என்றார்கள். இதைக் கேட்ட அவர்கள் ஒவ்வொருவரும் தமக்கிடையே யாருடைய கை மிகவும் நீளமானது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தனர். ஸவ்தா ரழியல்லாஹு அன்ஹா அவர்களது கையே நீளமாக இருந்தது. ஆனால் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்களே முதலில் மரணித்தார்கள். ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘ஸைனபின் மரணத்தின் பின்னர்தான் நீண்ட கை என்பதன் மூலம் அதிக தர்மம் செய்பவரையே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள் என்பதை அறிந்து கொண்டோம். ஸைனப் தன் கையினாலேயே உழைத்து அதிகம் தர்மம் செய்பவராக இருந்தார்கள்.’’ (புஹாரி)

ஹிஜ்ரத்திற்கு 33 ஆண்டுகளுக்கு முன் பிறந்த இவர்கள் ஹிஜ்ரத்தின் பின் 20 ஆம் ஆண்டில் தனது 53 ஆவது வயதில் வபாத்தானார்கள். மரணத்தின்போது அவரது சொத்துக்கள் என எதுவும் எஞ்சியிருக்கவில்லை. அனைத்தும் தர்மம் செய்யப் பட்டிருந்தது. கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களே அன்னாரது ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றினார்கள். பின்னர் ஜன்னதுல் பகீஇல் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

## மய்மூனா ரழியல்லாஹு அன்ஹா

ஹிஜ்ரி 7ஆம் ஆண்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உம்ராவை முடித்து மக்காவில் தன் தோழர்களுடன் அமர்ந்திருந்த வேளையில் ஓர் இளம் பெண் ஒட்டகையின் மீதமர்ந்தவாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன் வந்து நிற்கிறார். வந்தவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ‘‘அல்லாஹ்வின் தூதரே இவ் ஒட்டகையும் அதன் மீதிருப்பவரும் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்குமே சொந்தம்’’ என்றார்.

இவ்வாறு தன்னை இறைதூதருக்காய் அர்ப்பணித்தவரே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறுதியாக மணமுடித்த அன்னை மய்மூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்களாவார்கள்.

மய்மூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவியாகிய உம்முல் பழ்ல் ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் சகோதரியாவார். இவர் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன் இவரது முதற் கணவரான மஸ்ஊத் என்பவர் இவரை விட்டுப் பிரிந்ததன் பின் இரண்டாவதாக அபூ ருஹ்ம் என்பவரை மணமுடித்தார். சில நாட்களிலேயே அவரும் மரணித்தார். இதற்குப் பின்னரே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விதவையாக இருந்த மய்மூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைத் திருமணம் முடித்தார்கள்.

மய்மூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அதிகமாக அன்பு வைத்திருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து அதிகமான ஞானத்தைக் கற்றுக்கொண்டார்கள். இறை வணக்கத்தில் அதிக நேரத்தைச் செலவிட்டார்கள். மஸ்ஜிதுன் நபவியில் தொழுகை நிறைவேற்றுவதில் பேரின்பம் கண்டார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மரண வேதனை வந்தபோது மய்மூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டுக்குத்தான் சென்றார்கள். அவரிடம் அனுமதிபெற்றே ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தனது வீட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வபாத்துக்குப் பின் மய்மூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஸஹாபாக்களுக்கும் தாபிஈன்களுக்கும் ஹதீஸைக் கற்றுக் கொடுத்தார்கள். ஏறத்தாழ 76 ஹதீஸ்களை அவர்கள் ரிவாயத்துச் செய்துள்ளார். ஹிஜ்ரி 51 இல் ஹஜ்ஜுக்குச் சென்று வரும் வழியில் தனது எண்பதாவது வயதில் வபாத்தானார்.

அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க அவரது ஜனாஸா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் திருமணம் செய்தபோது அமைக்கப்பட்ட கூடாரம் இருந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. அப்போது முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாவாக இருந்தார்கள்.

''அல்லாஹ்வின் மீது ஆணையாக மய்மூனா அவர்கள் எங்கள் அனைவரையும் விட இறையச்சம் மிக்கவராகவும் குடும்ப உறவைப் பேணுபவராகவும் இருந்தார்கள்'' என ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

# உம்மு ஹபீபா ரழியல்லாஹுு அன்ஹா

ஹிஜ்ரி 8ஆம் ஆண்டு மக்கா வெற்றிக்கு முன் குறைஷித் தலைவர் அபூ ஸுுப்யான் ஹுுதைபியா உடன்படிக்கை தொடர்பாக நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களுடன் கலந்துரையாட மதீனா வருகிறார். அங்கே தனது மகள் ரம்லாவின் வீட்டுக்குச் செல்கிறார். அங்கு ஒரு விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. அபூ ஸுுப்யான் அதில் அமர்வதற்காக நெருங்கியபோது ரம்லா தன் தந்தையை அதில் இருக்கவிடாமல் அதை எடுத்து மடித்து வைக்கிறார். பின் தந்தையிடம் ''இது நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் அமர்ந்து கொள்ளும் விரிப்பு. நஜீஸான முஷ்ரிக்காக இருக்கும் நிலையில் அதில் உங்களுக்கு அமர முடியாது'' என்றார்கள்.

ரம்லா அவர்கள் தன் கணவனுடன் இஸ்லாத்தை ஏற்று பின் இருவருமாக அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள். அங்கு கணவன் இஸ்லாத்தை விட்டுவிட்டு கிறிஸ்தவ மதத்துக்குச் சென்றுவிட்டார். ரம்லா தன் கணவனை இழந்து விதவையானார். அப்போது அவருக்கு ஹபீபா என்ற ஒரு குழந்தையும் இருந்தது. ஆகவேதான் அவர் பிறகு உம்மு ஹபீபா என அழைக்கப்படலானார்.

உம்மு ஹபீபா ரழியல்லாஹுு அன்ஹா அவர்களின் நிலையை அறிந்த நபி ஸல்லல்லாஹுு அலைஹிவஸல்லம் அவர்கள் நஜ்ஜாஷி மன்னனுடன் தொடர்பு கொள்கிறார். உம்மு ஹபீபாவைத் தனக்குத் திருமணம் முடித்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறார். மன்னன் அதற்கிணங்கி உம்மு ஹபீபாவை நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கிறார். நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் சார்பில் மன்னன் நஜ்ஜாஷி 400 தீனார்களை உம்மு ஹபீபாவுக்கு மகராகக் கொடுத்து விருந்தொன்றையும் ஏற்பாடு செய்கிறார். பின்னர் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்றவர்களுடன் அவரை மதீனாவிற்கு அனுப்பி வைக்கிறார். இது ஹிஜ்ரி 7 இல் நிகழ்ந்தது. உம்மு ஹபீபா ரழியல்லாஹுு அன்ஹா அவர்களுக்கு அப்போது வயது 36.

ஹிஜ்ரி 44, உம்மு ஹபீபா ரழியல்லாஹுு அன்ஹா அவர்களுக்கு வயது 72, தனது இரட்சகனாகிய அல்லாஹ்வைச் சந்திக்கப் போகும் தருணம் நெருங்கி விட்டதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். ஆயிஷா ரழியல்லாஹுு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்: உம்மு ஹபீபாவை மரணம் நெருங்கியபோது என்னை அவரிடம் வருமாறு அழைத்தார். நான் சென்றேன். அப்போது என்னிடம் ''ஆயிஷா! ஒரு கணவனின் மனைவியரிடையே வரும் மனஸ்தாபங்கள் எம்மிடமும் இருந்தன. அதற்காக என்னை மன்னிப்பீராக'' என்றார். நான் அவரை மன்னித்தேன். அப்போது அவர் ''நீங்கள் என்னை சந்தோசப்படுத்தினீர்கள். அல்லாஹ் உங்களைச் சந்தோசப்படுத்துவானாக'' என்றார். பின்னர் உம்மு ஸல்மா ரழியல்லாஹுு அன்ஹா அவர்களையும் அழைத்து அவ்வாறே வேண்டிக் கொண்டார். அதன் பின் அவர் அல்லாஹ்விடம் பயணமானார்.

**பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இஸ்லாத்தின் வெற்றிக்கு உம்மஹாத்துல் முஃமினீன்கள் ஆற்றிய நான்கு பங்களிப்புக்களை எழுதுக.
2. உம்மஹாத்துல் முஃமினீன்களில் 'உம்முல் மஸாகீன்' எனப் பெயர் பெற்றவர் யார்?
3. ஸைனப் பின் ஜஹஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் ஸைத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை திருமணம் முடிக்க இணங்கியதற்குக் காரணமாய் இருந்த அல்குர்ஆன் வசனத்தின் பொருளை எழுதுக.
4. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் திருமணம் முடித்த இடத்திலேயே தன்னை அடக்கம் செய்யுமாறு வேண்டிக்கொண்ட அன்னையின் பெயரைக் குறிப்பிடுக.
5. உம்மு ஹபீபா ரழியல்லாஹு அன்ஹா அவர்களது வரலாற்றில் உங்களைக் கவர்ந்த நிகழ்வொன்றைக் கூறுங்கள்.



# 23

# இரு முஸ்லிம் வீரர்கள்

## வெற்றி வீரர் ஸலாஹுத்தீன் அய்யூபி



இஸ்லாமிய வரலாற்றில் புகழ் பெற்ற பல வீரத்தியாகிகளுள் மாவீரர் ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபியும் ஒருவராவார். இஸ்லாமிய சாம்ராஜ்யத்துக்கு எதிராக யுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோது அதனைப் பாதுகாக்க அவர் ஆற்றிய சேவை வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

கிறிஸ்துவுக்குப் பின் 1138க்குச் சமமான ஹிஜ்ரி 532இல் ஈராக்கிலுள்ள திக்ரித் எனும் நகரில் குர்திஷ் இனத்தின் கௌரவமான குடும்பம் ஒன்றில் இவர் பிறந்தார். இவரது தந்தை, மற்றும் சிறிய தந்தை ஆகியோர் அரசியல், நிர்வாகம், மற்றும் இராணுவம் ஆகிய துறைகளில் திறமையும் அனுபவமும் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டமையால் ஸலாஹுத்தீன் அய்யூபி சிறுபராயம் முதலே இத்துறைகைளில் தன்னை வளர்த்துக் கொள்ள உதவியாய் அமைந்தது.

இமாதுத்தீன் ஸன்கீயின் ஆட்சியில் நிர்வாகத் துறையில் பணியாற்றுவதற்காக அவரது தந்தை அழைக்கப்பட்டமையால் குழந்தைப் பருவத்திலேயே தந்தையுடன் சேர்ந்து சிறுவர் ஸலாஹுத்தீனும் திக்ரித் நகரிலிருந்து மவ்ஸில் நகருக்கு இடம்பெயர்ந்து சென்றார். அங்கு குதிரை ஏற்றப் பயிற்சி போன்ற வீரக்கலைகளுடன் நிர்வாகத் துறையிலும் பயிற்சி பெற்றார். மேலும் அல்குர்ஆன், அல்ஹதீஸ் மற்றும் அறபு மொழி போன்றவற்றையும் சிறப்பாகக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பையும் பெற்றுக்கொண்டார்.

ஸலாஹுத்தீன் வாலிபப் பருவத்தை அடையும்போது பல்வேறு தலைமைப் பொறுப்புக்களை அலங்கரிக்கும் அளவுக்கு தகுதி பெற்றார். குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்த பாத்திமிகள் என்ற பிரிவினரை அடக்குவதற்காக சிறந்த ஒழுக்கப் பண்புகளுடனும் பல்துறைத் திறமைகளுடனும் விசேடமாக இராணுவத் துறையில் சிறப்புத் தேர்ச்சியுடன் மிளிர்ந்தார். எகிப்துக்கு அனுப்பப்பட்ட படைக்கு அவரே துணைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அதன் தளபதியாக இருந்தவர் அவரது சிறிய தந்தையான தளபதி அஸதுத்தீன் ஆவார். இந்நிலையில் பாத்திமியரால் தோற்றுவிக்கப்பட்டிருந்த குழப்ப நிலை மற்றும் சிலுவைக்காரர்களின் அச்சுறுத்தல் ஆகியவற்றிலிருந்து எகிப்தை மீட்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த தளபதி நூறுத்தீன் ஸன்கீ அவர்கள், ஸலாஹுத்தீனின் சிறிய தந்தையான தளபதி அஸதுத்தீனின் தலைமையில் படையொன்றினை எகிப்துக்கு அனுப்பினார். அதன்போது, இளம் வீரர் ஸலாஹுத்தீனை துணைத் தளபதியாக அனுப்பி வைத்தார்.

சிறிய தந்தையின் பின் எகிப்தின் நிர்வாகப் பணியைப் ஸலாஹுத்தீன் பொறுப்பேற்றார். ஸலாஹுத்தீன் அவர்கள் அப்போது இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஆட்கொண்டிருந்த அவல நிலையிலிருந்து அதனை மீட்டு மீண்டும் அதன் மாட்சி மையை மேலோங்கச் செய்ய திடசங்கற்பம் பூண்டார். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வேகமாகவும் நேர்த்தியாகவும் மேற்கொண்டார். இவரது ஆளுமைப் பண்புகளை அவதானித்த அன்றைய இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் ஆட்சியாளர்களுள் அதிகமானோர் இவரது தலைமையின் கீழ் ஒன்றிணைய முன்வந்தனர். இதன் பின்னணியிலேயே எகிப்து, சிரியா அவற்றைச் சூழவுள்ள தேசங்களை உள்ளடக்கியதாக அய்யூபிய ஆட்சி நிறுவப்பட்டது. மிகக் குறுகிய காலத்தினுள் பலம்மிக்க ஆட்சியாக இது மாறியபோதிலும் மத்திய அரசான அப்பாஸியர் ஆட்சிக்கு மதிப்பளிக்கும் வகையிலேயே அது செயற்பட்டது.

பலம்மிக்க ஆட்சியாளராக மாறிய ஸுல்தான் ஸலாஹுத்தீன் தனது நீண்டகாலக் கனவாகிய பைத்துல் முகத்தஸை மீட்கும் பணியில் ஈடுபடலானார். இப்பணியில் அதிகம் சன்மார்க்க அறிஞர்களை ஈடுபடுத்தினார். அத்துடன் இராணுவத்தையும் பலப்படுத்தினார். இவ்வாறான அயராத முயற்சிகள் மூலம் வலுவான ஓர் இராணுவத்தைக் கட்டியெழுப்பினார். பல வருடகாலம் பொறுமையுடனும் திட சங்கற்பத்துடனும் தயார் செய்யப்பட்ட இராணுவம் தனது முக்கிய இலக்காகிய பைத்துல் முகத்தஸை மீட்கும் பணிக்குப் புறப்பட்டது. கி.பி. 1187 ஹிஜ்ரி 583இல் சிலுவைப் படையினை எதிர்த்து ஸுல்தான் ஸலாஹுத்தீன் தலைமையிலான இராணுவம் ஹித்தீன் போர்க்களத்தில் கடும் சண்டையில் ஈடுபட்டது. இறுதியில் ஸுல்தானின் படை அல்லாஹ்வின் உதவியால் பெரும் வெற்றியினை ஈட்டியது.

இவ்வெற்றியின் மூலம் பைத்துல் முகத்தஸ் மீண்டும் முஸ்லிம்களின் கைகளை வந்தடைவதற்கான வாயில் திறக்கப்பட்டது. ஹித்தீனில் முஸ்லிம் படை வெற்றியீட்டி ஓரிரு மாதங்களுக்குள் பைத்துல் முகத்தஸ் முஸ்லிம்கள் வசமானது. இச்செய்தி முழு முஸ்லிகளையும் பூரிப்படையச் செய்ததோடு ஸுல்தானின் கௌரவமும் மரியாதையும் மேலோங்கவும் காரணமாயின. முஸ்லிம்கள் ஸுல்தானின் தலைமைத்துவத்திற்கு மதிப்பளித்தனர்.

பலஸ்தீனைக் கைப்பற்றிய முஸ்லிம்கள், சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக் கெதிராக மேற்கொண்ட அட்டூழியங்கள், மனிதப் பேரவலங்களுக்குப் பழி தீர்க்கும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. மாற்றமாக தோல்வியடைந்த அவர்கள் ஸுல்தானின் கட்டளைக்கேற்ப கௌரவமாகவே நடாத்தப்பட்டனர். அங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. அது மட்டுமல்லாது தேவையானோருக்கு வாகன வசதியும் செய்துக்கொடுத்தார். ஆயினும், நன்றி உணர்வற்ற தோல்வியைத் தாங்க முடியாத ஐரோப்பியர் மீண்டும் படை திரட்டி மற்றுமொரு யுத்தத்தினைத் தொடங்கினர். வரும் வழியில் பல்லாயிரம் முஸ்லிம்களைக் கொன்று குவித்தனர். மீண்டும் இரு தரப்பினரும் போரில் ஈடுபட்டு இறுதியில் ரிச்சர்டின் சிலுவைப்படை தோல்வியடைந்து பின்வாங்கியது. ஜெருசலமும் அதை சுற்றியுள்ள பகுதிகள் முழுவதும் முஸ்லிம்கள் வசமாயின.

ஸுல்தானின் மனித நேயப் பண்புகள் இன்றும் ஐரோப்பியர்களால் பாராட்டப் படுகின்றன. எதிரிப்படைத் தளபதி நோய்வாய்ப்பட்ட போது தனது வைத்தியரை அனுப்பி சிகிச்சை அளித்தது மட்டுமல்லாது அவருடைய குதிரை இறந்த போது உயர்தரமான குதிரையையும் அன்பளிப்புச் செய்தார். வரலாற்றில் ஸுல்தான் ஸலாஹுத்தீன் போன்ற ஓர் ஆட்சியாளரைக் காண முடியாது எனுமளவுக்கு முன்மாதிரி மிக்க ஆட்சியாளராக வலம் வந்தார். அல்லாஹ்வின் தீனைக் கடைப்பிடிப்பதில் உதாரணப் புருஷராக இருந்தார்.

இவ்வாறான உயர்ந்த நற்செயல்களே இவரை மாவீரர் ஸலாஹுத்தீன் அய்யூபி என வரலாற்றில் தடம் பதிக்கச் செய்துள்ளன. இவரைப் போன்றவர்களின் வெற்றிடங்கள் இன்றைய முஸ்லிம் சமூகத்தில் இன்னும் நிரப்பப்படாமலேயே உள்ளன. ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கி.பி. 1193 ஹிஜ்ரி 589 ஸபர் மாதம் தனது 55 ஆம் வயதில் வபாத்தானார்.

# ஸுல்தான் முஹம்மத் அல் பாதிஹ்



ஸுல்தான் முஹம்மத் 1432 மார்ச் மாதம் 30 ஆம் திகதி ஸுல்தான் இரண்டாம் முராத்திற்கு மகனாகப் பிறந்தார். வரலாற்றில் இவர் **வெற்றியாளர்** எனப் பொருள்படும் **அல் பாதிஹ்** என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார். ஆதலால் இவரது பெயர் முஹம்மத் அல் பாதிஹ் என்றே அழைக்கப்படலாயிற்று.

உஸ்மானிய சாம்ராஜ்யத்தில் இளவரசர்களை உடல், அறிவு, ஆன்மீக ரீதியாக சிறந்த முறையில் பயிற்றுவிப்பது அரச குடும்பத்தின் வழக்கமாகக் காணப்பட்டது. எனவே ஸுல்தான் முஹம்மத் அல் பாதிஹ் அவர்களும் சிறுபராயத்திலலேயே அழகான முறையில் வழிநடாத்தப்பட்டார்கள். சிறுவயதிலேயே அல்குர்ஆன், ஹதீஸ், பிக்ஹ் ஆகிய இஸ்லாமியக் கலைகள் கற்பிக்கப்பட்டன. அத்தோடு, கணிதம், விஞ்ஞானம், வானியல், இராணுவக் கலைகள் என்பனவும் கற்பிக்கப்பட்டன. முஹம்மத் அல் பாதிஹ் இத்துறைகள் அனைத்திலும் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார். அரபு, பாரசீகம், துருக்கி, இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார்.

தவிரவும் சிறுவயதிலேயே அரசியல் அதிகார அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரச குடும்பத்தில் உள்ளவர்களுக்கு சிறிய பிரதேசங்களின் ஆட்சிப் பொறுப்பைக் (அதிகாரத்தினை) கையளிப்பது உஸ்மானியர்களின் வழக்கமாக இருந்தது. அந்த வகையில்தான் முஹம்மத் அல் பாதிஹ் மக்னீதியா என்ற பகுதிக்கு ஆளுநராக 12ஆவது வயதிலேயே நியமிக்கப்பட்டார். இவரைக் கண்காணித்து அனைத்துத் துறையிலும் பயிற்றுவிப்பதற்காகப் பிரசித்தி பெற்ற அறிஞர்களான ஷெய்க் ஆக் சம்சுதீன், முல்லா கவ்பானி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இந்த வகையில் முஹம்மத் அல் பாதிஹின் ஆளுமை உருவாக்கத்தில் மேற்படி இரண்டு ஆசிரியர்களினதும் பணி மிகவும் முக்கியமானதாகக் காணப்பட்டது.

இவர் 19 ஆவது வயதில் உஸ்மானிய சாம்ராஜ்யத்தைப் பொறுப்பேற்ற உடனேயே தமது வெற்றிப் பயணத்தை ஆரம்பித்து வைத்தார். கமரான் பிரதேச மன்னன் அப்போதைய உஸ்மானிய சாம்ராஜ்யத்திற்கு எதிராகப் போர் நடாத்தி வந்தபோது அதனை இலகுவில் வெற்றி கொண்டார். இதனையே இரண்டாம் ஸுல்தான் முஹம்மதின் முதல் யுத்தமும் முதல் வெற்றியுமாக வரலாறு பதிந்திருக்கிறது.

முஹம்மதின் ஆசிரியரான ஆக் சம்சுதீன், ''கொன்ஸ்தாந்து நோபிள் ஒரு வீரனால் வெற்றிகொள்ளப்படும். அந்தத் தளபதிதான் சிறந்த தளபதி.

அந்த சேனைதான் சிறந்த சேனை'' என்ற ஹதீஸினைத் தனது மாணவருக்கு அடிக்கடி நினைவுபடுத்துவதுடன் அதனை நோக்கி நெறிப்படுத்துபராகவும் இருந்தார். இத்தூண்டல்களின் காரணமாக முஹம்மத் கொன்ஸ்த்தான்துநோபிளை வெற்றிகொள்வதற்காக இஸ்லாமிய வரலாற்று நெடுகிலும் நடந்த யுத்தங்களையும் உஸ்மானிய மன்னர்கள் மேற்கொண்ட யுத்த நகர்வுகளையும் பற்றி நன்கறிந்து வைத்திருந்தார். அதைவிடவும் இவ்வெற்றி குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய நபிமொழி அவரது உள்ளத்திலே ஆழமாகப் பதிந்து வேர்விட்டிருந்தது.

கி.பி.1453ல் முஹம்மத் அல்பாதிஹின் தலைமையில் சுமார் 50200 பேரைக் கொண்ட முஸ்லிம் சேனை பைஸாந்தியப் பேரரசின் கோட்டை கொன்ஸ்தான்துநோபிளை நோக்கிப் புறப்பட்டது. கோட்டையை அண்மித்ததும் பாதிஹ் தன் படையை வெவ்வேறாகப் பிரித்து பல திக்குகளில் அதனை முற்றுகைக்காக நிறுத்தினார். அவரது கடற்படைப் படகுகளும் கடல் வழியாக வந்து சேர்ந்தன. பாதிஹ் தன் படைகள் மத்தியில் முன்னால் நின்று உபதேசங்களை நிகழ்த்தினார்.

முஸ்லிம்களின் படையெடுப்பை அறிந்த கொன்ஸ்தான்துநோபிள் மன்னன் ஐரோப்பாவிடம் உதவிப் படையனுப்புமாறு வேண்டியிருந்தான். அதற்கமைய அடுத்தநாள் ஐரோப்பிய உதவிப்படை பெரும் கப்பலொன்றிலும் இன்னும் சில படகுகளிலும் வந்து சேர்ந்தது. அது பைசாந்தியருக்கு உளரீதியாகப் புத்துணர்வை அளித்தது. இந்நிலையில் முஹம்மத் அல்பாதிஹ் கோட்டை மன்னனுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் ''உங்களது கொன்ஸ்தான்து நோபிள் நகரை எம்மிடம் ஒப்படைத்து நல்லாட்சி புரிய ஒத்துழையுங்கள். அல்லது ஒவ்வொருவருக்கும் ஆள்வரி செலுத்தி இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் கீழ் நல்லாட்சி புரியுங்கள். நிச்சயமாக எனது படை சொத்து பற்றியோ, செல்வங்கள் பற்றியோ அக்கறை கொள்ள மாட்டாது'' என வரைந்திருந்தார். அது கண்ட மன்னன் வெகுண்டெழுந்தான். போர் செய்வதென உறுதிபூண்டு பறையறிவித்தான். கோட்டை வீரர்கள் யுத்தத்துக்குத் தயாராயினர்.

முஸ்லிம் சேனை தம்வசமிருந்த பிரமாண்டமான பீரங்கிகளைப் பயன்படுத்தி கோட்டை அரண்களைத் தாக்கத் துவங்கியது. முஹம்மத் அல்பாதிஹ் ஒரு நாள் அற்புதமான, யாராலும் நினைத்தும் பார்க்கமுடியாத சிரமசாத்தியமானதொரு திட்டத்தைத் தீட்டினார். அதனைத் தன் தளபதிகளுடனும் பகிர்ந்துகொண்டார். இத்திட்டம் பற்றிப் படையினர் அறிந்தபோது ஆச்சரியப்பட்டனர். சிலர் இது சாத்தியப்படுமா என்று சந்தேகிக்கவும் செய்தனர். எனினும் அத்திட்டத்தை முஹம்மதே தலைமையேற்று முன்னின்று தன் சேனையின் உதவியோடு கச்சிதமாகச் செய்து முடித்ததும்தான் அது எவ்வளவு பெரிய செயல், எவ்வளவு அருமையான திட்டம் எனத் தெரியவந்தது.

ஆம்! கோட்டைக்குப் பின்புறத்தால் பெரியதொரு நீர்ப்பரப்பு காணப்பட்டது. அதற்குக் ''அல்கர்னுஸ் ஸ(z)ஹபி'' என்று பெயர். அதனைத் தொடர்ந்து வந்தது ஒரு மலைத்தொடர். அந்த நீர்ப்பரப்பில் கப்பல்களைக்கொண்டு சென்றால் சுலபமாகக் கோட்டையைக் கைப்பற்றலாம். இரவோடு இரவாக பாதிஹ் தன் படையின் மூலம் மலைக்காட்டின் நடுப்பகுதியால் கர்னுஸ் ஸஹபி வரை மரங்களை வெட்டி சுமார் மூன்று மைல் தூரத்துக்குப் பெரும் தண்டவாளங்களை அமைத்தார். பின்பு அதன் வழியாக ஒரே இரவில் தனது 70 கப்பல்களையும் இழுத்துச் சென்று கர்னுஸ்ஸஹபியில் இறக்கினார்.

மறுநாள் காலை முஹம்மத் பல புதிய திட்டங்களுடன் அணிவகுத்து நிற்கும் படைக்கு முன்னால் வந்து உரையாற்றினார். வீரர்களை உற்சாகப்படுத்தினார். ''வெற்றி அல்லது வீர மரணம்'' என்ற மந்திரத்தை மீண்டும் மீண்டும் கூறி ஆர்வமூட்டினார். மேலும் யுத்தத்தில் பொதுமக்களை அநியாயமாகக் கொலை செய்ய வேண்டாமென்றும் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் மீது அன்பு செலுத்துமாறும் பிற வணக்கஸ்தலங்களையும் மதகுருக்களையும் மதித்து நடக்குமாறும் யுத்த தர்மங்ளைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறும் வலியுறுத்திக் கூறினார். வழமைபோன்று யுத்தம் ஆரம்பமாகியது. முன்தினம் பீரங்கிகள் பதம்பார்த்த அதே இடங்களைக் குறிவைத்துத் தாக்கியது பீரங்கிப்படை. இம்முறை அரண்களால் நின்று பிடிக்க முடியவில்லை. ஒருபகுதி ஆட்டங்காண ஆரம்பித்து பெரும் துளையை ஏற்படுத்தியது. கர்னுஸ் ஸஹபியில் இறங்கிய கப்பல்களும் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருந்தன.

பல ஆண்டுகளாகக் கொன்ஸ்தாந்துநோபிளைக் கைப்பற்ற பல்வேறு படையெடுப்புகள் நடந்தும் யாராலும் அதனைச் செய்யமுடியவில்லை. இனியும் யாராலும் அக்காரியத்தைச் செய்யமுடியாது என்றே அம்மக்கள் நினைத்திருந்தனர். ஆனால் அதனை இளவேங்கை அற்புத வீரன் முஹம்மத் அல்பாதிஹ் நிறை வேற்றிவிட்டார். ஒருவாறாக யுத்தம் முடிவுக்குவந்தது. கொன்ஸ்தாந்துநோபிள் கோட்டை முழுதும் முஸ்லிம்கள் வசமாகியது. பின்னர் கொன்ஸ்தான்துநோபில் இஸ்தான்பூல் எனப் பெயர்மாற்றம் பெற்றது.

இவ்வெற்றியின் பின்னர் மக்களை நோக்கி கீழ்வருமாறு உரையாற்றினார்:

> ''என்னருமைச் சகோதரர்களே நீங்கள் குஸ்தந்தினீயாவை (கொன்ஸ்தாந்து நோபிளை) வெற்றி கொண்ட வீர வேங்கைகளாக ஆகிவிட்டீர்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழியை நிதர்சனப் படுத்தியுள்ளீர்கள். அன்னாரது சுபசோபனத்தைப் பெற்றுவிட்டீர்கள். மூத்த ஸஹாபாக்களதும் எம் முன்னோர்களதும் கனவை நனவாக்கிவிட்டீர்கள். அல்லாஹ் எம்மனைவருக்கும் நல்லருள் புரியட்டும். எனதருமை வீரர்களே இம்மக்களுக்கு நல்லன செய்யுங்கள். அவர்களோடு அன்பு பாராட்டுங்கள். யாருக்கும் எக்காரணம் கொண்டும் அநீதியிழைத்துவிட வேண்டாம். வணக்கஸ் தலங்களையும் மதகுருக்களையும் கண்ணியத்துடன் நடாத்துங்கள். இதுவே இஸ்லாம் கூறும் உயர்ந்த பண்பாடு.''

இவ்வாறு ஒரு சிறு உரையை நிகழ்த்தி முடிந்ததும் தக்பீர் கோஷம் ஓங்கி ஒலித்தது. முஹம்மத் தன் குதிரையிலிருந்து கீழே குதித்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும்பொருட்டு இரண்டு ரக்அத்துக்கள் தொழுதார். முஸ்லிம் படையின் வெற்றி குறித்து செய்தியறிந்த மக்கள் அச்சத்தினாலும் பீதியினாலும் கிறிஸ்தவ ஆலயங்களில் தஞ்சம் புகுந்தனர். முஹம்மத், அவர்கள் முன்சென்று, தாம் அவர்களை எதுவும் செய்யப்போவதில்லை என்று எடுத்துக்கூறி முன்னர் எப்படி வாழ்ந்தார்களோ அதேபோன்று தம் வீடுகளுக்குச் சென்று சந்தோசமாக வாழுமாறு கூறினார். தம்மைத் துவம்சம் செய்ய வந்தவர்கள் என எண்ணியிருந்த இவர்களா இப்படிக் கூறுகிறார்களென வியப்பிலாழ்ந்தனர் அம்மக்கள். தம்முயிர்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித சேதமும் நேர்ந்திராததைக் கண்டு அம்மக்கள் பூரிப்படைந்தனர். முஹம்மத் அல் பாதிஹ் 1481ஆம் ஆண்டு (ஹிஜ்ரி - 886இல்) தனது 49 ஆம் வயதில் வபாத்தானார்.

**பயிற்சி**

1. ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி என்ற தலைப்பில் பின்வரும் தகவல்களை வைத்து சிறு கட்டுரை எழுதுங்கள்.

- ★ பிறந்த ஆண்டு
- ★ பிறந்த இடம்
- ★ இனம்
- ★ பயிற்சி பெற்ற இடம்
- ★ தந்தையின் தொழில்
- ★ விசேட திறமைகள்
- ★ மனிதநேயப் பண்புகள்
- ★ சாதனைகள்
- ★ மரணித்த ஆண்டும் மாதமும்

2. ஹித்தீன் யுத்தம் பற்றி சுருக்கமான குறிப்பொன்றை எழுதுக.
3. கொன்ஸ்தான்துநோபிளை வெற்றி கொள்ள வேண்டும் என்ற உணர்வு அல்பாதிஹ் அவர்களிடம் தோன்றக் காரணம் என்ன?
4. கொன்ஸ்தான்துநோபிளை வெற்றி கொள்ள அல் பாதிஹ் வரைந்த அற்புதமான திட்டம் என்ன என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
5. உலக வரைபடம் ஒன்றில் கொன்ஸ்தான்துநோபிள் அமைந்துள்ள இடத்தை அடையாளப்படுத்துக.



# 24

# சிக்கனமும் சேமிப்பும்

(எட்டாம் பாடவேளைக்கான மணி ஒலிக்கிறது. இஸ்லாம் பாட ஆசிரியர் வகுப்பறைக்குள் ஸலாம் கூறியவாறு நுழைகிறார். மாணவர்கள் பதில் ஸலாத்துடன் ஆசிரியரை வரவேற்கின்றனர். ஆசிரியரின் வருகையுடனேயே வகுப்புத் தலைவர் ஸலீம் கைநிறைய வெண்கட்டிகளுடன் வகுப்பறைக்குள் நுழைகிறார். ஆசிரியரின் மேசை மீது வெண்கட்டிகளை வைக்கும்போது அதில் சில வெண்கட்டிகள் கீழே விழுந்து உடைந்து விடுகின்றன. அப்போது ஆசிரியர் ஸலீமைப் பார்த்து ''தேவைக்கு அதிகமான வெண்கட்டிகளை கைநிறைய ஏன் எடுத்து வந்தீர்கள்?'' என வினவுகிறார். ஸலீம் மௌனமாக இருக்கவே, தேவைக்கு அதிகமான வெண்கட்டிகளைக் கொண்டு வருவது வீண்விரயம் என்றும் எந்தவொரு பொருளையும் தேவைக்கு ஏற்றவாறு சிக்கனமாக பாவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். பின்னர் அன்றைய நாளில் கற்க வேண்டிய ''சிக்கனமும் சேமிப்பும்'' என்ற பாடத்தைக் கற்பிக்க ஆரம்பித்தார்.

ஆசிரியர் : இஸ்லாம் இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டும் மார்க்கம். அதன் போதனைகள் மனதுக்கு இதமானவை. அதனை நடைமுறைப்படுத்துவது இலகுவானது. அத்தோடு இஸ்லாம் நற்பண்புகள் நிறைந்த மார்க்கமுமாகும். அது எம்மில் தோற்றுவிக்க விரும்பும் நற்பண்புகளில் சிக்கனமும் சேமிப்பும் முக்கியமானவை.

நவீத் : சிக்கனமாக வாழ்தல் என்றால் என்ன ஸேர்?

ஆசிரியர் : சிக்கனமான வாழ்க்கை என்றால் உள்ளதைக் கொண்டு தேவையை கச்சிதமாக நிவர்த்தி செய்து கொள்வதாகும். அதாவது, உலோபித்தனத்துக்கும் வீண்விரயத்துக்கும் இடைப்பட்ட நிலையே சிக்கனம் என்பதாகும். அளவுக்கு அதிகமாக செலவு செய்வதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். நடுநிலையாக செலவு செய்வதை நல்லடியார்களின் பண்புகளுள் ஒன்றாக அல்குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது.



**''மேலும் அவர்கள் செலவு செய்யும்போது வீண்விரயமும் கஞ்சத்தன மும் செய்வதில்லை. மாறாக, அவர்களுடைய செலவுகள் இந்த மித மிஞ்சிய இரு நிலைகளுக்கிடையில் மிதமானதாக இருக்கும்.'' (25: 67)**

அயாத் : அளவுக்கு அதிகமாக செலவு செய்தல் என்றால் என்ன ஸேர்?

ஆசிரியர் : இதனை இன்று வகுப்பில் இடம்பெற்ற நிகழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஒரு வெண்கட்டி போதுமானதாக இருந்தால் அத்துடன் சுருக்கிக்கொள்வது சிக்கனமாகும். ஒன்றுக்கு மேல் பல வெண் கட்டிகளைப் பயன்படுத்துவது வீண்விரயமாகும்.

ஆகிப் : வீண்விரயம் செய்யாமல் சிக்கனமாக பயன்படுத்திய பின் மீதமான வற்றைப் பாதுகாப்பதைத் தானே சேமிப்பு என்கிறார்கள் ஸேர்?

ஆசிரியர் : ஆம். அதைத்தான் சேமிப்பு என்கிறோம். இவ்வாறு சேமிப்பதனூடாக இக்கட்டான சந்தர்ப்பங்களில் அவை நமக்கு உதவியாக இருக்கும். இது ஒரு சிறந்த பண்பு. இதனை அல்லாஹ் மனிதர்களில் மட்டுமன்றி சில படைப்பினங்களிலும் ஏற்படுத்தியுள்ளான். உதாரணமாக எறும்புகள் தமக்குத் தேவையான உணவை மாத்திரம் சாப்பிட்டுவிட்டு மீதி உணவைப் பத்திரமாகக் களஞ்சியப்படுத்துகின்றன. இதன் மூலம் மழை காலத்தில் உணவுத் தேவையை நிறைவு செய்துகொள்கின்றன. தேனீக்கள் தேனைச் சேமிக்கின்றன. இவை தேனீக்களுக்கு மட்டுமன்றி மனிதர்களுக்கும் பயன்படுகின்றன.

றயான் : ஸேர் அவ்வாறாயின், எமது தேவைகளைச் சிக்கனமாக நிறைவேற்றிய பின் சேமிப்பதன் மூலம் எதிர்கால சந்ததியினரும் பயன்பெறுவார்கள் அல்லவா?

ஆசிரியர் : மாஷா அல்லாஹ் நல்லதொரு கருத்து. சேமிப்பின் நோக்கங்களுள் இதுவும் ஒன்று. இவ்வாறான முன்மாதிரியான பண்புகளை நாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வாழ்விலும் கண்டுகொள்ள முடியும். அவர்கள் எப்போதும் சிக்கனத்தையும் எளிமையையும் விரும்பியுள்ளார்கள். அவர்களின் வாழ்வின் பல்வேறு நிகழ்வுகளில் இதனைக் காணலாம். அவர்கள் ஈச்சோலைப் பாயிலேயே உறங்கினார்கள். இதனால் அவர்களது விலாப்புறங்களில் அதன் அடையாளம் பதிந்திருந்தது. இதனைக் கண்ணுற்ற தோழர்கள் ''உங்களுக்கு பஞ்சனை மெத்தை ஒன்றைத் தயார் செய்து தரட்டுமா?'' என்று வினவினார்கள். அதனை ஏற்க மறுத்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''பிரயாணி ஒருவன் மரநிழலில் தங்கி விட்டுச் செல்வது போன்றே நானும் இவ்வுலகை விட்டும் பிரிந்துசெல்ல விரும்புகிறேன்'' என்று கூறினார்கள். (முஸ்லிம்)

இவ்வாறு எளிமையாகவும் சிக்கனமாகவும் வாழ்ந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சேமிப்பதற்கும் அனுமதியளித்துள்ளார்கள். அவரின் மனைவியரில் சிலர் ஒரு வருடத்திற்குத் தேவையானவற்றை சேமித்து வைத்திருந்தனர். (இப்னு அஸாகீர்)

ஸலாஹ் : ஸேர், நீங்கள் அன்று யூஸுப் நபியுடைய வரலாற்றில் நிகழ்ந்த சேமிப்பிற்கான ஒரு பாரிய திட்டம் பற்றிக் கூறினீர்கள்தானே?

ஆசிரியர் : ஆம் ஸலாஹ், நீங்கள் நினைவுபடுத்திய விடயம் சேமிப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். எகிப்து நாட்டில் மிகப் பெரும் வரட்சி ஒன்று ஏற்படப்போகின்றது என்பதனை அல்லாஹ்வின் உதவியினால் அறிந்து கொண்ட நபி யூஸுப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களில் ஒரு பகுதியைத் தொடராக ஏழு வருடம் சேமித்தார். இவ்வாறு திட்டமிட்டு சேமித்த தானியங்களை வரட்சிக் காலத்தில் மக்களுக்கு விநியோகித்து உதவினார்கள். இதனால் அக்காலத்தில் நாட்டில் ஏற்பட இருந்த வறுமை, பஞ்சம் என்பன இல்லாமற் போயின. இது சிக்கனத்துக்கும் சேமிப்பிற்குமான அழகிய முன்மாதிரியும் வெற்றிகரமான திட்டமும் ஆகும்.

றாஇத் : ஸேர், எமது அன்றாட வாழ்வில் வீண்விரயமும் ஆடம்பரமும் தானே அதிகம். இதனால்தான் சிக்கனமும் சேமிப்பும் குறைவடைந்து செல்கின்றன?

ஆசிரியர் : நிச்சயமாக, றாஇதின் கருத்துடன் நானும் உடன்படுகிறேன். எமது வாழ்வில் பெரும் பாக்கியங்களாக கிடைக்கப்பெற்றுள்ள நேரம், பணம், நீர், மின்சாரம், பொதுச் சொத்துக்கள் என பலவும் வீண் விரயத்திற்கு உட்படுவதைக் காண்கிறோம். வீண்விரயம் செய்வது ஷைத்தானின் குணமும் பாரதூரமான பாவமுமாகும். இது தொடர்பாக நாம் மறுமையில் விசாரிக்கப்படுவோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வுழு செய்யும் போது கூட நீரை வீண்விரயம் செய்வதைத் தடுத்துள்ளார்கள்.

ஸஃத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வுழு செய்து கொண்டிருந்தபோது அவரைக் கடந்து சென்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஃதைப் பார்த்து, ''ஏன் இவ்வாறு வீண்விரயம் செய்கிறீர்?'' எனக் கேட்டார்கள். ''வுழுவிலும் வீண்விரயம் இருக்கிறதா நபியவர்களே?'' என்று கேட்க, ''ஆம்'' என்று கூறிவிட்டு ''ஓடும் நதியில் நீர் வுழு செய்தாலும் வீண்விரயம் செய்யக்கூடாது'' என்றார்கள். (அஹ்மத், இப்னு மாஜா)

இந்தச் சம்பவம் ஒரு துளி நீர் கூட விரயமாகக்கூடாது என்பதை வலியுறுத்துகிறது. எனவே எமது வீடுகள், பாடசாலைகள், மஸ்ஜிதுகள் முதலான இடங்களில் நீர், மின்சாரம், உணவு போன்ற விடயங்களில் எவ்வாறு விரயத்தைத் தவிர்க்கலாம் என்பதற்கான உதாரணங்கள் சிலவற்றைக் கூறுங்கள் பார்க்கலாம்?

ஆகிப் : மேலதிகமாக ஒளிரும் மின்விளக்கு, மின்விசிறிகளை அணைத்தல், நீர் ஒழுகிக் கொண்டிருக்கும் நீர்க் குழாய்களை இறுக்கமாக மூடிவிடுதல், நீரைப் பாத்திரத்தில் எடுத்துக் குடித்தல், தேவையானளவு உணவை மாத்திரம் பாத்திரத்தில் இடல் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.





ஆசிரியர் : மாஷா அல்லாஹ் ஆகிப். நீங்கள் பொருத்தமான உதாரணங்களைக் குறிப்பிட்டீர்கள். ஜஸாகல்லாஹ் ஹைர். அதேபோல வீணாகவும் கேளிக்கைகளிலும் நேரத்தைக் கழித்தல், பொருத்தமற்ற

வழிமுறைகளில் பணத்தைச் செலவழித்தல், அளவுக்கதிகம் சாப்பிடல், தேவைக்கதிமாக ஆடை அணிகலன்களை கொள்வனவு செய்தல் முதலானவற்றையும் வீண்விரயத்துக்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

ஸைய்யாப் : ஸேர் வீண்விரயமான, ஆடம்பரமான வாழ்வைத் தவிர்த்து சிக்கனத்தையும் சேமிப்பையும் கடைப்பிடிப்பதால் நன்மைகள் கிடைக்குமல்லவா?

ஆசிரியர் : ஆம். நிச்சயமாக இந்தப் பண்புகளை நாம் வளர்ப்பதினூடாக இம்மை யிலும் மறுமையிலும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வோம். சிக்கனம், சேமிப்பு ஆகிய பண்புகள் எமது வாழ்க்கையில் சரியான முறையில் கடைப்பிடிக்கப்படும்போது கடன் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள், மற்றவர்களிடம் தங்கியிருத்தல் போன்ற நிலைமைகள் ஏற்படாமல் எம்மைப் பாதுகாக்க முடியும். அது மன நிறைவான வாழ்விற்கும் வழிவகுக்கும்.

**பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. வீண் விரயம் பாவமாகும் என்பதற்கான ஆதாரம் ஒன்றைத் தருக.
2. சிக்கனம், சேமிப்பின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் இஸ்லாமிய வரலாற்றுச் சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுக.
3. யூஸுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களது காலத்தில் ஏற்பட்ட உணவுப் பிரச்சினைக்கு அவர், எவ்வாறு தீர்வு கண்டார்?
4. நீர் வளம் விரயமாவதைத் தடுக்கும் வழிமுறைகள் இரண்டு தருக.
5. சிக்கனம், சேமிப்பு மூலம் கிடைக்கும் நன்மைகள் நான்கைப் பட்டியல்படுத்துக.

# 25 ஹலால் – ஹராம் பேணல்

அல்லாஹ் அனுமதித்தவற்றை ஏற்று நடப்பதும் தடுத்தவற்றைத் தவிர்ந்து கொள்வதுமே ஹலால், ஹராம் பேணல் என்று அழைக்கப்படுகிறது. இது இஸ்லாத்தின் அடிப்படையான ஓர் அம்சமாகும்.

மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட விடயங்கள் **ஹலால்** என்றும் தடுக்கப்பட்ட விடயங்கள் **ஹராம்** என்றும் அழைக்கப்படுகின்றன. ஹராமானவற்றைச் செய்வது குற்றமும் பாவமுமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சி அவனது சட்டத்துக்கு மதிப்பளித்து ஹலாலான எல்லைக்குள் வாழ்வதன் மூலம் மட்டுமே இம்மை, மறுமை நற்பயன்களை அடைய முடியும்.

**''ஹலால் எது, ஹராம் எது என்பதைத் தீர்மானிக்கின்ற அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே இருக்கிறது. அல்லாஹ்வுக்குரிய அவ்வதிகாரத்தில் மனிதர்கள் தலையிடுவது பெரும் குற்றமாகும்.''** (16: 116-117)

அல்லாஹ் மனிதனைப் படைக்கு முன்பே உலகில் உள்ள அனைத்தையும் அவனுக்காகப் படைத்தான். பின்னர் மனிதர்களைச் சோதிப்பதற்காக அவற்றுள் சிலதை ஹராமாக்கினான். மனிதனது பகிரங்க விரோதியாகிய ஷைத்தான் அவனை ஹராத்தின் பக்கமே தூண்டிக் கொண்டிருப்பான். அவனது நோக்கம் மனிதனை பாவம் செய்ய வைத்து அவனை நரகிற்கு இழுத்துச் செல்வதாகும்.

உண்மையில் ஹலாலாக்கப்பட்ட விடயங்களிலேயே அதிகளவு நன்மைகள் அமையப்பெற்றுள்ளன. ஹராமாக்கப்பட்டவற்றில் தீமைகளே அதிகம். அல்லாஹுத் தஆலா மனித நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தே ஹலால், ஹராத்தை ஏற்பாடு செய்துள்ளான்.

**அல்லாஹ் ஹராமாக்கியவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.**

### 1. உணவுடன் சம்பந்தப்பட்டவை

★ பன்றியிறைச்சி

★ இறந்தவை

★ இரத்தம்

★ உடலுக்கும் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடியவை

★ போதை ஏற்படுத்தக்கூடியவை

★ தங்கம் வெள்ளிப் பாத்திரங்களில் உண்ணலும் பருகலும்

**2. உடையுடன் தொடர்பானவை**

- ★ ஆண்களுக்குப் பட்டாடை, தங்க ஆபரணங்கள்
- ★ ஆண்கள் பெண் வேடத்திலும் பெண்கள் ஆண் வேடத்திலும் உடையணிதல்
- ★ இஸ்லாமிய வரையறைகள் பேணப்படாத ஆடைகள்
  (உதாரணம்: உடலுறுப்புக்களை வெளிக்காட்டும் ஆடைகள்)

**3. உழைப்புடன் தொடர்பானவை**

- ★ வட்டியும் அதனுடன் தொடர்பானவை
- ★ இதர தடுக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள்

**4. ஆண் பெண் தொடர்பானவை**

- ★ அஜ்னபி, மஹ்ரமி வரையறை பேணாமை

**5. பாலியல் தொடர்பானவை**

- ★ ஸினா (விபச்சாரம்)
- ★ லிவாத் (ஓரினச் சேர்க்கை)

**6. பிற மனிதர்களின் உரிமைகளுடன் தொடர்பானவை**

- ★ திருட்டு
- ★ அபாண்டம் சுமத்துதல்
- ★ மானத்தைப் போக்குதல்
- ★ உயிரைப் பறித்தல்
- ★ சொத்துக்களைச் சேதப்படுத்தல்

### 7. நடத்தைகளுடன் தொடர்பானவை

- ★ பொய் பேசுதல்
- ★ ஏமாற்றுதல்
- ★ பொறாமை
- ★ தீய வார்த்தைகள் பேசுதல்
- ★ பொய்ச் சாட்சி கூறுதல்
- ★ ஆபாசமான செயற்பாடுகள்
- ★ அல்லாஹ் தடுத்தவற்றைப் பார்த்தல், கேட்டல்

மேற்கூறப்பட்ட விதமாக அல்லாஹ் ஹராமாக்கியவற்றைப் பட்டியற்படுத்தலாம். இவற்றைச் செய்வது அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறுசெய்வதாகும். மேற்சொன்ன விடயங்களை முற்றாகத் தவிர்ந்துகொள்ள வேண்டும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

''ஹலால் தெளிவானது. ஹராமும் தெளிவானது. அவை இரண்டுக்கும் இடையில் மயக்கமானவைகள் உள்ளன. அவற்றை அதிகமானோர் அறியமாட்டார்கள். யார் மயக்கமானவற்றைத் தவிர்ந்து கொள்கிறாரோ அவர் தனது மார்க்கத்தையும் மானத்தையும் பாதுகாத்துக் கொண்டவராவார். யார் மயக்கமானவற்றைச் செய்கிறாரோ அவர் ஹராத்தைச் செய்தவராவார். இவர் காவலிடப்பட்ட நிலத்தின் எல்லையில் மந்தை மேய்ப்பவனைப் போலாவார். அவனது மந்தைகள் அந்நிலத்தினுள்ளும் மேயலாம் அல்லவா? அறிந்து கொள்ளுங்கள் ஒவ்வொரு அரசனுக்கும் பாதுகாக்கப்பட்ட பிரதேசமுண்டு. அல்லாஹ்வின் பாதுகாக்கப்பட்ட பிரதேசம் அவன் ஹராமாக்கியவையாகும். அறிந்து கொள்ளுங்கள் நிச்சயமாக மனித உடலில் ஒரு தசைத் துண்டு உண்டு. அது சீர்பட்டால் உடல் முழுதும் சீர்படும். அது சீர்கெட்டால் உடல் முழுதும் சீர்கெடும். அறிந்து கொள்ளுங்கள் அதுதான் உள்ளமாகும்.'' (புஹாரி, முஸ்லிம்)

ஹராமான விடயங்களிலிருந்து தவிர்ந்துகொள்ள வேண்டியவற்றை அல்குர்ஆன், ஸுன்னா இரண்டும் பல்வேறு சொற்பிரயோகங்களில் சுட்டிக்காட்டியுள்ளன. ஹராமானவற்றை நெருங்க வேண்டாம், அதில் ஈடுபட வேண்டாம், தவிர்ந்து கொள்ளுங்கள், பின்பற்ற வேண்டாம், பாவமாகும், செய்ய வேண்டாம் போன்றன அவற்றுள் சிலவாகும்.

***ஆகவே இவற்றை நாம் விளங்கி ஏற்று ஹராமானவற்றில் இருந்து முற்றாக விடுபட்டு வாழ்வோமாக.***

**பயிற்சி**

*1. சரி பிழை கூறுக.*

1. ஹலால் எது ஹராம் எது என்பதைத் தீர்மானிக்கின்ற அதிகாரம் மனிதர்களுக்குண்டு. ( )
2. அல்லாஹ் ஹராமாக்கிய விடயங்களில் நன்மையை விட தீமையே அதிகமாகும். ( )
3. ஷைத்தான் மனிதனது உள்ளத்தில் ஹராமானவற்றின் பக்கம் ஆசையூட்டுகிறான். ( )
4. ஹலாலான விடயங்களைவிட ஹராமான விடயங்களே அதிகமாகும். ( )
5. ஹலால் ஹராம் பேணி வாழ்வதன் நன்மையை மறுமையிலேயே அடைய முடியும். ( )

2. நீர் வாழும் சூழலில் காணப்படும் ஹராமான செயற்பாடுகள் ஐந்தினைக் குறிப்பிடுக.



# 26

# இன நல்லுறவு

மனித உறவுகள் அன்பு, சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, இன நல்லிணக்கம் போன்ற பண்புகளால் பிணைக்கப்படுவது மக்களிடையே சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பாக அமைகின்றது. இஸ்லாம் இதனை வரவேற்பதுடன் அதன் முக்கியத்துவம் குறித்து போதனைகளையும் வழங்கியுள்ளது. சமாதான வாழ்வை வலியுறுத்தும் இஸ்லாம், மனிதர்கள் ஒருவரை ஒருவர் அறிந்தும் புரிந்தும் வாழ்வதற்கு வழிகாட்டுகின்றது.

## சமூகங்களுக்கிடையில் நீதம் பேணல்

இனம், மொழி, பிரதேசம் ஆகிய எல்லைகளைத் தாண்டி வேறுபட்ட மதங்கள், கலாசாரங்களை பின்பற்றும் மக்கள் சமாதானமாக வாழலாம் என்பதற்கு அல்குர்ஆன் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. இதனை அடைவதற்கான காரணியாக நீதமாக நடத்தலை வலியுறுத்தியுள்ளது. மக்களிடையே நீதமாக நடத்தலை தக்வாவுக்கு - இறையச்சத்திற்கு நிகரானது என்றும் அல் குர்ஆன் விளக்குகிறது. 'ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் அல்லது குழுவினர் மீது ஒருவரோ ஒரு குழுவினரோ கொண்டுள்ள விருப்பு வெறுப்பு நீதி செலுத்துவதில் செல்வாக்கு செலுத்தக் கூடாது' என்று கண்டிப்பான கட்டளை இடுகிறது அல்குர்ஆன். **''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் நீதி செலுத்தி அல்லாஹ்வுக்கு சாட்சியாளர்களாக இருங்கள். நீங்கள் செலுத்தும் நீதி உங்களுக்கோ உங்களது பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ எதிரானதாக இருந்தாலும் கூட''** (4: 35 )

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவில் ஆட்சியமைத்த போது அங்கு இடம்பெற்ற விடயங்கள், இன நல்லுறவைப் பேணும் விடயத்தில் முன்மாதிரியாக அமைந்துள்ளன. முஸ்லிம்கள் மக்காவில் சிறுபான்மையினராக வாழ்ந்தபோது குறைஷியரின் கொடுமைகளைச் சகித்துக் கொண்டும், மதீனாவில் பெரும்பான்மையினராக வாழ்ந்தபோது சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு

மதிப்பளித்தும் வாழ்ந்தமைக்கு வரலாறு சான்று பகர்கின்றது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொடர்ந்து ஸஹாபாக்கள், தாபிஈன்கள் காலத்திலும் இது நிதர்சனமாக இருந்துள்ளது.

### ஒப்பந்தங்களின் ஊடாக உரிமைகள் பேணப்பட்டமை

மதீனாவில் வாழ்ந்த யூதர்கள் எப்பொழுதும் இஸ்லாத்துக்கும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் எதிராகச் செயற்பட்டவர்களாவர். அவர்கள் வதந்திகளைக் கட்டவிழ்த்ததோடு, முஸ்லிம்களின்பால் முஷ்ரிக்குகளைத் தூண்டி விடவும் செய்தனர். முஸ்லிம்களின் சகோதரத்துவத்தை சீர்குலைக்கவும் முயற்சித்தனர். இவர்களால், எப்போதும் இஸ்லாத்திற்கு ஆபத்தே வந்துகொண்டிருந்திருந்தது. இருந்தபோதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவில் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டிருந்தபோது அவர்களுடன் மென்மையாகவே நடந்து கொண்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆட்சி புரிந்த மதீனாவில் யூதர்களும் நஜ்ரான் தேசத்தில் கிறிஸ்தவர்களும் இருந்தனர். அங்கே அனைத்து சமயத்தவர்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டன. அவர்களிடையே உடன்படிக்கைகளும் செய்துகொள்ளப்பட்டன. கி.பி. 622 இல் யூதர்களுடன் செய்துகொள்ளப்பட்ட மதீனா சாசனத்தில் சில உரிமைகள் வழங்கப்பட்டன.

- உடன்படிக்கை செய்துகொண்ட யூதர்கள் எமது பாதுகாப்பிற்கு உரியவர்கள். அவர்களுக்கு அனைத்து உரிமைகளும் உண்டு. அவர்களுக்கு அநீதி இழைக்க மாட்டோம். அவர்களது எதிரிகளுக்கும் உதவி செய்வதில்லை.
- யூதர்கள் அவர்களது சமயத்தின்படி நடப்பார்கள். திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை, பாகப்பிரிவினை போன்ற விவகாரங்களில் யூத வேதங்களின் அடிப்படையிலேயே தீர்ப்புக்கள் வழங்கப்பட முடியும்.

**கி.பி. 630 இல் நஜ்ரான் நாட்டு கிறிஸ்தவர்களுடனான ஒப்பந்தத்தில்**

- நஜ்ரானிலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழும் குடிமக்களின் உயிர், உடைமைகள், நிலம், வணிகம், மதம், வணங்கப்படும் சிலைகள் ஆகிய அனைத்தும் இறைவன் மற்றும் இறை தூதரின் பாதுகாப்பில் உள்ளன.
- அவர்களின் தற்போதைய நிலையில் எவ்வித மாற்றமும் செய்யப்பட மாட்டாது. அவர்கள் உரிமைகள் பறிக்கப்படமாட்டாது. எந்தத் துறவியும் தேவாலயப் பொறுப்புக்களிலிருந்தும் பதவிகளிலிருந்தும் அகற்றப்படமாட்டார்கள்.

மேற்படி இரண்டு ஒப்பந்தங்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏனைய சமூகங்களுடன் நல்லிணக்கமாக நடந்துகொண்டமையை எடுத்துக்காட்டுகின்றன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தைப் போலவே ஸஹாபாக்கள் காலத்திலும் இன நல்லிணக்கம் பேணப்பட்டுள்ளது.

ஒரு முறை உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் முஸ்லிமல்லாத ஒருவரிடம் ஒரு குதிரையை விலைக்கு வாங்கினார்கள். அக்குதிரையில் சிறிது தூரம் பயணித்ததும் அதில் ஏதோ குறை இருப்பதை அறிந்துகொண்ட அவர் விற்றவரிடம் வந்து அதனைத் திருப்பி ஏற்குமாறு கூற அவர் அதனை மறுத்துவிட்டார். இருவரும் நீதிபதி ஷுரைஹ் இடம் வருகிறார்கள். வழக்கை ஆராய்ந்த காழி ''ஒரு பொருளை வாங்கிய பின்னர் இருவரும் அவ்விடத்தை விட்டுப் பிரியும் முன் அதனைத் திருப்பிக்கொடுக்கும் உரிமை நுகர்வோனுக்குண்டு. பிரிந்ததன் பின்னர் அதனை ஏற்காது மறுக்கும் உரிமை விற்போனுக்கு உண்டு'' என்று கூறி வழக்கை நிறைவு செய்தார்கள். அந்தத் தீர்ப்பில் அகமகிழ்ந்த கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அன்னாருக்குப் பதவி உயர்வு வழங்கி கூபாவின் காழியாக நியமனம் செய்தார்கள்.

### சமயங்களுக்கான உரிமைகள்

ஒவ்வொரு மனிதனுக்கும் தாம் விரும்பும் கொள்கையை அல்லது மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் உள்ளது. இது வேறுபட்ட கொள்கையையோ மதத்தையோ பின்பற்றுகின்றவர்கள் ஒருவருக்கு ஒருவர் எதிரிகள் அல்லர் என்பதையும் அதே போன்று ஒருவர் ஏற்றிருக்கின்ற மார்க்கத்தை அல்லது கொள்கையை பிறர் மீது திணிக்கும் உரிமை எவருக்குமில்லை என்பதையும் உணர்த்தி நிற்கின்றது.

**''மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது.''** (2: 256)

**''உங்களுக்கு உங்கள் மார்க்கம்; எனக்கு எனது மார்க்கம்.''** (109: 6)

**''அவர்கள் விசுவாசம் கொள்ளவில்லை என்பதால் அவர்கள் மீது எத்தகைய ஆதிக்கமும் செலுத்த முடியாது. அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவராக நீர் இல்லை''** (88: 22) என அல்குர்ஆன் கூறுகிறது.

இது போன்ற பல வசனங்கள் அல் குர்ஆனில் அதிகமாவே காணப்படுகின்றன.

கிறிஸ்தவர்கள் மிகைத்திருந்த பலஸ்தீனத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கச் சென்ற கலீபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், தொழுகை நேரமாகும்போது, ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் இருந்தார். அத்தேவாலயத்தில் பொறுப்பாக இருந்த பாதிரியார் கலீபாவை அணுகி தேவலயத்தின் உள்ளேயே தொழுகையை நிறைவேற்றுமாறு கோரியபோது அதனை மறுத்த கலீபா அவர்கள், ''பிற்காலத்தில் யாராவது ஒருவர் இங்கு நான் தொழுத காரணத்தைச் சுட்டிக்காட்டி, அதைப் பள்ளிவாசலாக மாற்றக் கூடும்'' என்று கூறி தேவாயலத்துக்கு வெளியில் தனது மேலங்கியை விரித்து தொழுகையை நிறைவேற்றினார்கள்.

### பிறர் உணர்வுகளை மதித்தல்

யூதர் ஒருவரின் பிரேதம் ஒன்று வீதியில் சென்றபோது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து நின்றார்கள். ''அது ஒரு யூதனின் சடலம்'' எனக் குறிப்பிடப்பட்டபோது அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''அது ஓர் ஆத்மா அல்லவா'' என்று விளக்கமளித்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)



## உதவி ஒத்தாசை புரிதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிலிருந்து வெளியேறி மதீனாவில் வாழுகின்றபோது மக்காவாசிகள் பஞ்சம் காரணமாகப் பட்டினியால் அவதிப்படும் செய்தி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் செவிக்கு எட்டுகிறது. உடனே ஹாதிப் பின் அபீ பல்தஆ என்ற தோழரிடம் 500 திர்ஹங்கள் கொடுத்து மக்கா வாழ் குறைஷிக் காபிர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொடுக்குமாறு பணித்தார்கள்.

இது தவிர மக்காவில் முஸ்லிம்கள் கொடுமைக்குள்ளானபோது அவர்களுள் சிலரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபீஸீனியாவின் கிறிஸ்தவ மன்னரான நஜ்ஜாஷியிடம் பாதுகாப்புக்காக அனுப்பி வைத்தார்கள். மதீனாவில் கிறிஸ்தவ தூதுக் குழுவொன்றை பள்ளிவாயிலில் வைத்து உபசரித்தார்கள். மதீனாவில் உள்ள யூதர்களுடன் தொடர்பை வைத்திருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தமது அவசரத் தேவைகளுக்கு அவர்களிடம் கடன் வாங்கவும் செய்தார்கள்.

## சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சில வழிகாட்டல்கள்

- அனைத்து மக்களையும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சந்ததியினர் என நோக்குதல்
- அண்டை அயலவர்களுடன் சுமுகமான உறவினை வளர்த்துக்கொள்ளல்
- தவறுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மன்னித்து, மன்னிப்பு கேட்டு பெருமனதுடன் நடந்துகொள்ளல்
- பொது நிகழ்வுகள், வைபவங்களில் கலந்துகொள்ளல், பரஸ்பரம் உதவிக்கொள்ளல்
- இக்கட்டான சந்தர்ப்பங்கள், தேவைகளின்போது பரஸ்பரம் உதவிக்கொள்ளல்
- பிரதேச, தேசிய நலன் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்கேற்றல்
- இன நல்லிணக்கங்களை ஏற்படுத்தும் கலந்துரையாடல்கள், ஒன்றுகூடல்கள், நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், கலந்து கொள்ளல்
- அகீதா, இபாதா, ஹலால், ஹராம் போன்ற விடயங்களில் அடுத்தவர் உள்ளங்களில் இன சமய வெறுப்பு ஏற்படாதவாறு நடந்துகொள்ளல்
- சொல்லாலோ, செயலாலோ சக சமய கலாசார மக்கள் இன்னல் படுவதைத் தவிர்த்துக்கொள்ளல்

### பயிற்சி

1. இன நல்லுறவைப் பேணுவதில் மதீனா சாசனத்தின் பங்கைக் குறிப்பிடுக.
2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சகோதர மதத்தவர்களின் உணர்வுகளை மதித்து நடந்தமைக்கான உதாரணம் ஒன்றைத் தருக.
3. ஸஹாபாக்கள் காலத்தில் இன நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுக.

# 27

# பிற சமயங்களை மதித்தல்

இஸ்லாம் அமைதியின் மார்க்கம். அது உலகில் சுபீட்சத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த விரும்புகிறது. மக்களிடையே சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் தோற்றுவிக்க முயற்சிக்கிறது. அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வதைப் போதிக்கிறது. பிற சமூகங்களுடன் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ளுமாறு பணிக்கிறது. நன்மை பயக்கும் செயல்களில் பரஸ்பரம் ஒத்துழைக்குமாறு அழைப்பு விடுக்கிறது. உதவுதல், ஒத்துழைத்தல், நீதியுடன் உறவாடல், விட்டுக் கொடுத்தல் போன்ற உயர் விழுமியங்களை எப்போதும் கைக்கொள்ளுமாறு வேண்டுகிறது.

### மனிதர்கள் யாவரும் சகோதரர்கள்

இஸ்லாம் மனித சகோதரத்துவத்தை ஏற்று வலியுறுத்துகின்றது. எல்லா மனிதர்களதும் மூதாதையர் ஆதமும் ஹவ்வாவுமே என்கின்றது. அனைத்து மக்களும் அவ்விருவரதும் வழித்தோன்றல்கள் என்றும் குறிப்பிட்டு அனைவரும் சகோதரர்கள் என்று போதிக்கிறது.

**''மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்து தான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும்பொருட்டு உங்களை கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்..''** (49: 13)

''மனிதர்களே உங்கள் இரட்சகன் ஒருவனே! அறிந்துகொள்ளுங்கள் அரபிகள் அரபிகளல்லாதோரை விடவோ, வெள்ளையர்கள் கறுப்பர்களை விடவோ மேம்பட்டவர்களல்லர். இறையச்சத்தின் மூலமே நீங்கள் உயர்ந்தவராகக் கணிக்கப்படுவீர்கள்'' (அஹ்மத்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை அனைத்து மக்களும் சகோதரர்களே என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

சகோதரத்துவம் பற்றிய இஸ்லாத்தின் கருத்து மிகவும் ஆழமானது; யதார்த்தமானது. இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின் ஒரு பகுதியாகவும் அது அமைந்துள்ளது. ''இறைவா! மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் என நான் சாட்சி பகர்கிறேன்'' என இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு பர்ளான தொழுகையின் பின்னரும் பிரார்த்தனை செய்யும் வழக்கம் கொண்டிருந்தார்கள் என ஸைத் பின் அர்கம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள். (அஹ்மத், அபூதாவூத்)

*அல்குர்ஆனின் பெரும்பாலான போதனைகளும்கூட 'மனிதர்களே' என்றே விழிக்கிறது. காரணம் அதன் போதனைகள் அனைத்து மக்களுக்கும் உரித்தானது என்பதை எடுத்துக் காட்டுவதற்கேயாகும். எனவே, எம்மிடையே நாம் அனைவரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள், சகோதரர்கள் என்ற உணர்வு இருத்தல் வேண்டும்.*

- *''தான் விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பாதவரை ஒருவன் முஸ்லிமாக மாட்டான்.'' (முஸ்னத் அஹ்மத்)*
- *''மண்ணிலுள்ள மனிதர்களை நீங்கள் நேசித்தால் விண்ணிலுள்ள இறைவன் உங்களை நேசிப்பான்.'' (திர்மிதி)*
- *''படைப்புகளனைத்தும் இறைவனின் குடும்பமே.'' (பைஹகி)*

*எனவே, இதற்கமைய இன, மத, பிரதேச வேறுபாடின்றி எல்லா மனிதர்களையும் நேசிக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படை போதனையாக இருப்பதைக் கண்டுகொள்ள முடிகிறது.*

### சமய சுதந்திரம்

*ஒவ்வொரு மனிதனுக்கும் தான் விரும்பும் கொள்கையை அல்லது மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் உள்ளது. இதனை இஸ்லாம் ஏற்றுள்ளது. இதற்கமைய மாறுபட்ட கொள்கையையோ, மதத்தையோ பின்பற்றுகின்றவர்கள் ஒருவருக்கு ஒருவர் எதிரிகள் அல்லர் என்பது இஸ்லாத்தின் போதனையாகும். அதேபோன்று ஒருவர் ஏற்றிருக்கின்ற மார்க்கத்தை அல்லது கொள்கையை பிறர் மீது திணிக்கும் உரிமையும் எவருக்குமில்லை. இதனையும் இஸ்லாம் தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. இதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது:*

**''மார்க்கத்தில் நிர்ப்பந்தம் கிடையாது.''** (2: 256)

**''அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவராக நீர் இல்லை.''** (88: 22)

*அத்துடன் அல்லாஹ் அல்லாதவற்றை வணங்குவோரது கடவுள்களை இழிவுபடுத்த வேண்டாமென்று அல்குர்ஆன் கட்டளையிடுகின்றது.*

**''(இறைநம்பிக்கை கொண்டவர்களே) அவர்கள் அல்லாஹ்வை விடுத்து யாரிடம் பிரார்த்தனை புரிகின்றார்களோ அவர்களை நீங்கள் ஏசாதீர்கள்.''** (6: 108)

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆட்சி புரிந்த மதீனாவில் யூதர்களும் சிலைகளை வணங்கியவர்களும் இருக்கவே செய்தனர். மதீனாவின் அருகே நஜ்ரான் தேசத்தில் கிறிஸ்தவர்கள் இருந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஆட்சிக் காலத்தில் எல்லா மதத்தவர்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட்டன.*

## நீதி பெறும் உரிமை

இனம், மொழி, பிரதேசம், நாடு ஆகிய எல்லைகளைத் தாண்டி மனிதர்கள் இணைந்து சமாதானமாக வாழ்வதற்காக இஸ்லாம் முன்வைக்கும் மற்றொரு விடயம் அனைவருக்கும் சமமான நீதியை உறுதி செய்வதாகும். சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனையும் நீதத்துடன் நடத்துவது அதிகாரத்தின் சகல மட்டங்களில் உள்ள தலைவர்களதும் கடமையாகும். இந்தக் கடமை மிகவும் பாரியது. இறையச்சத்திற்கு நிகரானது என்று நீதியின் தாற்பரியத்தை அல் குர்ஆன் விளக்குகிறது.

**''நீதி செலுத்துங்கள், இதுவே இறையச்சத்திற்கு மிகவும் நெருக்கமானது.'' (5: 8)**

ஒரு குறிப்பிட்ட சமூகத்தார் அல்லது குழுவினர் மீது ஒருவரோ ஒரு குழுவினரோ கொண்டுள்ள விருப்புவெறுப்பு நீதி செலுத்துவதில் செல்வாக்குச் செலுத்தக் கூடாது என்று அல்குர்ஆன் கண்டிப்பாக கட்டளையிட்டுள்ளது.

**''ஈமான் கொண்டவர்களே! நீங்கள் நீதி செலுத்தி அல்லாஹ்வுக்கு சாட்சியாளர்களாக இருங்கள். நீங்கள் செலுத்தும் நீதி உங்களுக்கோ உங்களது பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ எதிரானதாக இருந்தாலும் கூட'' (4: 35 )**

முஸ்லிமல்லாத மக்களின் உயிர், உடைமை, நம்பிக்கை, கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் விடயத்திலும் இஸ்லாம் கரிசனை காட்டுகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்: ''ஒப்பந்தக்காரர் (இஸ்லாமிய அரசில் உள்ள முஸ்லிம் அல்லாத குடிமகன்) ஒருவனுக்கு ஒரு முஸ்லிம் அநீதியிழைத்து விட்டாலோ, அவன் உரிமையைப் பறித்துவிட்டாலோ, அவன் சக்திக்கு மீறிய சுமை களை அவன் மீது சுமத்திவிட்டாலோ, அவனுடைய பொருள் எதையேனும் பலவந்தமாக எடுத்துக் கொண்டாலோ, மறுமை நாளில் அல்லாஹ்வின் நீதிமன்றத்தில் அந்த முஸ்லிமுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்கில் அந்த முஸ்லிமல்லாத குடிமகனின் சார்பில் நானே வாதிடுவேன்.'' (அபூதாவூத்)

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது ஆட்சியின்போது அம்ரிப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எகிப்தின் கவர்னராக இருந்தார். இவரது மகன் ஒருமுறை கிப்திய சமூக கிறிஸ்தவ இளைஞன் ஒருவனைக் கடுமையாக அறைந்து விட்டார். அவமானம் தாங்க முடியாத அந்த இளைஞன் இச்சம்பவத்தை கலீபா உமரின் கவனத்திற்கு கொண்டுவந்தார். கலீபா உமர் கவர்னரையும் அவரது மகனையும் மதீனாவிற்கு வருமாறு பணிப்புரை விடுத்தார்.

கலீபாவிற்கு முன்பாக கவர்னர் அம்ர் இப்னு ஆஸும் அவரது மகனும் தாக்கப்பட்ட இளைஞனும் நிறுத்தப்பட்டனர். கலீபா அந்த இளைஞனை நோக்கி 'உனக்கு கவர்னர் மகன் எப்படி அறைந்தாரோ அப்படி ஓர் அறையை கவர்னரின் மகனின் கன்னத்தில் விடு' என கட்டளைப் பிறப்பித்தார். அறை விழுந்தது. கவர்னர் அம்ர் இப்னு ஆஸ் அதிர்ச்சியில் உறைந்து போனார். உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். ''எல்லா தாய்மார்களும் தமது பிள்ளைகளை சுதந்திரவான்களாகவே பெற்றெடுத்

*துள்ளனர். அப்படியிருக்க எப்போது நீங்கள் அவர்களை அடிமைகளாக்கக் கற்றுக் கொண்டீர்கள்?''*

**எனவே, முஸ்லிம் சமூகம் பெரும்பான்மையாகவோ சிறுபான்மையாகவோ வாழ நேரிடலாம். ஆனால் அவர்களது வாழ்வின் வழிகாட்டி இஸ்லாம் ஒன்றாகவே இருக்க வேண்டும். சகவாழ்வு உறவுகளின் அடிப்படையாக அமைய வேண்டும். அங்கே சமாதானம் நிலைகொள்ள வேண்டும். இஸ்லாத்தின் தனித்துவத்தைப் பேணுவதோடு பிற சமூகத்தினரையும் மதித்து வாழ்வது இன்றியமையாததாகும்.**

**பயிற்சி**

1. மனிதர்கள் யாவரும் சகோதரர்கள் என்பதை வலியுறுத்தும் ஹதீஸ்கள் இரண்டினைக் குறிப்படுக.
2. பிற சமயங்களை மதித்தல் தொடர்பாக அல்குர்ஆனின் போதனைகள் இரண்டினை எழுதுக.
3. உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் நீதியை நிலைநாட்டுதல் தொடர்பாக இடம்பெற்ற சம்பவமொன்றைக் குறிப்பிடுக.
4. பிற சமயங்களை மதித்தல் தொடர்பாக உமது நண்பனுக்கு நீர் கூறும் ஐந்து ஆலோசனைகளை எழுதுக.

# 28

# இலங்கையிலுள்ள ஏனைய சமயங்கள் – 1



இலங்கை பல சமயங்களைப் பின்பற்றும் மக்களைக் கொண்ட நாடாகும். அவற்றுள் பௌத்த சமயம், இந்து சமயம், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமயம் என்பன பிரதானமானவை. சமய ரீதியாக வேறுபட்டாலும் ஒரே நாட்டவர் என்ற வகையில் அனைத்து சமயத்தினரும் மிகவும் புரிந்துணர்வுடன் செயற்படுவதன் மூலம் ஒளிமயமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு பங்காற்றலாம்.

முஸ்லிம்களாகிய நாம் ஏனைய சமயங்கள், சமயப் பெரியார்கள் மற்றும் சமய விழாக்கள் தொடர்பாக அறிந்திருப்பது சிறந்தது. அப்போது ஏனைய சமயத்தைப் பின்பற்றுபவர்களுடன் புரிந்துணர்வுடன் நடந்து கொள்ளலாம். சமயங்களின் போதனைகளுக்கும் அவர்களின் புனித சின்னங்களுக்கும் அகௌரவம் செய்யாமல் நடப்பது நமது கடமையாகும்.

## பௌத்த சமயம்

சுமார் இரண்டாயிரத்து அறுநூறு வருடங்களுக்கு முன்பு இந்தியாவின் வடகிழக்கில் இமாலயப் பெருமலையின் தென் சாரலில் செலுத்தியான கிராமம் ஒன்று இருந்தது.



அதனைச் சாக்கிய குலத்தவர் ஆண்டனர். சாக்கிய குலத்தில் அப்போது இருந்த தலைவரின் பெயர் சுத்தோதனன். சுத்தோதனனது பட்டத்தரசியாய் விளங்கிய மகாமாயா தேவியின் வயிற்றில் புனித குமாரர் கருவுற்றிருந்த போது, நிறைமாத காலத்தில் தேவி தனது தாய் நாட்டை நோக்கி பேரூர்வலமாக செல்லும் வழியில் லும்பினி என்ற அழகிய சாலமரச் சோலையில் தனது முதலாவது குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு சித்தார்த்தன் என்று

பெயரிட்டனர். அக்குழந்தையின் குடும்பப் பெயர் கௌதமன். எனவே சித்தார்த்த கௌதமர் என அவர் பெயர் பெற்றார்.

அரச வாழ்க்கையின் சுகபோகங்களுக்கு மத்தியில் சித்தார்த்தர் வளர வளர அரசருக்குரிய கலைகள் யாவும் கற்பிக்கப்பட்டன. தனது பதினாறாவது வயதில் இளவரசி யசோதரையை மணந்தார்.

எனினும் தனது ஆடம்பரத்தின் மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. எந்நேரமும் சிந்தனையில் மூழ்குவது வழக்கமானது. ஆனால் சுத்தோதனன் தனது மகனை இளவரசருக்குரிய வாழ்க்கையில் ஈடுபடுத்தப் பெரிதும் முயன்றார். ஆனால் சித்தார்த்தரோ வாழ்க்கையின் இயல்புகளைப் பற்றி அதிகமதிகம் சிந்திப்பதிலேயே ஈடுபட்டார்.

அதுவரை அனுபவித்த ஆடம்பர வாழ்க்கையினால் அவர் மக்களின் துன்பங்களைக் காணவில்லை. ஆனால் குறுகிய காலத்தில் பல துன்ப நிகழ்ச்சிகளைக் காண நேர்ந்தது. முதலில் வயோதிபர் ஒருவனையும் அடுத்து நோய் வாய்ப்பட்ட ஒருவனையும் அடுத்து இறந்த மனிதனையும் அவர் கண்டார். இவற்றின் பயனாக இவ்வுலகம் எவ்வளவு துன்பங்களால் பீடிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை அவருக்குத் தெளிவாயிற்று. அதன் பின்னர் அமைதியும் சாந்தமும் கொண்ட துறவி ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரைப் போலவே இல்லற வாழ்வைத் துறக்க சித்தார்த்தருக்கு அவா உண்டானது. இதன் மூலம் தாமும் தம்போன்ற மக்களும் கவலைகளிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் விடுதலை பெற வழி கிடைக்கும் என்று அவர் எண்ணினார்.

அவ்வேளை அவரின் மனைவி முதலாவது குழந்தையைப் பெற்றெடுத்தாள். தாம் தொடர்ந்தும் மாளிகையிலேயே தங்கினால் தன் மனைவியிலும் குழந்தையிலும் பாசம் அதிகரித்து மனித துன்பங்களிலிருந்து விடுதலை பெறும் தனது நோக்கத்திற்கு



தடையாக அமைந்துவிடும் என்று கருதி அரச பதவியைத் துறந்து மனைவியினதும் குழந்தையினதும் பாசத்தில் இருந்து நீங்கி வாழ்க்கையின் யதார்த்தத்தைத் தேடி தனது இருபத்தொன்பதாவது வயதில் சித்தார்த்தர் (குடும்ப வாழ்க்கையை விட்டு) புறப்பட்டார்.

இளவரசர் குடும்ப வாழ்க்கையை விட்டுவிட்டு ஞானிகளின் போதனைகளின் படி ஆறு ஆண்டுகள் இடத்திற்கிடம் சென்று கஷ்டங்களை அனுபவித்தார். பல சோதனை முயற்சிகளை மேற்கொண்டாலும் தான் தேடிய உண்மையை அவரால் கண்டு கொள்ள முடியவில்லை. அதன் பின்பு அதிக சுக வாழ்க்கையிலிருந்தும் அதிக துன்பத்திலிருந்தும் விலகி நடுத்தர வாழ்க்கையை அனுசரித்தார்.

வெசாக் போயா தினமொன்றில், அவர் ஆழ்ந்த சிந்தனையோடு வெள்ளரசு மரம் ஒன்றின் நிழலில் அமர்ந்திருந்தார். அத்தினம் அவர் தேடிய வாழ்வியல் உண்மை புலனாயிற்று. அவர் பின்வருவனவற்றை அறிந்து கொண்டார்.

- நாம் அறிந்தவரை வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நோயையும் துன்பத்தையும் அடைய வேண்டியுள்ளது. (துன்பம்)
- இவற்றிற்கு திட்டவட்டமான காரணம் உள்ளது. (துன்பத்திற்கு காரணம்)
- அக்காரணங்களைஅகற்றினால்கவலைநீங்கும்.(துன்பத்தைஇல்லாதொழித்தல்)
- துன்பத்திலிருந்து அவர் விடுதலை பெறும் வழி உண்டு. (துன்பத்தை இல்லாதொழிக்கும் வழி)

மெய்யுணர்வு பெற்ற இக்காலம் முதல் மெய்ஞானி புத்தர் ***(ஸம்மா ஸம் புது ரஜானன்)*** என அவர் அழைக்கப்பட்டார்.

புத்தர், தம்மோடு இருந்தவர்களுக்கு உரையாற்றினார். இவர்கள் அவருடைய சீடர்களாயினர். ஒருவன் தனது வாழ்க்கையில் அதிக காம இச்சையையும் ஆடம்பரத்தையும் தேடினால் தீங்கு நேரிடும். அதிக துன்பத்தைத் தேடிச் சென்றாலும் துன்பம் அடைய நேரிடும். ஆகையால் மிகைப்பட்ட போக்குகளுக்கு இடையிலான நடுநிலை நெறி தேடுதல் நலம்' என அறிவுரை வழங்கினார்.

அதன் பின்னர் சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகள் அவர் வாழ்ந்தார். அக்காலம் முழுவதும் உலக மக்களின் நல்வாழ்விற்கென்றே அர்ப்பணித்தார். அஹிம்சை, அன்பு, கருணை பிறருக்குத் தொண்டு செய்தல், அவர்களின் நல்வாழ்வினைக் கருதுதல், நோயாளரைப் பேணல் என்பன புத்தர் பிரானின் வாழ்வின் முக்கிய அம்சங்களாகும்.

ஞானம் பெற்று 45 ஆவது வருடத்தில் வெசாக் தினம் ஒன்றில் புத்தர் குசிநார நகரில் உள்ள சால சோலையிலே உயிர் நீத்தார். அப்போது அவருக்கு வயது எண்பது. உலகிலுள்ள பௌத்தர்கள் யாவரும் கருணை நிறை புத்த மகான் பிறந்த, ஞானம் பெற்ற, பரிநிர்வாணம் அடைந்த மூன்றும் நடைபெற்ற வெசாக் நாளைப் பெரும் விழா எடுத்துக் கொண்டாடுகின்றனர். புத்தரின் வரலாறும் உபதேசங்களும் பெருந் தொகையான மக்களுக்கு ஆசிகளை அளித்துக் கொண்டிருக்கின்றன.

## பயிற்சி

1. இலங்கை மக்கள் பின்பற்றும் சமயங்கள் நான்கைக் குறிப்பிடுக.
2. மகாமாயா தேவிக்குப் பிறந்த குழந்தைக்கு இடப்பட்ட பெயர் என்ன?
3. புத்தர் கண்ட துன்ப நிகழ்ச்சிகள் மூன்றும் எவை?
4. புத்தர் பிறந்ததும், ஞானம் பெற்றதும், உயிர் நீத்ததும் எத்தினத்தில் இடம்பெற்றது?

# 29

# இலங்கையிலுள்ள ஏனைய சமயங்கள் – 2

## இந்து சமயம்



இந்து சமயம் மிகவும் பழமையான சமயமாகும். இந்து சமயம் என்ற பெயர் அச்சமயத்தைக் குறிப்பதற்குச் சமய நூல்கள் ஒன்றிலும் வழங்கப்படவில்லை. மிகப் பழைய காலத்திலே சிந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களைப் பாரசீகர் 'இந்துக்கள்' என்று அழைத்தனர். நாளடைவில் இந்திய மக்களின் சமயம் இந்து சமயம் என வழங்குவதாயிற்று. உண்மையில் இந்து சமயத்திற்குச் சரியான பெயர் 'சனாதனதர்மம்' என்பதாகும். இது எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஒப்ப நடக்கும் தர்மம் என்று பொருள்படும்.



இந்து சமயத்தில் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. எப்பிரிவினரும்

1. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையும்

2. இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களே தமது சமயத்திற்கு ஆதார நூல்கள் என்பதையும் ஒத்துக்கொள்கிறார்கள். வேதங்கள் என்பது இருடிகளுக்கும் ஞானிகளுக்கும் கடவுளாற் காலத்துக்குக் காலம் தெரிவிக்கப்பட்ட சமய நூல்களாகும்.

இந்து சமயப் பிரிவுகளுள்ளே தமிழ் மக்களிடையே நின்று நிலவிவரும் முக்கியமான பிரிவுகள் சைவமும் வைணவமும் ஆகும். சைவர்கள் தமது முழுமுதற் கடவுளைச் சிவன் என்பர். வைணவர்கள் தமது முழுமுதற் கடவுள் விஷ்ணு என்கின்றனர். இவ்விரு பிரிவினரும் தமக்கென வேறுவேறான கிரியைகளையும் சடங்குகளையும் அமைத்து வேறுவேறான விழாக்களையும் கொண்டாடுகின்றனர்.

சிவ வழிபாடு புராதன நகரங்களாகிய மொகஞ்சதாரோ, ஹரப்பா என்பவற்றில் நிலவியது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இன்றும் இமாலயந் தொட்டு இலங்கை வரை சிவ வழிபாடு ஆங்காங்கே நிலவுகிறது. இலங்கையிற் பண்டுதொட்டுச் சைவ சமயம் நிலவி வருகிறது. சரித்திர காலத்திற்கு முன் ஆட்சி புரிந்த இராவணன் ஒரு சைவனாவான். இன்று இலங்கை வாழ் இந்துக்களிற் பெரும்பான்மையோர் சைவ சமயத்தவராவர்.

சைவ சமயத்தவர்களுக்கு வேதங்களுடன் ஆகமங்கள் என்னும் சமய நூல்களும் இருக்கின்றன. இவை சமய தத்துவங்களையும் கோயில்கள் அமைக்கும் முறையையும் கடவுள் வழிபாட்டின் முறையையும் கூறுகின்றன.

சைவர்களுக்கு முன்னே கூறியவாறு, இறைவன் ஒருவனேயாவான். இறைவனை அவர்கள் சிவபெருமான் என்பர் (சிவன் என்றால் நன்மையைச் செய்பவன் என்று பொருள்படும்). கடவுள் ஒருவரேயாயினும் அவர் பல்வேறு தொழில் புரியும்பொழுது பல்வேறு பெயர்களால் அவரை அழைக்கின்றனர். சைவத் திருக்கோயில்களும் அங்குள்ள விக்கிரகங்கள் முதலானவையும் தத்துவக் கருத்துக்களை விளக்கும் அறிகுறிகளாகும்.

சைவக் கோயில்களிலே தினமும் ஆறு காலங்களிலே வழிபாடு நடப்பது வழக்கம். சைவ மக்கள் தினமும் கோயில் வழிபாடு செய்தல் வேண்டும். அப்படிச் செய்ய முடியாதவர்கள் விசேட தினங்களிலாவது கோயிலுக்குப் போதல் நன்று. விசேட தினங்களில் வெள்ளிக்கிழமையும் ஒன்றாகும்.

சைவ மக்கள் கடவுளைப் பத்தி மார்க்கத்தினாலே வழிபடுகின்றனர். கடவுளிடத்துத் தீவிர அன்புகொண்டு வழிபடுதலே பத்தி மார்க்கமாகும். இப்படி வழிபடும்போது ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்றமாதிரியான தொடர்பைக் கடவுளுடன் கொள்கிறார்கள். வேறு சிலர் கடவுளை எசமான் எனக்கொண்டு வணங்குகிறார்கள். வேறு சிலர் அவரைத் தந்தையென வந்திக்கின்றனர். இன்னும் சிலர் அவருடன் நட்புரிமை பூண்டு ஒழுகுகின்றனர். எவ்வாறு இறைவனை வழிபடினும் இறுதியில் யாவரும் சென்றடையும் பரம்பொருள் ஒருவரே.

சைவ மக்கள் பல நோன்புகள் நோற்கின்றனர். நோன்பு நாட்களிலே மனதை ஒருவழிப்படுத்தி கடவுளைத் தியானிக்கின்றனர். தீவிரமாக நோன்பைக் கடைப்பிடிப்பவர்கள் பகலும் இரவும் உணவு உட்கொள்ளாதிருந்து அடுத்த நாளே உணவு உட்கொள்வார்கள்.

சைவ மக்கள் உட்பட இந்துக்களின் அன்றாட வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் கட்டுப்படுத்துவன சிமிருதி என்னும் தர்ம சாத்திரங்களாகும். இவை சமய வாழ்வு வாழ்ந்த ஞானிகளாலே வகுக்கப்பட்டமையினால் இவற்றை இந்துக்கள் தவறாது கடைப்பிடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் இவை சமயத் தத்துவங்களைப்போல் என்றும் எவ்விடத்தும் உடன்பாடானவை அல்ல. காலப் போக்கிற்கும் சுற்றாடலுக்கும் தக்க மாற்றப்படலாம்.

இனித் தமிழ்ச் சைவ மக்களின் சமூகத்திலும் காலத்துக்குக் காலம் ஞானிகள் தோற்றித் தமது வாழ்க்கை மூலம் சமயத்தையும் சமயப் பற்றையும் மக்களிடையே வளர்த்திருக்கிறார்கள். இவர்களுள் அப்பா, சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நான்கு சமயப் பெரியார்களை மக்கள் தம் சமயக் குரவர்களாகக் கொண்டு அவர்கள் காட்டிய வழியைக் கடைப்பித்தொழுக முயலுகின்றனர்.

## இ. கிறிஸ்தவம்



இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவோர்கிறிஸ்தவர்கள் எனப்படுகின்றனர். கிறிஸ்தவர்களின் புனித நூல் திருவிவிலியம் ஆகும். இறை மகன் இயேசு மனுவுரு எடுத்து இப்பாவ உலகிற்கு வந்ததாகவும், கன்னிகையான மரியாளிடம் தூய ஆவியால் உற்பவித்ததாகவும் கூறப்படுகின்றது.



பின்பு பாடுபட்டு முழு உலக மீட்புக்காகவும் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததாகவும் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இதனை கிறிஸ்தவர்கள் ஆழமாக விசுவாசிக்கின்றனர்.

இயேசு பிரான் பெத்லேகம் என்னும் சிற்றூரில் மாட்டுத் தொழுவத்தில் யூத குலத்தில் பிறந்தார். கன்னியான மரியாள் இவரது தாயாவார். மரியாளுக்கு மண ஒப்பந்தமான தச்சனான சூசை என்பவரே இயேசுவின் பிறப்பிலிருந்தே அவருக்கு வளர்ப்புத் தந்தையானார்.

நசரேத் என்னும் ஊரில் இவர் தமது இளமையைக் கழித்ததாலேயே இவரை நசரேயனாகிய இயேசு என அழைக்கின்றனர். முப்பது ஆண்டுகளின் பின்னர் இயேசு தனது பணியை ஆரம்பித்தார். இயேசுவின் வழியை ஆயத்தம் செய்த திருமுழுக்கு யோவான் என்னும் இறைவாக்கினர், உலகம் எதிர்பார்த்திருந்த மீட்பர் வந்துவிட்டார் என மக்களுக்கு அறிவித்தார்.

இயேசுவின் வார்த்தையும் செயலும் நிறைந்த திருப்பணியானது இறைவனிலே நம்பிக்கை கொண்டு அயலவனை அன்பு செய்து மன்னித்து வாழ வேண்டுமென்று தெளிவாகக் காண்பித்தது. அவர் ஏழைகள், துயரப்படுவோர், சோர்வுற்றோருக்கு உதவி செய்தார். மற்றவர்களால் ஒதுக்கப்பட்டவர்களுக்குச் சார்பாக செயற்பட்டார். பாவிகளுக்கு ஆழ்ந்த அனுதாபம் காட்டினார். வியாதிகளைக் குணமாக்கினார். குருடர்களுக்குப் பார்வை அளித்தார். ஊமையரைப் பேசச் செய்தார். மரித்தோருக்கு உயிர் கொடுத்தார். கடலில் எழுந்த புயலை அமர்த்தினார். அவர் இறைவனோடு கொண்டிருந்த ஒன்றிப்பு வியப்புக்குரிய வாழ்வுக்கு ஊற்றாக அமைந்தது எனலாம்.

தமக்கு உதவி செய்ய இயேசு பன்னிருவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

''நான் உங்கள் மேல் அன்பு கூர்ந்தததைப் போல் நீங்களும் ஒருவர் மற்றவர் மீது அன்பு வையுங்கள்.'' என்று அவர்களுக்குக் கூறினார்.

அவர் ஊரெல்லாம் சென்று தம்மைப் பின்பற்றிய பெருந்திரளான மக்களுக்கு சிறிய கதைகளாலும் உவமைகளாலும் தமது நற்செய்தியை எத்திவைத்தார்.

''உன் கடவுளாகிய ஆண்டவரை முழு உள்ளத்தோடும் அன்பு செய். உன்மீது அன்பு காட்டுவது போல் உன் அயலான் மீதும் அன்பு காட்டு.'' என இயேசு கூறினார்.

அவருடைய போதனை எல்லோருக்கும் எளியதாக அமைந்தது. தன்னலம் தேடும் மனப்பான்மையை மாற்றிப் புது வாழ்வுக்காகத் தாழ்ச்சியையும் அன்புள்ளங்களையும் கொண்டிருங்கள். என்னைப் பின் செல்பவனுக்கு எல்லாம் ஆகும் என்று குறிப்பாக தமக்குச் செவி சாய்க்க மறுத்த ஆணவக்காரருக்கும் வெளிவேடர்களுக்கும் எடுத்துரைத்தார்.

உண்மையாக அவரை விரும்பாதவர்களும் இருந்தனர். சில குருக்களும் அதிகாரிகளும் அவரை விரும்பவில்லை. எனவே அவருக்கெதிராகக் குற்றச் சாட்டுக்களைக் கொண்டு வந்து அவருக்கு தண்டனை வழங்குவதற்கு உரோமையை ஆண்ட போஞ்சியோ பிலாத்துவிடம் அவரைக் கையளித்தனர். அவருக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது.

இயேசு சாட்டைகளால் அடிக்கப்பட்டு, ஏளனம் செய்யப்பட்டு, முள்முடி தரிக்கப்பட்டுச் சிலுவை சுமந்தவராய் ஜெருசலமுக்கு வெளியே உள்ள கொல்கொத்தா என்னும் குன்றில் சிலுவையில் அறையப்பட்டார். உரோமர்களின் தண்டனை முறைகளில் இதுவும் ஒன்றாக நிலவியது.

இயேசு வெள்ளிக்கிழமை அன்று உயிர்விட்டபடியால் கிறிஸ்தவர்கள் ஆண்டு தோறும் அச்சம்பவத்தை நினைவுகூர்ந்து வழிபாடு செய்வர். அத்தினத்தை பெரிய வெள்ளி என்று அழைப்பர். அவ்வாறே அவர் ஞாயிற்றுக் கிழமையன்று காலையில் மீண்டும் மரணத்திலிருந்து உயர்த்தெழுந்தார். இதனை உயிர்த்த ஞாயிறு என கிறிஸ்தவர்கள் கொண்டாடுவர். அன்றியும் ஒவ்வொரு ஞாயிறும் அவர்களுக்கு விசேட தினமாகும். அன்றைய தினம் ஆலயம் சென்று வழிபாடுகளில் பங்கேற்பர்.

இயேசு இப்பூவுலகில் பிறந்த தினத்தை நத்தார் தினமாக கிறிஸ்தவர்கள் கொண்டாடுவர்.

கிறிஸ்தவர்களில் பல பிரிவினர் உள்ளனர். கத்தோலிக்கர் என்போர் அவர்களில் பிரதான பிரிவினராவர்.

**பயிற்சி**

1. இந்து சமயத்தின் இயற்பெயர் யாது? அதன் பொருள் என்ன?
2. இந்து சமய ஆதார நூல்களான நான்கு வேதங்களும் எவை?
3. பெரிய வெள்ளி கிறிஸ்தவர்களிடம் எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகிறது??
4. கிறிஸ்தவர்கள் கொண்டாடும் முக்கிய பெருநாள் யாது? அது ஏன் கொண்டாடப்படுகிறது?
5. இயேசுநாதரின் தாயார் யார்?

# 30

# தேசத்தின்மீது பற்றுக்கொள்ளல்

இஸ்லாம் இயற்கை மார்க்கமாகும். அது மனிதனது இயல்புகளையும் மனித சுபாவத்தையும் கவனத்திற்கொள்கின்றது.

தேசப்பற்று, தேசிய உணர்வு என்பவை இயல்பானவை. எந்த மனிதனும் தனது இனத்தின்பால், மொழியின்பால், சமூகத்தின்பால், தான் வாழும் பூமியின்பால், வாழும் நாட்டின்பால் ஈடுபாடு கொள்வது யதார்த்தமானதாகும். பின்வரும் அல்குர்ஆன் வசனம் இதுபற்றி சிறப்பாக எடுத்தியம்பியுள்ளது.

**''மனிதர்களே, உங்களை நாம் ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களைநாங்கள்பலஇனங்களாகவும்கோத்திரங்களாகவும்அமைத்திருக்கின்றோம்.''** (49: 13)



நாடு, இனம், மொழி, பிரதேசம் அனைத்தையும் கடந்த நிலையில் ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து படைக்கப்பட்டுள்ளமை பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

பிறந்த மண்ணையும் தேசத்தையும் நேசிப்பது மனிதனிடமுள்ள ஓர் இயற்கையான உணர்வாகும். உயர்வான இந்த மானிடப் பண்பை நாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மற்றும் நபித் தோழர்கள் வாழ்வில் கண்டுகொள்ளலாம்.

மக்காவாசிகளின் கொடுமைகளால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டபோது அவர்களின் உள்ளத்திலிருந்து வெளிவந்த வார்த்தைகள், தான் பிறந்து வளர்ந்த மக்கா மண்ணின் மீதுள்ள பற்றை சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. மக்கா நகரை விழித்து ''மக்காவே நீ உலகிலேயே எனக்கு மிகவும் விருப்பமான பூமி. அல்லாஹ்விடத்தில் மிகவும் கண்ணியமான தேசம். உன் சமூகம் என்னை விரட்டியிருக்காவிட்டால் நான் உன்னை விட்டுச் சென்றிருக்க மாட்டேன்'' (முஸ்னத் அபூ யஃலா) என கண்ணீர் மல்கக் கூறினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆரம்ப வஹி அருளப்பட்ட சமயத்தில் இது தொடர்பான விளக்கத்தைப் பெறுவதற்காக கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வரகா பின் நௌபலிடம் அழைத்துச் சென்றார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை விட்டும் விரட்டப்படுவார்கள் என வரகத் பின் நௌபல் எதிர்வு கூறியதும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் அதனை நம்ப முடியவில்லை. மிகுந்த ஆச்சரியத்தில் ''நான் பிறந்து வளர்ந்து, ஒன்றாகக் கூடிப் பழகி வாழ்ந்த இந்த மண்ணிலிருந்து அவர்கள் என்னை வெளியேற்றுவார்களா?'' என்று கேட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாம் பிறந்து வளர்ந்த பூமி மீது கொண்டிருந்த பற்றை இது பறைசாற்றுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற பின்னர் கூட தனது பிறந்த தேசத்தை நினைத்துக் கவலைப் பட்டிருக்கிறார்கள். ''யா அல்லாஹ் நீ எங்களுக்கு மக்காவை நேசத்திற்குரிய பூமியாக மாற்றியது போன்று, மதீனாவையும் மாற்றித் தருவாயாக அல்லது மக்காவை விட நேசத்திற்குரிய பூமியாக மதீனாவை மாற்றித் தருவாயாக'' (புஹாரி) எனப் பிரார்த்தித்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத் சென்று சில நாட்களுக்குப் பின்பு உஸைல் அல் கிப்பாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவுக்கு வந்த சமயம் அன்னாரை விழித்து ''மக்கா நகரம் எப்படி இருக்கிறது?'' என்று கேட்டார்கள். உஸைல் கிப்பாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் புனித மக்காவின் பசுமைகளையும் மழை பொழிந்து வெள்ளம் பாய்ந்தோடிய பள்ளத்தாக்குகளையும் செழிப்பாக வளர்ந்துள்ள மக்கத்து செடி கொடிகளையும் வர்ணிக்க ஆரம்பித்தபோது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''போதும் போதும், மீண்டும் அந்த மக்கா பற்றிக் கூறி எமது உள்ளங்களை கவலையில் ஆழ்த்திட வேண்டாம்'' என்றார்கள். (உஸுதுல் காபா, அல்இஸாபா)

*பிலால் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவில் சுகயீனமுற்றிருந்த ஒரு சமயம் மக்காவை நினைத்து கண்ணீர் வடித்தார்கள். ''இத்கிர் மற்றும் ஜலீல் என்ற பசுமையான புற்றரைகள் என்னைச் சூழ இருக்க மக்காவின் அந்தப் பள்ளத்தாக்கில் ஓர் இரவேனும் தூங்கும் நாள் எனக்கு வரக் கூடாதா? மஜன்னாவின் (மக்காவின் ஒரு இடம்) நீரைப் பருகும் வாய்ப்பு ஒரு நாளேனும் கிட்டாதா? ஷாமா, துபைல் என்ற இரு மலைகளும் எனக்குத் தென்படக் கூடாதா?'' என பிலால் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிட்டமை தனது சொந்த ஊரின் மீது அவர் கொண்டிருந்த பற்றை வெளிப்படுத்துவதாக உள்ளது. (ஸஹீஹுல் புஹாரி)*

*''தேசப்பற்றும் தேசிய உணர்வும் இருப்பதால் தான் நாடுகள் வளமாகின்றன'' என உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும்.*

*நாடுகாண் பயணி இப்னு பதூதா அவர்கள் சுற்றுலாவுக்காக தாய் நாட்டை விட்டும் வெளியேறிய நிகழ்வு பற்றி குறிப்பிடும்போது, ''சகல நாடுகளையும் விட என்னிடத்தில் சிறப்புப் பொருந்திய என் நேசத்திற்குரிய தாய்நாட்டின் பிரிவை நினைத்து கவலை கொள்வதனால் எனக்கு மரணம் ஏற்பட்டு விடுமோ என எண்ணினேன்'' எனக் குறிப்பிட்டார்கள்.*

*நாட்டுப்பற்று என்பது ஒரு மனிதன் தான் பிறந்த பூமியை விரும்புவதுடன் மாத்திரம் சுருங்கிவிட மாட்டாது. அதற்கு அப்பால் அவன் தன் நாட்டு மக்களை நேசிப்பவனாக இருப்பான். நாட்டு மக்களின் நலன் கருதி அவர்களோடு இணக்கமாக வாழ்வதும் அவர்களுக்காக உழைப்பதும்தான் உண்மையான தேசப்பற்றாகும். தேசப்பற்றுள்ள ஒரு குடிமகன் நாட்டின் சுகாதாரம், கல்வி, கலாசாரம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு தன்னலம் கருதாது உழைப்பதும் ஒத்துழைப்புக்களை நல்குவதும் பாராட்டத் தக்கவையாகும்.*

*நாடு ஆபத்துக்கோ வறுமைக்கோ பஞ்சத்துக்கோ அநியாயத்துக்கோ உள்ளாகும் போது நாட்டை விட்டு ஓடாமல் உயிரைத் துச்சமாகக் கருதி அங்கேயே நிலைத்து நின்று நாட்டின் விடுதலைக்காகப் போராடுவதே உண்மையான நாட்டுப் பற்றாகும்.*

*நாட்டுப் பற்றும் இன உணர்வும் மொழி ஈடுபாடும் மனித நேயத்துக்கு முரணாகவோ, சகோதரத்துவத்துக்கோ நீதியை நிலைநாட்டுவதற்கோ தடையாக அமையக் கூடாது என்பதிலும் இஸ்லாம் கவனம் செலுத்துகின்றது.*

**''முஃமின்களே! நியாயத்தை நிலைநாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சு ங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.''** (5: 08)

*இவற்றுடன் மனிதர்களை நேசிப்பதை, நாட்டு மக்களுடன் அன்பு பாராட்டுவதை இஸ்லாம் இபாதத்தாகக் கற்பிக்கிறது.*

*நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.*

*''மண்ணிலுள்ள மனிதர்களை நேசித்தால் விண்ணில் உள்ள இறைவன் உங்களை நேசிப்பான்,'' (திர்மிதி)*

*''மனிதர்கள் மீது கருணை காட்டாதவர்களுக்கு இறைவன் கருணை காட்ட மாட்டான்'' (புஹாரி)*

இதன்படி இனம், மொழி, நிறம் போன்றவற்றால் மக்கள் வேறுபட்டாலும் நாடு என்ற வகையில் இணைந்து செயற்படுவது இன்றியமையாததாகும்.

**எனவே பரஸ்பர அன்பு, பரஸ்பர புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, பொது நலன் பேணல், விட்டுக்கொடுத்தல் போன்றவற்றை அணிகலன்களாகக் கொண்டு நாட்டுப் பற்றுடன் நாட்டு முன்னேற்றத்தில் பங்களிப்புச் செய்ய உறுதி கொள்வோம். தேசத்தின் மீது பற்றுக் கொள்வோம். தேசத்தின் வளர்ச்சிக்காக உழைப்போம்.**

**பயிற்சி**

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுக.
2. நபித்தோழர்களின் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் சம்பவம் ஒன்றைத் தருக.
3. ஒரு மனிதன் தான் வாழும் நாட்டின்மீது பற்றுக்கொள்வது யதார்த்தமானது என்பதைச் சுட்டிக்காட்டும் அல் குர்ஆன் வசனம் ஒன்றை எழுதுக.
4. நாம் இலங்கையர் என்ற வகையில் எமது தேசத்தின் மீது பற்றை எவ்வெவ் வழிமுறைகள் மூலம் வெளிப்படுத்தலாம் என்பதைக் கலந்துரையாடி எழுதுங்கள்.